1-15 டிசம்பர் 2001 ரூ. 5.00

www.padippakam.com

# புதிய ஜனநாயகம்



அமெரிக்காவின் உயிரியல் பயங்கரவாதம்




## கொள்ளை அடித்தவர்களின் "கஜானா" தாக்குதல்

www.padippakam.com




# "பொடோ"வைத் தகர்ப்போம்! — நவம்பர் புரட்சி தினத்தில் புரட்சிகர அமைப்புகள் நடத்திய ஆர்ப்பாட்டம்!

1917-ஆம் ஆண்டு நவம்பர் ஏழாம் நாள் உலகில் முதன்முறையாக பாட்டாளி வர்க்கம் ரசியாவில் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியது. அந்நாளை உலகெங்கும் உள்ள உழைக்கும் மக்களும், கம்யூனிஸ்டுகளும் புரட்சித் தினமாக கொண்டாடி வருகின்றனர்.

இந்த ஆண்டு 85-ஆவது நவம்பர் புரட்சி தினத்தில் மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் ''பொடோ'' சட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள், தெருமுனை கூட்டங்கள், பொதுக் கூட்டங்களை எழுச்சியுடன் நடத்தியுள்ளன.

✱ திருச்சியில் ஆட்டோ ஓட்டுனர்கள் பாதுகாப்பு சங்கம், பாய்லர் பிளாண்ட் ஒர்க்கர்ஸ் யூனியன், அனைத்துத் தரைக்கடை பாதுகாப்புச் சங்கம் ஆகிய அமைப்புகளோடு ம.க.இ.க.வும், பு.மா.இ.மு.வும் இணைந்து ஆர்ப்பாட்டம் நடத்தின. தெப்பக்குளம் அஞ்சல் நிலையம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தையொட்டி துண்டறிக்கை, சுவரொட்டி முதலான வடிவங்களில் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. திரளான பொதுமக்கள் கூடி நின்று ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு அளித்தனர்.

✱ சென்னையில் பு.ஜ.தொ.மு.வும், ம.க.இ.க.வும் இணைந்து சைதை கடை வீதியில் பொடோ சட்டம் எதிர்ப்புக் கூட்டம் நடத்தின. தோழர். சுப. தங்கராசு, தோழர். சீனிவாசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். சிறப்புரையின் முடிவில், கூட்டத்தில் கலந்து கொண்ட தோழர்கள் ''பொடோ''வைக் கண்டித்து எழுப்பிய முழக்கங்கள், பொதுக் கூட்டத்தை ஆர்ப்பாட்ட வடிவமாக மாற்றியமைத்தது.

✱ தஞ்சையில் முக்கிய கடைவீதிகளின் வழியே மாலையில் பொடோ எதிர்ப்புப் பேரணி நடைபெற்றது. பேரணியில், முகத்தில் கொடூர முகமூடியும் சடைமுடியும் கருப்பு உடையுமணிந்து மனித மண்டையோட்டை ஏந்திக் கொண்டு ''பொடோ கொடுங்கோலன்'' பொதுமக்களைத் துரத்துவதைப் போன்றும், அவர்கள் அதை எதிர்த்து விரட்டியடிப்பது போன்றும் காட்சிகள் நடத்திக் காட்டப்பட்டன. பேரணியின் இறுதியில் கீழவாசல் காமராசர் சிலையருகே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தோழர். காளியப்பன் சிறப்புரை ஆற்றினார்.

✱ மதுரையில் தமுக்கம் மைதானம் தபால் தந்தி அலுவலகம் முன்பாக காலை பத்து மணிக்கு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தின் போது ''பொடோ'' கொடுங்கோலன் உழைக்கும் மக்களையும், கம்யூனிஸ்டுகளையும் நசுக்குவது போல் காட்சிகள் நடத்திக் காட்டப்பட்டன. இக்காட்சி மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றது.

✱ கோவையில் கணபதி பேருந்து நிலையத்தில் ம.க.இ.க.வும், பு.ஜ.தொ.பி. குழுவும் இணைந்து ஆர்ப்பாட்டம் நடத்தின. மாலை 5.00 மணி முதல் 6.00 மணிவரை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தையொட்டி துண்டறிக்கை, சுவரொட்டி முதலான வடிவங்களில் வீச்சாகப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. ஆர்ப்பாட்டம் ''பொடோ''வின் உண்மையான முகத்தை உழைக்கும் மக்களிடையே அம்பலப்படுத்தும் விதத்தில் அமைந்தது.

✱ வேலூரில் தலைமை அஞ்சல் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு முன் இரு நாட்களில் தெருமுனைக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. பொடோ சட்டத்தை எதிர்த்து சிறுவர்களும் முழக்கமிட்டது மக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. மாலையில் நவம்பர் புரட்சி தின விழா உழைக்கும் மக்களுக்கு இனிப்புகள் வழங்கிக் கொண்டாடப்பட்டது

✱ விழுப்புரத்தில் நாடு மறுகாலனியாவதையும், இந்துமதவெறி பாசிசத்தையும் எதிர்த்துப் போராடும் உழைக்கும் மக்களை ஒடுக்க வரும் ''பொடோ'' சட்டத்தை எதிர்த்து ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. 1,000-க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்ட பேரணி, சவீதா பேருந்து நிறுத்தத்தில் இருந்து புறப்பட்டு, நகரின் முக்கிய வீதிவழியாக, பழைய பேருந்து நிலையத்தில் முடிவடைந்தது.

ஊர்வலத்தின் முடிவில் பேருந்து நிலையம் எதிரில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இப்பொதுகூட்டத்திற்கு வி.வி.மு.வைச் சேர்ந்த தோழர் அம்பிகாவதி தலைமையேற்றார். தோழர்கள் அம்பிகாபதி, பாட்ஷா ஆகியோர் தொடக்க உரையாற்றினார்கள். உலகத்தின் முதல் பயங்கரவாதி அமெரிக்காவே என்பதையும், நாடு மறுகாலனியாக்கப்படுவதை எதிர்த்த போராட்டங்களை ஒடுக்கவே ''பொடோ'' சட்டம் கொண்டு வரப்படுகிறது என்பதையும் விளக்கி பு.ஜ.தொ.மு.வைச் சேர்ந்த தோழர். லோகநாதன் சிறப்புரையாற்றினார். பொதுக்கூட்டத்தின் முடிவில் ம.க.இ.க. மையக் கலைக்குழுவினரின் புரட்சிகர நிகழ்ச்சி நடைபெற்றது. பொதுக் கூட்டமும், கலை நிகழ்ச்சியும் முடியும் வரை இருந்து பார்த்த 2500-க்கும் மேற்பட்ட பொதுமக்களிடம், இப்புரட்சிகரப் போரில் உழைக்கும் மக்கள் ஒவ்வொருவரும் பங்கேற்பது அவர்களின் கடமை என்பதை வலியுறுத்துவதாக இந்த நிகழ்ச்சி அமைந்தது.





படிப்பகம்

www.padippakam.com

**புதிய ஜனநாயகம்**

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 17

**இதழ் 1—2**

16 நவ. - 15 டிச. 2001

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$.18

மின் அஞ்சல் முகவரி:
puthiyajananayagam@hotmail.com

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.

# ஜெயலலிதா பினாமி அரசின் பகற்கொள்ளை

தமிழ்நாட்டு ஏழை - எளிய, நடுத்தர மக்கள் மீது பொருளாதார ரீதியிலானதொரு பயங்கரவாதத் தாக்குதலை பாசிச ஜெயலலிதாவின் பினாமி அரசு நடத்தியிருக்கிறது. காலனிய ஆக்கிரமிப்பாளர்கள்தாம் இத்தகைய கொடிய பகற்கொள்ளையை நடத்தியிருக்கிறார்கள். அதன்பின் எந்தவொரு மைய, மாநில அரசுகளும் இப்படி அதிரடியான பெருந் தாக்குதலை நடத்தியதில்லை. பேருந்து - மின் கட்டணங்களைக் கிடுகிடுவென உயர்த்தியிருக்கிறது; அரிசி - சர்க்கரை - பால் விலைகளைக் கடுமையாக ஏற்றியிருக்கிறது; சமையல் எண்ணெய் மற்றும் பனியன் உள்ளிட்ட உள்ளாடைகளுக்குக் கூடுதலான வரி விதித்திருக்கிறது. அரசு மருத்துவமனைகளில் பார்வையாளர்களுக்கு நுழைவுக் கட்டணம், நோயாளிகளுக்குச் சிகிச்சைக் கட்டணம்; உயர்கல்விக் கட்டண உயர்வு என்று சகட்டு மேனிக்கு மக்கள் மீது சுமையேற்றியிருக்கிறது.

அரசு வருவாயைப் பெருக்குவது என்கிற பெயரில் மக்களுடைய கோவணத்தைப் பிடுங்காத குறையாகக் கொள்ளையடிப்பதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது. எஞ்சும் கோவணமும் விரைவிலேயே பிடுங்கப்படும் அச்சுறுத்தலும் நிலவுகிறது. ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தால் பணப்புழக்கம் பெருகும் என்றார்கள். எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா படங்களில் வரும் கனவுக் காட்சிகளைப் போலத் தமிழக மக்களின் கைக்கும் பைக்கும் அடங்காத அளவு பணப் புழக்கம் பெருகிவிட்டதாகக் கற்பனை செய்து கொண்டு, அதை பிடுங்கப் புறப்பட்டு விட்டார்களா? ஆனால், புயலுக்கும் - பூகம்பத்திற்கும் பலியாவதைப் போல, ஜெயலலிதாவின் பினாமி அரசின் இந்தத் தாக்குதலால் பல குடும்பங்கள் தற்கொலைக்குப் பலியாவார்கள் என்பது மட்டும் நிச்சயம்.

வருவாயைப் பெருக்குவதோடு, சிக்கனச் சீரமைப்பு என்கிற பெயரில் போக்குவரத்து, மின்துறை உட்பட அரசின் பல துறைகளிலும் ஆட்குறைப்பு - வெளியேற்றத்தையும், வேலை நியமனங்களுக்குத் தடையும் விதித்துள்ளது. அரசு ஊழியர்களுக்கு வைப்பு நிதி முடக்கம் போன்று பல வசதிகளை இரத்து செய்யவும் உத்தரவு போடப்பட்டுள்ளது. கூடவே, ஜெயா - சசி கும்பலின் வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்காகப் போக்குவரத்தைத் தனியார்மயமாக்குவது, அரசு மருத்துவக் கல்லூரி இடங்களை வெளிநாட்டில் வாழும் இந்தியர்களுக்கு விற்பது போன்ற முடிவுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. ஒரு பேருந்து வழித்தடத்தை ஒரு கோடி ரூபாய் அளவு விலை பேசி விற்பதற்கான ஏற்பாடுகள் நடப்பதில் இருந்து ஜெயா-சசி கும்பல் எவ்வளவு கொள்ளையடிக்கும் என்பது விளங்கும்.

பாசிச கொடுங்கோலர்கள்தாம் இப்படிச் செய்வார்கள். சமாதானமும் அகிம்சையும் பேசுவார்கள்; அதற்கு மாறாக யுத்தவெறிக் கொலைகளும் வக்கிரமான மனித வதைகளும் செய்வார்கள். அப்படித்தான் ஆளும் ஜெயலலிதா கும்பலும் செய்கிறது. அது ஒரு ஜனநாயக அரசியல் கட்சியே கிடையாது. ஒரு பாசிச - கிரிமினல் கும்பலின் தலைமையிலான பிழைப்புவாத - பொறுக்கி அரசியல் கூட்டம். ஏற்கனவே, அதன் இலஞ்ச ஊழல், உல்லாச - ஊதாரித்தனங்களைக் கண்டுதான் மக்கள் ஆட்சியிலிருந்து விரட்டினர். அதுவோ, இலவசத் திட்டங்கள் என்கிற தேனில் பொய்கள், அவதூறுகள், மாய்மாலங்கள் என்கிற நஞ்சு கலந்து உதிரி உழைப்பாளி மக்களை ஏய்த்து, மீண்டும் ஆட்சியைப் பிடித்தது. இப்போது அந்த பாசிச - கிரிமினல் கும்பல் ஆட்சியைப் பிடிக்க வாக்களித்த மக்களை முதுகிலும், தடையாக இருந்த எதிர்த்தரப்பை நெஞ்சிலும் குத்துகிறது.

ஜெயலலிதாவின் பினாமி அரசு மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கைகளை அப்பட்டமாக வரவேற்றுள்ள வீரமணி, ஜெக வீரபாண்டியன் போன்ற அதன் எடுபிடிகளைக் கூட மன்னித்துவிடலாம். இந்த அரசு அமைவதற்குத் தோள்கொடுத்த போலி கம்யூனிஸ்டுகள், காங்கிரசு, த.மா.கா., மற்றும் இராமதாசு - வாழப்பாடி போன்ற பிழைப்புவாதிகள் அதற்கான பொறுப்பேற்காமல், எதிர்ப்பதைப் போல பம்மாத்துச் செய்வதை மன்னிக்கவே முடியாது.

உலக வங்கி, ஐ.எம்.எஃப்., உலக வர்த்தக நிறுவனம் ஆகிய ஏகாதிபத்திய மேலாதிக்கவாதிகளின் கட்டளைகளை ஏற்று உலகமயம், தனியார்மயம், தாராளமயம் என்கிற புதிய பொருளாதார சீர்திருத்தம், சீரமைப்புக் கொள்கை புகுத்தப்பட்டதில் இருந்து மத்தியிலும் மாநிலங்களிலும் ஆளும் கட்சிகள் எதுவானாலும், அவை உழைக்கும் மக்கள் மீது கடுமையான பொருளாதாரத் தாக்குதல்களைத் தொடுக்கின்றன. இப்போது ஜெயாவின் பினாமி அரசு தனது சுயநல வெறியையும் சேர்த்து உச்சபட்சமான, அதிரடி, பயங்கரத் தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. இதை எதிர்ப்பதாகக் கூறும் தி.மு.க. மற்றும் போலி கம்யூனிஸ்டுகளும் கூட வெறும் கண்துடைப்பு, பித்தலாட்டம் தான் செய்கின்றனர்.

அரசின் பொருளாதார சிக்கன நடவடிக்கைகள் என்று சொல்லிக் கொண்டு பிற துறைகளில் ஆட்குறைப்பு செய்கிற போதிலும் போலீசு, இராணுவம், துணை இராணுவ ஆளெடுப்பு; அதற்கான செலவுகள் அதிகமாக்கப்படுகிறது. மக்களின் சாதாரண எதிர்ப்பைக் கூட ஒடுக்குவதற்குத்தான் இந்த ஏற்பாடு. ஆகவே, வழக்கமான கண்டனங்கள், அறப் போராட்டங்கள் போன்ற கையாலாகாத வழிமுறைகளால் இத்தகைய பயங்கரத் தாக்குதலை முறியடிக்க முடியாது. திட்டமிட்ட முறையில் அமைப்பு ரீதியில் திரண்டு அரசின் புதிய கட்டண அதிகரிப்பு, விலையேற்றம், வரி விதிப்புகளை ஏற்க மறுத்து எதிர்த்தாக்குதல் தொடுப்பதுதான் ஜெயாவின் பினாமி அரசை பின்வாங்கச் செய்யும்.

www.padippakam.com

# போக்குவரத்துத் தொழிலாளர் போராட்டம்
# வயிற்றிலடித்தது தமிழக அரசு முதுகில் குத்தியது தொழிற்சங்கம்

இருபது சதவீத போனசு கேட்டு அரசு போக்குவரத்துத் தொழிலாளர்கள் 17 நாட்களாக நடத்திய வேலை நிறுத்தப் போராட்டம், அந்தக் கோரிக்கை நிறைவேறாமலேயே திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. ''இந்தப் போராட்டத்தின் மூலம் நாம் ஏற்கனவே பெற்று வந்த போனசு ரூ. 2500/- உடனடியாகவும், கருணைத் தொகையான ரூ. 3500/-ஐ வேறு பெயரில் தமிழ் வருடப் பிறப்பிற்குள்ளும் வழங்க வேண்டும் என அரசை ஏற்க வைத்துள்ளோம். நமது போராட்டத்திற்கான நியாயங்கள் நிலைநாட்டப்பட்டு விட்டன. இது மகத்தான வெற்றியாகும்'' என இவ்வேலை நிறுத்தத்தைத் தலைமையேற்று நடத்திய தொழிற்சங்கங்களின் போராட்டக் குழு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

ஆனால், இத்தீர்மானத்திற்கு நேர்மாறாக தமிழக அரசின் போக்குவரத்துத் துறை அமைச்சர், ''8.33 சதவீத போனசு தொகை (ரூ. 2500/-) வழங்கப்படும்; அதற்கு மேல் எதுவும் கொடுப்பதாக எந்த உறுதியும் வழங்கவில்லை'' எனக் கூறியிருக்கிறார்.

தொழிற்சங்கங்கள், ''வேலை நிறுத்தப் போராட்டம் நடந்த 17 நாட்களின் சம்பளத்தைப் பிடிக்கக்கூடாது'' எனக் கோருகின்றன. ஆனால், தமிழக அரசோ, ''வேலைக்கு வராத நாட்களுக்கு சம்பளம் கிடையாது'' எனக் கூறி, தொழிற்சங்கங்களின் கோரிக்கையை மறுத்துவிட்டது. மேலும், ''ஷோ-காஸ் நோட்டீஸ் வழங்கப்பட்ட 20,000 தொழிலாளர்களின் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றும் தமிழக அரசு மிரட்டி வருகிறது.

கடந்த மூன்றாண்டுகளாக போக்குவரத்துத் தொழிலாளர்கள் பெற்று வந்த 20 சதவீத போனசு தட்டி பறிக்கப்பட்டு விட்டது. இலாபம் வந்தால் தொழிலாளர்களுக்கு 20 சதவீத போனசு வழங்குவோம் என அரசு கூறுவது, இன்று ரொக்கம் நாளை கடன் என்ற ஏமாற்றுவித்தைதான். மேலும், வேலை நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட தொழிலாளர்களின் சம்பளம் வெட்டப்படும், அவர்கள் மீது பழிவாங்கும் நடவடிக்கை எடுக்கப்படும் அபாயம் நிலவுகிறது - இவையனைத்தும் வேலை நிறுத்தப் போராட்டம் தோல்வியடைந்து விட்டதை வெளிப்படையாகவே காட்டுகின்றன. ஆனால், தொழிற்சங்கங்களோ நாணயமும், நேர்மையும் இன்றி, ''போராட்டம் மாபெரும் வெற்றி'' என அறிவித்துத் தொழிலாளர்களை ஏமாற்றுகின்றன.

***

''போக்குவரத்துத் தொழிலாளி நடத்திய போராட்டம் தோற்றுப் போனதாலோ, இல்லை, அதற்கு மாறாக வெற்றியடைந்திருந்தாலோ, எனக்கென்ன ஆகப் போகிறது?'' என நாம் இந்தப் பிரச்சினையில் இருந்து ஒதுங்கிப் போய்விட முடியாது. பேருந்து போக்குவரத்து என்பது 90 சதவீத மக்களின் வாழ்க்கை ஓட்டத்திற்கு அத்தியாவசியத் தேவையாக இருப்பதால், இந்தத் துறை குறித்து அரசு எடுக்கும் முடிவுகள், போக்குவரத்துத் தொழிலாளிக்கு மட்டுமல்ல, சாதாரண பொதுமக்களுக்கும் அக்கறைக்குரிய ஒன்றாகும்!

''கடந்த பத்தாண்டுகளில் அரசு போக்குவரத்துக் கழகங்களில் 2,035 கோடி ரூபாய் நட்டமேற்பட்டுள்ளது. வாங்கிய கடனுக்குக் கட்ட வேண்டிய வட்டிப் பணம் 308 கோடி ரூபாயைக் கட்டப் போக்குவரத்துக் கழகங்களிடம் காசில்லை. உதிரி பாகங்கள் கூட வாங்கப் பணமில்லாததால், 812 பேருந்துகள் ஓடாமல் நின்றுவிட்டன. காயலாங்கடைக்குப் போக வேண்டிய நிலையில் உள்ள 4962 பேருந்துகளுக்குப் பதிலாகப் புதிய பேருந்துகள் வாங்கவும் பணம் கிடையாது. இந்த நிலையில் எப்படி 20 சதவீத போனசு வழங்க முடியும்?'' என்பதுதான் அரசின் வாதம்.

இருபது சதவீத போனசு தர முடியாது என்பதற்கு மட்டுமல்ல; பேருந்துக் கட்டணத்தை உயர்த்த வேண்டும்; பேருந்து சேவையைத் தனியார்மயமாக்க வேண்டும் எனத் தூபம் போடுவதற்கும் கூட நட்டம்தான் காரணமாகக் கூறப்படுகிறது.

இந்த நட்டம் குறித்தும், தொழிலாளர் தரப்பின் போராட்டக் கோரிக்கைகள் குறித்தும் இவ்வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தலைமையேற்று நடத்திய சி.பி.எம்.இன் சி.ஐ.டி.யு., சி.பி.ஐ.இன் ஏ.ஐ.டி.யு.சி., தி.மு.க.வின் தொ.மு.ச. தொழிற்சங்கத் தலைவர்களிடம் பேசிய பொழுது, பேருந்துத் தொழிலாளர்களுக்கு 20 சதவீத போனசு வழங்க முடியாது என்பதற்கு மட்டுமல்ல, அரசு போக்குவரத்துக் கழகங்கள் நட்டத்தில் இயங்குவதாகக் கூறுவதற்குக்கூட எந்தவிதமான அடிப்படையும் கிடையாது என்ற முடிவுக்கு வர முடிந்தது.

அரசு போக்குவரத்துக் கழகங்களிடம் உள்ள 15,000 கோடி ரூபாய் பெறுமான சொத்துக்களையும், இலாபகரமான வழித்தடங்களையும் அப்படியே தனியாருக்கு வாரிக் கொடுத்துவிட வேண்டும் என்பதற்காகவே, தமிழக அரசால், ''நட்டம்; பணமில்லை'' என்ற சதி வலை பின்னப்படுகிறது.

### நட்டத்திற்குக் காரணம் தொழிலாளர்களா?

அரசு போக்குவரத்துக் கழகங்களில் ஏற்படுவதாகக் கூறப்படும் நட்டத்திற்கான முதல் பழியைத் தொழிலாளர்களின் தலை மீது சுமத்திவிடப் பார்க்கிறது தமிழக அரசு. அரசு போக்குவரத்துக் கழகங்களில் தேவைக்கு அதிகமாகத் தொழிலாளர்கள் இருப்பதாகவும், போக்குவரத்துக் கழகங்களின் வருமானத்தில் 51 சதவீதம் தொழிலாளர்களின் சம்பளத்திற்கே போய் விடுவதாகவும் தமிழக அரசு கூறி வருகிறது.

தமிழகத்திலுள்ள 19 அரசு பேருந்து கழகங்களில் ஏறத்தாழ 17,000 பேருந்துகள் ஓடுகின்றன. ஒரு பேருந்தை இயக்குவதற்கும், பராமரிப்பதற்கும் குறைந்த பட்சம் 6 1/2 தொழிலாளர்கள் வேண்டுமென்பதை அரசே ஆய்வு செய்து ஏற்றுக் கொண்டுள்ளது. இந்தப் புள்ளியியல் கணக்கின் அடிப்படையில்தான் அரசு போக்குவரத்துக் கழகங்களில் ஏறத்தாழ 1,15,000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்களே தவிர, போக்குவரத்துக் கழகங்கள் ஓட்டுக்கட்சிகளின் மந்திரிசபையைப் போல வீணாக ஊதிப் பெருக்கப்படவுமில்லை; தொழிலாளர்கள் அ.தி.மு.க. மந்திரிகளைப் போல வெட்டியாகக் குப்பை கொட்டிக் கொண்டிருக்கவுமில்லை.

''வரவு வருமானத்தில் பாதி சம்பளத்திற்கே போய் விட்டால், போக்குவரத்துக் கழகங்களை எப்படி இலாபத்தில் இயக்க முடியும்?'' என்பது அரசின் அடுத்த குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டிற்கு அரசு எந்த ஆதாரத்தையும் முன் வைக்கவில்லை. அப்படியே இதை உண்மையாக எடுத்துக் கொண்டாலும், 19 போக்குவரத்துக் கழகங்களிலும் சேரை உட்கார்ந்து துடைத்துவிட்டு எழுந்து போகும் நிர்வாக அதிகாரிகள், சம்பளம், சலுகைகள் என்று தின்று தீர்த்தது போக, தொழிலாளர்களின் கைக்குக் கிடைப்பது ''உமி''யாகத் தான் இருக்க முடியும்.

''என்ன இருந்தாலும், தனியார் பேருந்து தொழிலாளர்களை விட, இவர்களுக்கு சம்பளமும், சலுகைகளும் அதிகம்''

www.padippakam.com

என அரசுக்கு வயிறு எரியலாம். உண்மைதான். தனியார் பேருந்து தொழிலாளர்களுக்குச் சம்பளம் மட்டுமா, குறைவு? அவர்களுக்கு வேலை உத்தரவாதம் கிடையாது; விடுப்பு, சேமநல நிதி போன்ற சலுகைகள் கூட அவர்களுக்குக் கொடுக்கப்படுவது கிடையாது;

தனியார் பேருந்து முதலாளிகளின் லாப-நட்டக் கணக்கை மட்டும் பார்க்கும் அரசு, அந்தத் தொழிலாளர்களின் அவலமான வாழ்க்கையைப் பார்ப்பதில்லை. ''மக்களாட்சி'' என்று கூறிக் கொள்ளும் அரசு, தனியார் பேருந்து முதலாளிகளை ''உன் தொழிலாளர்களுக்குச் சட்டப்பூர்வமான அனைத்துச் சலுகைகளைக் கொடுக்கப் போகிறாயா? இல்லை, உன் ரூட் 'பெர்மிட்டைப் பிடுங்கட்டுமா?'' என மிரட்டுவதற்குப் பதிலாக, அரசு பேருந்து தொழிலாளர்கள் போராடி பெற்ற சலுகைகளைப் பிடுங்க முயலுகிறது.

கொள்ளைக்காரி ஜெயா, தனது பதவி பறிபோவதற்குக் கொஞ்ச நாள் முன்பு, ''அரசின் வருமானத்தில் 94 சதவீதம் அரசு ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியத்திற்கே போய் விடுவதாக''ப் புலம்பினார். ஆனால், ''தமிழக அரசின் மொத்த வருமானத்தில் 51.3 சதவீதம்தான் அரசு ஊழியர்களின் சம்பளத்திற்கும், ஓய்வூதியத்திற்கும் செலவழிக்கப்படுகிறது'' என்பதை தமிழகப் பணியாளர் சங்கமும், பாட்டாளி மக்கள் கட்சியும் குறிப்பிட்டு, ஜெயாவின் அவதூறை அம்பலப்படுத்தின. இதை வைத்துப் பார்க்கும் பொழுது, போக்குவரத்துக் கழக வருமானத்தில் 51 சதவீதம் தொழிலாளர்களின் சம்பளத்திற்கே போய் விடுகிறது என்பதும் அரசின் திட்டமிட்ட பொய்ப் பிரச்சாரமாகவே இருக்க வாய்ப்புண்டு.

### இலவச பாஸ் வழங்குவதால் நட்டமா?

மாணவர்களுக்கு இலவச பாஸ் வழங்கும் திட்டத்தாலும் போக்குவரத்துக் கழகங்கள் நட்டமடைகின்றன என்பது இன்னொரு குற்றச்சாட்டு.

இது போன்ற சமூக சேவைகளில் போக்குவரத்துக் கழகங்கள் ஈடுபட வேண்டும் என்பதை அரசே முடிவெடுத்து நடைமுறைப்படுத்தக் கூறுகிறது. இது போன்று உத்தரவு போட்டு தனியார் பேருந்து முதலாளிகளை சமூக சேவை செய்ய வைக்க முடியாது.

மாணவர்களுக்கு இலவச பாஸ் வழங்குவதால் போக்குவரத்துக் கழகங்களுக்கு நட்டமேற்படுகிறது என்றால், அந்த நட்டத்தை அரசுதான் மானியம் கொடுத்து ஈடுகட்ட வேண்டும். அதைவிட்டுவிட்டு, இந்த நட்டத்தைக் காட்டித் தொழிலாளியின் தலையில் மிளகாய் அரைக்கப் பார்க்கிறது.

''இப்படி மானியம் கொடுத்துக் கொடுத்தேதான் அரசு கஜானா காலியாகி விட்டது'' எனச் சிலர் குற்றப்பத்திரிகை வாசிக்கலாம்.



பேரணி நடத்தத் தடை; தடையை மீறினால் கைது - போக்குவரத்துத் தொழிலாளர்களின் மீது அரசு ஏவிவிட்ட அடக்குமுறை.

அரசு அதிகாரிகளுக்கு அரசு வேலைகளை மட்டும் பார்ப்பதற்காக ஒதுக்கப்பட்ட கார்களையும் ஜீப்களையும் அதிகாரிகளின் குடும்பம் தங்கள் விருப்பம் போல் சொந்த வேலைக்குப் பயன்படுத்துவதையும்; ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகளின், மந்திரிகளின் வைப்பாட்டி குடும்பங்களுக்குக் கூடத் தனித்தனியாக அரசு கார்கள் ஓடுவதையும் ஒப்பிடும்பொழுது, மாணவர்களுக்கு இலவச பாஸ் வழங்குவது ஊதாரித்தனமான செலவு கிடையாது.

''இலவச பாஸ் வழங்குவதால் நட்டமேற்படுகிறது; அதனால் போனஸ் கொடுக்க முடியாது'' என அரசு கூறுவதன் மூலம், போராடும் தொழிலாளர்களுக்கும், பொது மக்களுக்கும் இடையே முரண்பாட்டை, மோதலைத் தூண்டிவிடப் பார்க்கிறது.

### கட்டணம் குறைவா?

''மற்ற மாநிலங்களை ஒப்பிடும் பொழுது தமிழகத்தில் பேருந்துக் கட்டணம் குறைவு; அதனாலும் போக்குவரத்துக் கழகங்கள் நட்டமடைகின்றன'' என்பது அரசின் இன்னொரு வாதம். ஆம்னி பஸ்கள் தவிர, பல்வேறு வழித்தடங்களில் ஓடும் தனியார் பேருந்துகளும் அரசு நிர்ணயித்துள்ள கட்டணத்தின்படிதான் இயக்கப்படுகின்றன. அரசு நிர்ணயித்துள்ள கட்டணம் குறைவென்றால், தனியார் முதலாளிகள் இந்நேரம் தங்கள் கம்பெனிகளை காலி செய்திருப்பார்கள். ஆனால், அதற்கு மாறாக, தினுசு தினுசாக பேருந்துகளை இறக்கி விடுகிறார்கள். எனவே, மற்ற மாநிலங்களுக்கு இணையாக இங்கேயும் பேருந்துக் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்பது அரசும், அதன் துணையோடு தனியார் பேருந்து முதலாளிகளும் இன்னும் இலாபத்தை மூட்டை கட்ட வேண்டும் என்பது தவிர வேறில்லை.

### அரசு சொத்தைத் தின்னும் பெருச்சாளிகள்

அரசு போக்குவரத்துக் கழகங்கள் நட்டத்தில் இயங்குகின்றன எனக் காட்டுவதற்காகவே இப்படி இட்டுக் கட்டிப் பல காரணங்களைக் கூறும் தமிழக அரசு, போக்குவரத்துக் கழகங்களின் வருமானத்தைப் பெருச்சாளிகளைப் போல தின்று தீர்க்கும் அதிகார வர்க்கத்தையும் அவர்கள் நடத்தும் ஊழல் - கொள்ளையையும் பற்றி வாயே திறப்பதில்லை.

ஓட்டுக்கட்சிகள் சாதி ஓட்டுக்களைப் பொறுக்குவதற்காகவும், தங்களுக்கு வேண்டியவர்களை அதிகாரிகளாகத் திணித்துக் கொள்ளையடிப்பதற்கும் வசதியாகத்தான் சாதித் தலைவர்களின் பெயரில் பல போக்குவரத்துக் கழகங்களை உருவாக்கினார்கள். ஒவ்வொரு முறையும் போக்குவரத்துக் கழகங்கள் பிரிக்கப்பட்ட பொழுதெல்லாம் நிர்வாக அதிகாரிகளின் எண்ணிக்கைதான் ஒண்ணுக்குப் பத்தாக பெருகியதே தவிர, அதனால் பேருந்துகளின் எண்ணிக்கையோ, தொழிலாளர்களின் எண்ணிக்கையோ, வருமானமோ உயரவில்லை; நிர்வாக வசதிக்குப் பதிலாக நிர்வாகச் சுமைதான் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்பட்டது. போராடும் தொழிற்சங்கங்கள், ''இன்றுள்ள 19 போக்குவரத்துக் கழகங்களையும் ஒரே கழகமாக மாற்றியமைத்து, சில நிர்வாகச் சீர்திருத்தங்களைச் செய்தாலே 200 கோடி ரூபாய் மிச்சப்படுத்தலாம்'' எனக் குறிப்பிடுகின்றன.

போக்குவரத்துக் கழகங்களில் நடந்து வரும் ஊழலுக்கும், கொள்ளைக்கும்,



படிப்பகம்

www.padippakam.com

பேருந்து தொழிலாளர்களுக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது. ஏனென்றால், பேருந்து ஓட்டுநருக்கோ, நடத்துனருக்கோ, மெக்கானிக்குக்கோ, அரசு அதிகாரிகளைப் போல மேஜைக்கு அடியில் கைநீட்டி இலஞ்சம் வாங்கும் அளவிற்கு எந்தவிதமான அதிகாரமும் கிடையாது. மற்ற துறைகளில் நடக்கும் ஊழலைப் போல அல்லாமல், போக்குவரத்துக் கழகங்களில் நடக்கும் ஊழல் மக்களின் உயிரோடு விளையாடுவதாகும்.

போக்குவரத்துக் கழகங்களில் புதிய பேருந்துகளை வாங்கும்பொழுதே ''கமிசன்'' என்ற பெயரில் ஊழல் தொடங்கி விடுகிறது. அதன் பின்னர், பேருந்துக்குத் தேவையான உதிரி பாகங்கள் வாங்குவதில்; பேருந்து டயர்களை ''ரீடிரெடிங்'' செய்வதில், பயணச் சீட்டு அச்சடிப்பதில் என ஊழல் அனுமார் வால் போல நீளுகிறது. கடந்த அ.தி.மு.க. கால ஆட்சியில் மட்டும் 400 கோடி ரூபாய்க்கு ஊழல் நடந்திருப்பது அம்பலமானது.

வருமானம் அதிகம் தரக்கூடிய வழித்தடங்களையும், பயணிகள் கூட்டம் அதிகமாக இருக்கும் நேரத்தையும் தனியார் பேருந்து முதலாளிகளுக்குத் தாரை வார்த்து விடும் ''ரூட் - பெர்மிட்'' ஊழல்தான், போக்குவரத்துக் கழகங்களில் நடக்கும் ஊழல்களிலேயே மிகவும் அபாயகரமானது. அரசு போக்குவரத்துக் கழகங்களை நட்டத்தில் தள்ள வேண்டும் என்ற நரித்தனத்தோடு நடந்து வரும் ஊழல் இது. இந்த ஊழலுக்கு ஆதாரமாக இருப்பவர்கள் போக்குவரத்துக் கழக நிர்வாகிகள், சாலை போக்குவரத்து அதிகாரிகள்; இந்த ஊழலால் ஆதாயமடைபவர்கள் தனியார் பேருந்து முதலாளிகள்.

இந்த ஊழலையும், கொள்ளையையும் தடுக்க முடியாத அரசு, ''நட்டம்'' என்று இட்டுக் கட்டிக் கூறி தொழிலாளர்களின் வயிற்றில் அடிக்கப் பார்க்கிறது; பேருந்துக் கட்டணத்தை மேலும் உயர்த்தி மக்களையும் கொள்ளையிடத் துடிக்கிறது.

## அரசுப் பேருந்தின் சேவை - தனியாரின் கொள்ளை

அரசு பேருந்துகள் சாலை வசதியே இல்லாத அல்லது மோசமான சாலைகளைக் கொண்ட குறைந்த வருமானமே தரும் கிராமப்புறத் தடங்களில்கூட ஓடுகின்றன. போக்குவரத்துக் கழகங்கள் நட்டம் வருமென்று தெரிந்தும், கிட்டத்தட்ட 10,000 பேருந்துகளை மக்கள் வசதிக்காக இயக்கிக் கொண்டிருப்பதாகப் போராடும் தொழிலாளர்கள் கூறுகிறார்கள்.

தனியாரைப் பொருத்தவரையில் அவர்கள் இலாபம் தரும் தடங்களில் மட்டும்தான் பேருந்தை இயக்குகிறார்கள். கிராமப்புறத் தடங்களில் மட்டும் ஓட வேண்டும் என்ற நிபந்தனையோடு அனுமதிக்கப்பட்ட ''மினி பஸ்கள்'' கூட, ''கள்ளத்தனமாக வருமானம் வரும் தடங்களில் ஓடுவதையும்'', ''ஒரு டிரிப்பில் கலெக்ஷன் குறைவாக இருந்தால், தனியார் முதலாளிகள் அடுத்தடுத்த டிரிப்புகளை ரத்து செய்துவிடுவார்கள். இது போன்ற மோசடியெல்லாம் அரசு பேருந்துகளில் நடப்பதில்லை'' எனவும் தொழிலாளர்கள் குறிப்பிடுகிறார்கள்,

தனியாரின் இலாபத்தையும், அரசு பேருந்துகளின் 'நட்டத்தையும்' மட்டும் ஒப்பிடும் பேர்வழிகள், இரண்டிற்கும் இடையே உள்ள இந்த பாரபட்சமான வர்த்தக நடைமுறையைக் கணக்கில் எடுப்பதில்லை. தமிழக அரசுகூட இதற்காக அரசு பேருந்துகளுக்குத் தனிச் சலுகை எதுவும் காட்டுவதில்லை.

மக்கள் வசதிக்காக வருவாய் குறைவான வழித் தடங்களில் ஓடும் அரசு பேருந்துகளுக்கும், இலாபம் தரும் தடங்களில் மட்டுமே ஓடும் தனியார் பேருந்துகளுக்கும் ஒரேவிதமாகத்தான் சாலை வரி விதிக்கப்படுகிறது. இதனால் அரசு பேருந்துகளுக்கும் ஏற்படும் வருமான இழப்பை ஈடுகட்ட அரசு பெரிய அளவில் மானியம் தருவதில்லை என்பதோடு, அரசு பேருந்து கழகங்களுக்குத் தனது சொந்த நிதியில் இருந்து அரசு கடன்கூடக் கொடுப்பதில்லை. போக்குவரத்துக் கழகங்கள் வெளி நிறுவனங்களிடமிருந்து கடன் வாங்கி, பேருந்துகளை இயக்கி, அசலையும், வட்டியையும் திருப்பிச் செலுத்தி, வருவாய் ஈட்டுகின்றன. போக்குவரத்துக் கழகங்களின் வருவாயில் கணிசமான பகுதியை, வெளி நிறுவனங்களின் கடனுக்குத் தரப்படும் வட்டி தின்று தீர்த்து விடுகிறது.

அரசு போக்குவரத்துக் கழகங்கள் உருவாக்கப்பட்ட பொழுது, 100 கோடிக்கும் கீழிலிருந்த கழகங்களின் மூலதனம், 1997-98-ல் 1125 கோடி ரூபாயாக அதிகரித்திருக்கிறது. அன்று 2000 பேருந்துகள் மட்டுமே இருந்த போக்குவரத்துக் கழகங்களிடம் இன்று 17000 பேருந்துகள் ஓடுகின்றன. அன்று 40 பணிமனைகளோடு துவங்கப்பட்ட கழகங்களிடம் இன்று 15,000 கோடி ரூபாய் பெறுமான 320 பணிமனைகள், அலுவலகங்கள், நிலபுலன்கள் சொந்தமாக உள்ளன.

போக்குவரத்துக் கழகங்கள் கடந்த இருபத்தெட்டு ஆண்டுகளில் தமிழக அரசிற்கு 2500 கோடி ரூபாய்க்கு மேல் வரியாக, வட்டியாக, இலாபமாகச் செலுத்தியுள்ளன. கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளில் போக்குவரத்துக் கழகங்கள் மாணவர்களுக்கு ''பஸ் பாஸ்'' வழங்கிய சேவையின் மதிப்பு மட்டும் 1000 கோடி ரூபாய். கடந்த பத்தாண்டுகளில் போக்குவரத்துக் கழகங்கள் 2,035 கோடி ரூபாய் நட்டமடைந்து விட்டதாகப் புலம்புகிறார்கள். ஆனால், இந்தப் பிரம்மாண்டமான வளர்ச்சியை மட்டும் கமுக்கமாக அமுக்கி விடுகிறார்கள்!

### நட்டம் பற்றி பொதுவிவாதம் நடத்து

பெரும்பாலான பேருந்துகள் பிதுங்கி வழிந்து கொண்டு ஓடும்பொழுது, காயலாங்கடைக்குப் போக வேண்டிய பேருந்துகள்கூட ஒவ்வொரு நாளும் அரசுக்கு நூற்றுக்கணக்கில் ஆயிரக்கணக்கில் சம்பாதித்துக் கொடுத்துக் கொண்டிருக்கும் பொழுது, அரசு ''நட்டம்'' என ஒரே வரியில் அடித்துச் சொல்வதை ஏற்றுக் கொள்வதற்கு நாமொன்றும் காதில் பூ சுற்றிக் கொண்டிருக்கவில்லை! 5,000 கோடி ரூபாய் பெறுமான பொதுத்துறை நிறுவனமான ''பால்கோ''வை 332 கோடி ரூபாய்க்கு விற்றாலே இலாபம்தான் என்று கணக்குக் காட்டிய பேர்வழிகள், நட்டக் கணக்குக் காட்டுவதை நாம் ஏன் ஒப்புக் கொள்ள வேண்டும்?

எனவே, போக்குவரத்துக் கழகங்கள் கடந்த பத்தாண்டுகளில் 2,035 கோடி ரூபாய் அளவிற்கு நட்டமடைந்து விட்டது என அரசு பத்திரிகை செய்தி கொடுப்பதற்குப் பதிலாக, போக்குவரத்துக் கழகங்களின் வரவு - செலவு கணக்குகள் பற்றி பொது விவாதம் நடத்த வேண்டும்; நட்டம் நிரூபணமானால், நட்டத்திற்குக் காரணமான குற்றவாளிகள் இனம் காணப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும். தகவல் அறியும் சட்டத்தின்

வேலை நிறுத்தத்தை உடைப்பதற்காக சென்னையில் இறக்கி விடப்பட்ட மினி பஸ்: சேவை என்ற பெயரில் நடந்த கொள்ளை.



www.padippakam.com

படியும், பொதுத்துறை நிறுவனங்களின் மீது மக்களுக்கு முழு உரிமையுண்டு என்பதன்படியும் அப்படிக் கோருவதற்குத் தமிழக மக்களுக்கு முழு உரிமையுண்டு!

போராடும் தொழிற்சங்கத்தின் தலைவர்கள்கூட அரசு கூறும் நட்டத்தைக் கேள்விக்குள்ளாக்குவதில்லை. ''பொதுச் சேவையில் இருப்பதால் அரசு பேருந்துகள் நட்டமடைய வாய்ப்புண்டு'' என அரசுக்கு ஒத்து ஊதுகின்றன. பொதுச் சேவை என்றாலும், அரசு ஒன்றும் இலவசமாகப் பேருந்துகளை இயக்குவதில்லையே? எனவே, பகிரங்கமாக விவாதம் நடத்தாமல், தமிழக அரசு கோயபல்சுப் பாணியில் நட்டம், நட்டம் எனத் திரும்ப திரும்பச் சொல்லுவதை நாம் ஏற்றுக் கொள்ளக் கூடாது.



வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் போனஸ் போராட்டத்தை நசுக்குவதற்காகவே கைது செய்யப்பட்டுள்ள கிருஷ்ணசாமி.

**தமிழக அரசை மிரட்டுவது யார்? உலக வங்கியா? தொழிலாளர்களா?**

எந்தவிதமான நம்பத்தகுந்த ஆதாரத்தையும் முன் வைக்காமல், அ.தி.மு.க. அரசு நட்டம், நட்டம் என ஒப்பாரி வைப்பதற்கும்; 8.33 சதவீதத்துக்கு மேல் பேருந்து தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல, வேறு யாருக்கும் கூட போனசு கொடுக்க முடியாது என அ.தி.மு.க. அரசு அடித்துக் கூறுவதற்கும் அதனின் தொழிலாளர் விரோதப் போக்கு மட்டும் காரணமல்ல.

சமீபத்தில் அ.தி.மு.க. அரசு திவாலாகிக் கிடக்கும் தமிழக அரசின் கஜானாவை உலக வங்கியிடமிருந்து 18 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வாங்கி நிரப்பிக் கொள்ள முயன்றது; தமிழக அரசுக்குக் கடன் கொடுப்பதைப் பரிசீலித்து வரும் உலக வங்கி அதற்காக இரு நிபந்தனைகளை முன் வைத்தது. தமிழக அரசு இலவச மின்சாரத்தை ரத்து செய்ய வேண்டும் என்பது ஒன்று; மற்றொன்று, பேருந்துக் கட்டணத்தை உயர்த்த வேண்டும்.

தொழிலாளர்கள் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான போனசைத் தரக் கோரி வேலை நிறுத்தம் செய்வதை, ''அரசை மிரட்டுவதாக'' ஆளுங் கும்பல் சாடுகிறது. தொழிலாளர்கள் தங்களுக்கு உரிமையான நியாயமான போனசை கேட்பதே மிரட்டல் என்றால், ''கடன் வேண்டுமா, இந்த நிபந்தனைகளை நிறைவேற்று'' என்று உலகவங்கி உத்தரவு போடுகிறதே, அதை என்னவென்பது?

தொழிலாளர்களின் 'மிரட்டலை' போலீசை ஏவிவிட்டு ஒடுக்கும் தமிழக அரசு, பேட்டை ரவுடியைப் போல உலக வங்கி மிரட்டி வருவதற்கு எதிராகச் சுண்டு விரலைக் கூட அசைப்பதில்லை. மாறாக, உலக வங்கியின் கட்டளைப்படி பேருந்துக் கட்டணத்தை உயர்த்தவும், போக்குவரத்து சேவையைத் தனியார்மயமாக்கிவிடும் சதித்தனத்தோடும்தான் வேலை நிறுத்தப் போராட்டத்தை அணுகியது.

அரசின் தலையீடு இல்லாமல் பேருந்துக் கட்டணத்தைத் தங்கள் விருப்பம் போலத் தீர்மானிக்க வேண்டும் எனக் காத்துக் கிடக்கும் தனியார் முதலாளிகளுக்கு உலக வங்கியின் கட்டளை தீபாவளி போனசுதான்! அ.தி.மு.க., தி.மு.க., கட்சிகளை ஆதரிக்கும் முதலாளிகளுள் கணிசமானோரும், அக்கட்சிகளைச் சேர்ந்த முக்கியத் தலைவர்களும் மந்திரிகளும் பேருந்து முதலாளிகளாக இருப்பதால், பேருந்து கட்டணத்தை உயர்த்துவதற்கும், போக்குவரத்து சேவையைத் தனியார்மயமாக்குவதற்கும் கட்சி வேறுபாடின்றி ஆதரவும் கிடைக்கும்.

பேருந்து போக்குவரத்தைத் தனியார்மயமாக்கினால், பொது மக்களுக்குக் ''கவர்ச்சிகரமான சேவை'' கிடைக்குமா, இல்லை, பகற்கொள்ளை நடக்குமா என்பதை இந்த வேலை நிறுத்தப் போராட்டமே புட்டு வைத்துவிட்டது. அரசு, பேருந்து சேவையை 'இலாபத்தோடு' நடத்த வேண்டும் என்பது ஆம்னி பஸ்களைப் போல அரசும் கட்டணக் கொள்ளை நடத்த வேண்டும் என்பது தவிர வேறில்லை.

**இது, மறுகாலனியத் தாக்குதல்**

போக்குவரத்துத் தொழிலாளர்கள் கடந்த மூன்று ஆண்டுகளாக 20 சதவீத போனசு பெற்று வந்ததற்குப் பதினேழு ஆண்டு கால போராட்டப் பின்னணி உண்டு. இந்த உரிமையை ஒரே அடியில் தட்டிப் பறித்துவிட்டது அ.தி.மு.க. அரசு.

தமிழக அரசுக்குச் சொந்தமான 65 பொதுத்துறை நிறுவனங்களில், போக்குவரத்து, ஆவின், மின்வாரியம், நுகர்பொருள் வழங்குதுறை தவிர, பிற 61 நிறுவனங்களில் வேலை பார்த்துவரும் தொழிலாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் குறைந்தபட்ச 8.33 சதவீத போனசு கூடக் கிடைத்துவிடாதபடி, ரூ. 3500க்கு மேல் சம்பளம் பெறுகிறவர்களுக்கு போனசே கிடையாது'' என்று புதிய உத்திரவினை தமிழக அரசு பிறப்பித்திருக்கிறது.

அரசு அலுவலகங்களில் பணிபுரியும் காவலர்கள், அலுவலக ஊழியர்கள் தவிர, பிற அரசு ஊழியர்களுக்கு இந்த ஆண்டு தீபாவளி முன்பணம் வழங்கப்படவிதல்லை. அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த விடுப்புப் பயணச் சலுகை பறிக்கப்பட்டுவிட்டது. போக்குவரத்து, மின்சார வாரியம் உள்ளிட்டு பல துறைகளில் புதிய ஊதிய ஒப்பந்தங்கள் போட பேச்சு வார்த்தை நடத்தாமல், அரசு இழுத்தடிக்கிறது.

இதற்கெல்லாம் அரசு கூறும் ஒரே காரணம் கையில் பணமில்லை; கஜானா காலி என்பதுதான். கஜானா காலி என்று கூறித் தொழிலாளர்களுக்குத் தர வேண்டிய 200 கோடி ரூபாய் போனசைத் தட்டிப் பறித்துக் கொண்ட தமிழக அரசு, வியாபாரிகளும், முதலாளிகளும் அரசுக்குச் செலுத்த வேண்டிய 6500 கோடி ரூபாய் வரியை வசூலிக்க ஒரு துரும்பைக் கூட அசைக்கவில்லை.

''முதலாளிகளுக்கு வரிச் சலுகைகள் அளித்தால் தான் மூலதனம் வரும்; தொழில் பெருகும்'' என்ற புதிய பொருளாதாரக் கொள்கைதான் தமிழக கஜானாவையும் மொட்டையடித்து விட்டது. இந்த உண்மையை மூடிமறைத்துவிட்டு, பாசிச ஜெயா அரசு வருமானத்தில் 94 சதவீதம் அரசு ஊழியர்களின் சம்பளத்திற்கும், ஓய்வூதியத்திற்கே காலியாகி விடுகிறது எனப் புளுகினார்; முந்தைய தி.மு.க அரசு மீது பழியைப் போட்டுத் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்.

இது சாதாரண பொருளாதாரத் தாக்குதல் அல்ல; உலக வங்கியின் உத்தரவுப்படி நடக்கும் மறுகாலனியத் தாக்குதல். இந்தத் தாக்குதலை எதிர்த்து பல்வேறு அரசு துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்களும் ஊழியர்களும் போராடாத பொழுது, போக்குவரத்து மற்றும் குடிபொருள் வழங்குத் துறையைச் சேர்ந்த தொழிலாளர்கள் மட்டுமே போராடினார்கள்.

இவர்களின் போராட்டம் சிறிதளவு கூட வெற்றி பெறாமல் ஒடுக்கப்பட்டு விட்டால், ''இலவச மின்சாரத்தை ரத்து செய்வது; போக்குவரத்துக் கட்டணத்தை உயர்த்துவது; போக்குவரத்து, மின்சாரம் உள்ளிட்ட பல சேவைத்துறைகளைத் தனியார்மயப்படுத்துவது; பஸ் பாஸ் உள்ளிட்ட பல சமூக நல, இலவசத் திட்டங்களை ரத்து செய்வது;


படிப்பகம்

www.padippakam.com

மானியங்களை வெட்டுவது; விருப்ப ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் தமிழக அரசின் ஊழியர்களையும், தொழிலாளர்களையும் வீட்டிற்கு அனுப்புவது'' போன்ற உலக வங்கியின் உத்தரவுகளை அடுத்தடுத்து, பெரிய எதிர்ப்புகள் எதுவுமின்றி, எளிதாக நடைமுறைப்படுத்தி விடலாம் என்பதுதான் அ.தி.மு.க. அரசு போட்ட கணக்கு; அதில், அது வெற்றியும் பெற்றுவிட்டது.

தமிழக அரசிற்குக் கிடைத்த இந்த வெற்றியை தரகு முதலாளிகளும் சேர்ந்து கொண்டாடுகிறார்கள். சி.ஐ.ஐ. என்ற தரகு முதலாளிகளின் சங்கம், ''தமிழக அரசின் இந்த உறுதி, போனசு வழங்கும் பிரச்சினையில் ஓர் ஒழுங்கைக் கொண்டுவர எங்களுக்கும் உதவும்'' எனத் தமிழக அரசைப் பாராட்டுகிறது.

முதலாளிகளின் இந்தப் பாராட்டுக்கு பதில் மரியாதை செய்யும் விதமாக, வால்பாறை பகுதியில் 20 சதவீத போனசு கேட்டுப் போராடி வரும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை ஒடுக்கி வருகிறது, தமிழக அரசு. ஒரு பைசாகூட போனசு தர முடியாது என அடாவடித்தனம் செய்து வரும் பாம்பே பர்மா டிரேடிங் கார்ப்பரேஷன் என்ற தேயிலை எஸ்டேட் நிர்வாகத்திற்கு எதிராக மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுக்கக் காத்திருந்த 283 தேயிலைத் தொழிலாளர்கள், ''கலவரம் செய்யக் கூடியிருந்ததாக''ப் பொய்க் குற்றம் சுமத்தப்பட்டு, சிறையில் தள்ளப்பட்டுள்ளனர். இப்போராட்டத்துக்குத் தலைமையேற்றுள்ள புதிய தமிழகம் கட்சியின் தலைவர் கிருஷ்ணசாமியை, மாஞ்சோலைக் கொலை வழக்கைத் தூசி தட்டியெடுத்துக் கைது செய்திருக்கிறது, தமிழக அரசு.

இது மிகவும் வெளிப்படையாக தமிழகத் தொழிலாளி வர்க்கத்திற்கு விடப்படும் மிரட்டல்; இனி, சம்பள உயர்வு, போனசு போன்ற பிரச்சினைகளில் முதலாளியும், அரசும் விருப்பப்பட்டுப் போடுவதை வாங்கிக் கொண்டு தொழிலாளர்கள் அடங்கிப் போக வேண்டும்; மாறாக, தங்களின் சட்டப்பூர்வ உரிமைகளுக்காக, சட்டப்பூர்வமாகப் போராடினால் கூடக் கைது, சிறை என அடக்குமுறைகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் எனத் தொழிலாளர்கள் பயமுறுத்தப்படுகிறார்கள்!

***

இம்மறுகாலனியத் தாக்குதலை அரசு ஊழியர்களும், தொழிலாளர்களும் மட்டுமே போராடி முறியடித்துவிட முடியாது. ''பொது மக்களே, எங்களின் போராட்டத்துக்கு ஆதரவு தாரீர்'' என்று துண்டறிக்கை விடுவதால் மட்டுமே, பொது மக்களின் ஆதரவைப் பெற்றுவிட முடியாது.

தனியார்மய - தாராளமயத்துக்கு எதிரான போராட்டத்தை, வேலை உத்தரவாதம், சம்பளம், போனசு பிரச்சினை என்பதாகக் குறுக்கி விடும், சட்டவாதத்திற்குள் மூழ்கடித்துவிடும் பிழைப்புவாத தொழிற்சங்க அரசியலை விட்டு வெளியே வராமல், மக்களைத் தம்பக்கம் வென்றெடுக்க முடியாது; தொழிற்சங்கவாத அரசியலின் மூலம் தங்களின் வேலையைக் கூடத் தொழிலாளர்களால் காத்துக் கொள்ள முடியாது.

தனியார்மயத் தாக்குதலுக்கு எதிரான ஒவ்வொரு போராட்டத்திலும், அப்போராட்டத்தின் எல்லையை பொதுமக்களின் குறிப்பான நலனையும் உள்ளடக்கியதாக விரிவுபடுத்த வேண்டும். பல்வேறு துறையைச் சேர்ந்த தொழிலாளர்களும், ஊழியர்களும், பொதுமக்களும் பங்கெடுத்துக் கொள்ளும்படி பிரச்சார - போராட்ட உத்திகளைக் கையாள வேண்டும். அதேசமயம், பொது மக்களும், நமது வரிப்பணத்திலும், தொழிலாளர்களின் உழைப்பிலும் உருவாக்கப்பட்ட, வளர்க்கப்பட்ட மின்சாரம், போக்குவரத்து போன்ற சேவைத் துறைகளை, நட்டக் கணக்குக் காட்டித் தனியாருக்குத் தாரைவார்த்துவிட அரசுக்கும், ஓட்டுக் கட்சிகளுக்கும் உரிமை கிடையாது என்ற உணர்வோடு இப்போராட்டங்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டும்; இந்த ஆதரவு - ஐக்கியம் - ஒற்றுமையினால் மட்டுமே உலக வங்கியின் உத்தரவுகளை முடமாக்க முடியும்!

● பிரகாஷ்

# தொழிற்சங்கங்களின் துரோகத்தால் குமுறும் தொழிலாளர்கள்

''தமிழ்நாடு மின்சார வாரியம் 4,700 கோடி ரூபாய் நட்டத்தில் இயங்கிக் கொண்டிருப்பதால் மின்வாரியத் தொழிலாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் 8.33 சதவீதம் மட்டும்தான் போனசு வழங்க முடியும்'' எனதமிழக அரசு தீபாவளிக்கு நான்கைந்து நாட்கள் முன்னதாக அறிவித்தது. இதை எதிர்த்து மின்வாரியத் தொழிலாளர்களும் ஊழியர்களும் தங்களுக்கு 20 சதவீதம் போனசு வழங்க வேண்டும் எனக் கோரி 12.11.2001 அன்று ஒருநாள் மட்டும் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தினர்.

விவசாயிகளுக்கும், குடிசை வீடுகளுக்கும் இலவசமாக மின்சாரம் வழங்குவதாலும், மின் கட்டணம் குறைவாக இருப்பதாலும்தான் மின் வாரியத்துக்கும் நட்டமேற்படுவதாக தமிழக அரசு கூறி வருகிறது. இதனால் உலக வங்கியும், ''இலவச மின்சாரத்தை ரத்து செய்ய வேண்டும்; மின்கட்டணத்தை உயர்த்த வேண்டும்; மின்சார வாரியத்தைச் சீரமைக்க வேண்டும் - அதாவது தனியார்மயப் படுத்த வேண்டும்'' என்று உத்தரவிட்டுள்ளது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்புதான் மின் கட்டணம் உயர்த்தப் பட்டது; இந்தக் கட்டண உயர்வு போதாதென்று, கடந்த நான்கு மாதங்களுக்கு முன்புதான் மின் நுகர்வு வைப்பு நிதியும் மூன்று, நான்கு மடங்கு உயர்த்தப்பட்டது. இதன் பிறகும் மின்வாரியம் நட்டம், நட்டம் எனப் புலம்புவதற்கு என்ன அடிப்படை இருக்கிறது?

மின்வாரியம் நட்டமடைகிறது என்றால், அதற்கு, ''உலக வங்கி, ஐ.எம்.எஃப் போன்ற ஏகாதிபத்திய நிறுவனங்களுக்குக் கட்டப்படும் வட்டி; தனியார் மின் நிலையங்களில் இருந்து பெறப்படும் மின்சாரத்திற்குக் கொடுக்கப்படும் அநியாயமான கட்டணம்; தனியார் மின் நிலையங்களின் உற்பத்தித் திறனை ஈடுகட்ட வழங்கப்படும் திறன் கட்டணம் என்ற தேவையில்லாத தண்டத் தொகை; மின் திருட்டு; அதிகாரிகள் - அரசியல்வாதிகளின் கூட்டுக் கொள்ளை'' - இவைதான் காரணங்களாக இருக்க முடியும். ஆனால், அந்த உண்மைகள் மூடி மறைக்கப்பட்டு, மின்வாரியத்தைத் தனியார்மயமாக்கும் நோக்கத்திற்காகவே, இலவச மின்சாரம், கட்டணம் குறைவு எனப் பொய்யான காரணங்கள் கூறப்படுகின்றன.

20 சதவீத போனசு கோரிக்கையை முன்வைத்து வேலை நிறுத்தப் போராட்டத்தைத் துவக்கிய தொழிற்சங்கங்கள், மின் வாரியத்தைத் தனியார்மயமாக்க நடந்து வரும் சதிகளையும், மோசடிகளையும் மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தி, அவர்களின் ஆதரவைப் பெற்று, போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தியிருக்க முடியும். ஆனால், சி.ஐ.டி.யு., தொ.மு.ச., ஏ.ஈ.எஸ்.யு., பெடரேஷன் ஆகிய நான்கு தொழிற்சங்கங்கள் இணைந்த தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்கங்களின் செயலமைப்பு, இரவோடு இரவாக நிர்வாகத்துடன் இரகசியப் பேச்சு வார்த்தை நடத்திவிட்டு, தொழிலாளர்களுக்குக் கூடத் தெரியாமல், ஒரே நாளில் வேலை நிறுத்தத்தைத் திரும்பப் பெற்றது. தங்களின் துரோகத்தை மூடி மறைக்க, ''தொழிலாளர்கள் போராட்டத்துக்குத் தயாராக இல்லை'' எனப் பசப்பி வருகிறார்கள்.

ஆனால், தொழிலாளர்களோ, ''நன்கொடை கேட்டு வரட்டும்; கைக் கூலிகளை எட்டி உதைக்கிறோம்'' எனக் குமுறிக் கொண்டிருக்கிறார்கள். இத்துரோகத்தை எதிர்த்து உசிலம்பட்டி கோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களில் இருந்து விலகி விட்டனர். ஓட்டுக் கட்சி தொழிற்சங்கங்களின் இந்தத் துரோகம், போனசு போன்ற பொருளாதார கோரிக்கைகளைப் பெறுவதற்குக் கூட, இனி தொழிலாளர்களுக்கு ஒரு புரட்சிகர தொழிற்சங்கம் அவசியம் என்ற படிப்பினையைக் கொடுத்தது.

● பகலவன்


படிப்பகம்

www.padippakam.com

# ஒரு பச்சோந்தியும் சில நெருப்புக் கோழிகளும்

ஈழ விடுதலை ஆதரவு, புலிகள் இயக்க ஆதரவு என்றெல்லாம் சவடால் அடித்து வரும் வைகோவும், இராமதாசும் கடைந்தெடுத்த துரோகிகள்; பார்ப்பன - பாசிச பா.ஜ.க. கும்பல் எட்டி உதைத்தாலும் பதவி சுகத்துக்காக அதன் காலை நக்கும் இழிபிறவிகள். - பா.ஜ.க. அரசு அண்மையில் கொண்டு வந்துள்ள பயங்கரவாத ''பொடோ'' சட்டத்துக்கு ஆதரவு தெரிவித்ததன் மூலம் இத்துரோகிகள் இதை மீண்டும் நிரூபித்துக் காட்டிவிட்டார்கள்.

இந்தப் பிழைப்புவாத துரோகிகளைத்தான் ''புரட்சிப் புயல்'' என்றும், ''தமிழினப் போராளி'' என்றும் தமிழினப் பிழைப்புவாதிகளும் தமிழ்ச் சான்றோர்களும் ஒளிவட்டம் போட்டுத் துதிபாடினார்கள். வைகோவின் மேடைச் சவடால்களை ஊதிப்பெருக்கி ''இன முழக்கம்'' ''கர்ஜனை'' என்றெல்லாம் அடைமொழியிட்டு ''தம்பி பிரபாகரனின் தமிழகத் தளபதி'' என்று சூடேற்றினார்கள். கழுதைக் குட்டியைப் பார்த்து, ''ஆகா! என்ன அழகான குதிரைக் குட்டி'' என்று உச்சி முகர்ந்தார்கள். ஆனால் அது மூக்கு வெளுத்து அம்பலமானதும் தேள்கொட்டிய திருடனாக வாய்பொத்தி விழிபிதுங்கி நிற்கிறார்கள்.

வைகோ, இராமதாசு முதலான பிழைப்புவாத ஓட்டுப் பொறுக்கிகளின் துரோகம் தமிழக மக்களிடம் அம்பலப் பட்டுப் போயிருப்பது மட்டுமல்ல; நேற்று வரை வைகோவுக்கு ஒளிவட்டம் போட்டு வந்த ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரே இப்போது வைகோவின் துரோகத்தைக் கண்டு காறி உமிழ்ந்துள்ளனர்.

''இதற்கு முன்பு விடுதலைப் புலிகளை ஆதரித்தது போல் இப்போது வைகோ ஆதரிக்கவில்லை. விடுதலைப் புலிகளுக்குத் தடை விதிக்கக் காரணமாக உள்ள ''பொடோ'' சட்டத்தையும் அவர் எதிர்க்கவில்லை. அவர் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசை கண்ணை மூடிக் கொண்டு ஆதரிக்கிறார். இலங்கைக்கு கடந்த ஆண்டு இந்திய அரசு கப்பல்கள் வழங்கியதையும் அவர் எதிர்க்கவில்லை'' என்று கனடாவிலிருந்து புலிகள் ஆதரவு இணைய தளத்தில் புலிகளின் செய்தித் தொடர்பாளர் வெளிப்படையாகக் குற்றம் சாட்டி செய்தி வெளியிட்டுள்ளார். இது தமிழக நாளேடுகளில் வெளியாகி நாறிய பின்னரும் தமிழினப் பிழைப்புவாதிகள் எவரும் வைகோவின் துரோகத்தை எதிர்க்கவோ முணுமுணுக்கவோ இன்றுவரை முன்வரவில்லை.

சந்தர்ப்பவாதம் என்பது ஓட்டுக்கட்சி அரசியல்வாதிகள் மட்டுமே பின்பற்றும் நடைமுறை அல்ல; பிழைப்புவாதம் என்பது தொழிற்சங்கத் தரகர்கள் மட்டுமே கடைபிடிக்கும் கொள்கையுமல்ல; தமிழின அமைப்புகள் உள்ளிட்டு பல்வேறு அமைப்புகளும்கூட சந்தர்ப்பவாத அரசியலையும் பிழைப்புவாத வாழ்வியலையும் இணைத்து ஒரு வீரிய ஒட்டு ரக சித்தாந்தத்தை உருவாக்கி வளர்த்து வருகின்றன.

அதன்படி, ''புலிகள் வைகோவை தோழமையோடுதான் விமர்சிக்கிறார்கள்; பகைமை ஏதுமில்லை'' என்று இந்த விவகாரத்தைத் தமிழின பிழைப்புவாதிகள் பூசி மெழுகலாம். அல்லது ''ஒரு விடுதலைப் புலி இப்படி செய்தி வெளியிட்டுள்ளதை வைத்து ஒட்டு மொத்த புலிகள் இயக்கமே வைகோவைச் சாடுவதாகக் கருதிவிட முடியாது'' என்று பொழிப்புரை எழுதலாம். அல்லது அமெரிக்காவின் அடியாளாக உள்ள, ஆக்கிரமிப்புப் போர்வெறி பிடித்த ''டெகல்கா'' புகழ் பெர்னாண்டசை ஈழ விடுதலை ஆதரவாளராகச் சித்தரித்து, செஞ்சோற்றுக் கடன் தீர்க்க கௌரவர் சபையிலே நிற்கும் கர்ணனைப் போல, தவிர்க்கவியலாத சூழலில் அவர் இந்துவெறி பாசிச முகாமில் இருப்பதாக ''தமிழர் கண்ணோட்டம்'' மணியரசன் நியாயப்படுத்தியதைப் போல, ''வைகோ பயங்கரவாத பொடோ சட்டத்தை ஆதரித்து இந்துவெறி பாசிச முகாமில் இருந்தாலும், அவர் உள்ளத்தில் ஈழவிடுதலை கனன்று கொண்டிருப்பதாக'' நாளை இப்பிழைப்புவாதிகள் மாய்மாலம் செய்யலாம்.

இவர்கள் ஒருபுறமிருக்கட்டும். இப்பிழைப்புவாதிகளிடமிருந்து வேறுபட்டு கொள்கைபூர்வ இனவாதிகளாகக் காட்டிக் கொள்ளும் பழ. நெடுமாறன், சுபவீ, தியாகு முதலானோரும் இதே சந்தர்ப்பவாத வழியில் நெருப்புக் கோழிகளாகத் தலையைப் பூமியில் புதைத்துக் கொள்கிறார்கள். நேற்றுவரை இவர்கள், ''ஈழப் பிரச்சினையில் வாஜ்பாய் அரசின் அணுகுமுறை வேறுபட்டது. இலங்கைக்கு இராணுவத்தை அனுப்ப மாட்டோம் என்று வாஜ்பாய் திட்டவட்டமாக அறிவித்துவிட்டார். எனவே செயல்தந்திர ரீதியில் வாஜ்பாய் அரசுக்கு ஆதரவு தெரிவிக்கிறோம்'' என்று வரிந்து கட்டிக் கொண்டு நின்றார்கள். ''புலிகள் இந்திய அரசைப் பகைத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை; ஈழம் மலர்ந்தால் அது இந்தியாவின் புவிசார் நலன்களுக்குச் சாதக

**சந்தர்ப்பவாதி யார்? முன்பு தமது பத்திரிகையில் வைகோவை ஆதரித்துவிட்டு இப்போது எதிர்க்கும் புலிகளா? அல்லது புலிகளை ஆதரித்துக் கொண்டே ''பொடோ'' சட்டத்தையும் ஆதரிக்கும் வைகோவா?**


இந்தியாவின் நேச சக்தி தமிழீழம்

-தமிழீழ ஆதரவாளர் வைகோ-

இலங்கைத் தீவில் தமிழர்களுக்கென்று நாடு அமைவது அத்தியாவசியமான ஒன்று. அதனைவிட்டு இந்தியாவில் இருந்து தமிழ்நாடு பிரிந்து சென்றுவிடும் என்று பயப்படுவது அபத்தமானது.

வைகோவுக்கு விடுதலைப்புலிகள் எதிர்ப்பு

'பொடோ' சட்டத்தை ஆதரிப்பதா?





படிப்பகம்

www.padippakam.com

மானது'' என்றார்கள். இந்தியாவின் எதிரிகளான சீனா, பாகிஸ்தான், அமெரிக்கா ஆகிய நாடுகள் இலங்கையைத் தளமாகப் பயன்படுத்திக் கொண்டு, தென்னிந்தியாவில் உள்ள ஏவுகணை நிலையங்களைத் தகர்க்க குறிவைப்பதாகவும், இந்த முயற்சிகளுக்கு எதிராக புலிகள் போராடி வருவதாகவும் அடிமுட்டாள்தனமாக பழ. நெடுமாறன், சிதம்பரம் மாநாட்டில் சங்கு ஊதிப் பார்த்தார்.

ஆனால் எவ்வளவுதான் அரிதாரம் பூசி பா.ஜ.க. கும்பலுக்கு இவர்கள் ஒப்பனை செய்தாலும், அதன் பிராந்திய மேலாதிக்க பாசிச கோர முகத்தை மூடி மறைக்க முடியவில்லை. பிரிவினைவாத - பயங்கரவாதப் பீதியூட்டி அது ''பொடோ'' சட்டத்தை ஏவியும், விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத இயக்கமாக அறிவித்து தடை செய்தும், தமிழின உரிமைப் போராட்டங்களை ஒடுக்கவும் வெளிப்படையாகவே கிளம்பிவிட்டது. இத்தனைக்கும் பிறகும்

**ஓட்டுக் கட்சிகளின் சந்தர்ப்பவாதம் பல சமயங்களில் அப்பட்டமாகவே அம்பலமாகி விடுகிறது. ஆனால் தமிழினப் பிழைப்புவாதிகளின் சந்தர்ப்பவாதமோ முற்போக்கு — புரட்சி — இனவிடுதலை முதலான சவடால்களால் மூடிமறைக்கப்படுகிறது. உண்மையில் இத்தகைய மூடிமறைக்கப்பட்ட சந்தர்ப்பவாதம்தான் மிக அபாயகரமானது.**

தமது சந்தர்ப்பவாத நிலைப்பாடுகள் பற்றியோ, ஈழ விடுதலைக்குத் தடையாக உள்ள பிராந்திய மேலாதிக்க இந்திய அரசை எதிர்த்து நிற்க வேண்டிய அவசியம் பற்றியோ வாயே திறக்காமல், தாமும் ''பொடோ'' சட்டத்தை எதிர்ப்பதாக இவர்கள் நாடகமாடுகிறார்கள்.

ஓட்டுக் கட்சிகளின் சந்தர்ப்பவாதம் பல சமயங்களில் அப்பட்டமாகவே அம்பலமாகிவிடுகிறது. ஆனால் இவர்களின் சந்தர்ப்பவாதமோ முற்போக்கு - புரட்சி - இனவிடுதலை முதலான சவடால்களால் மூடிமறைக்கப்படுகிறது. உண்மையில் இத்தகைய மூடிமறைக்கப்பட்ட சந்தர்ப்பவாதம்தான் மிக அபாயகரமானது. இதை விழிப்புடனிருந்து அம்பலப்படுத்தி முறியடிக்காமல் ஈழவிடுதலைக்கு உதவிட முடியாது; நியாயமான தமிழின உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவும் முடியாது.

● குமார்

# ஜெயாவுக்குக் கொலை மிரட்டல்

# அம்பலமானது தமிழக போலீசின் கிரிமினல் மூளை!

தமிழக போலீசு அலாதியான கிரிமினல் மூளை கொண்டது. அதனாலேயே ஸ்காட்லாந்து யார்டு போலீசுக்கு அடுத்து குற்றங்களைத் துப்பறிந்து ஒடுக்குவதில் உலகின் இரண்டாவது 'சூரப்புலிகள்' என்ற பெருமையும் உண்டு.

பாசிச எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் வட ஆற்காடு - தர்மபுரி மாவட்டங்களில் நக்சல்பாரி புரட்சியாளர்களை நரவேட்டையாடிய 'சூரப்புலி' தேவாரம், பின்னர் தமிழகமெங்கும் இரயில் பெட்டிகளில் குண்டு வெடிப்புகளை திட்டமிட்டு நடத்தி தீவிரவாதம் பெருகிவிட்டதாகப் பீதியூட்டினார். சென்னை - நுங்கம்பாக்கம் அருகே இரயில் தண்டவாளத்தில் போலீசு அடியாட்களைக் கொண்டு வெடிகுண்டை வைத்துவிட்டு, பின்னர் தீவிரவாதியிடமிருந்து மர்மத் தொலைபேசி தகவல் வந்ததாகக் கூறிக் கொண்டு தனது படையுடன் புறப்பட்ட தேவாரம், அந்த வெடிகுண்டை தானே 'கண்டறிந்து' உயிருக்கு அஞ்சாமல் தனது வெறும் கைகளாலேயே எடுத்துக் காட்டி பத்திரிகைகளில் விளம்பரப்படுத்திக் கொண்டார். அதன் பிறகு நீண்ட காலத்துக்கு பாசிச எம்.ஜி.ஆர். - ஜெயா கும்பலின் நம்பகமான, விசுவாசமான உயர் போலீசு அதிகாரியாக சலுகைகள் - சன்மானங்களுடன் அவர் கொட்டமடித்தார்.

சூரப்புலி தேவாரம் வழியில் இப்போது பாசிச ஜெயா கும்பலின் விசுவாச சென்னை போலீசு கமிஷனர் முத்து கருப்பன் கிளம்பியிருக்கிறார். தனது பராக்கிரமத்தைக் காட்டவும், தீவிரவாத பீதியூட்டி பாசிச ஜெயா கும்பல் அரசியல் ஆதாயமடையும் வகையில் சேவை செய்யவும் தன்து எடுபிடி போலீசு கிரிமினல்களைக் கொண்டு இப்போது கொலை மிரட்டல் ''ஈ-மெயில்'' கடித நாடகத்தைத் திட்டமிட்டு அரங்கேற்றியுள்ளார்.

கடந்த நவம்பர் முதல் நாளன்று பாசிச ஜெயாவுக்கு கொலை மிரட்டல் கடிதம் ஈ-மெயில் மூலம் அனுப்பப்பட்டதாகவும், அதில் ஜெயலலிதாவை விசாரணைக்கு வரும்போது கோர்ட்டிலேயே வைத்து கொல்வோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், தமிழ்நாடு விடுதலைப் படையைச் சேர்ந்த தீவிரவாதி சீலன் என்பவன் இதை பாண்டிச்சேரியிலிருந்து அனுப்பியதாகவும் கமிஷன் முத்துக் கருப்பன் பரபரப்பாக செய்தி வெளியிட்டார். அதைத் தொடர்ந்து மூன்று சிறப்பு போலீசுப் படை நிறுவப்பட்டு அவர்கள் தீவிர புலனாய்வு செய்து, பாண்டிச்சேரி ஸ்ரீநெட் கம்ப்யூட்டர் மையத்திலிருந்து இம்மிரட்டல் கடிதம் அனுப்பப்பட்டதாகக் கண்டறிந்து, அதன் உரிமையாளரிடம் ராஜாராமன் என்கிற சீலனின் 15 வயது புகைப்படத்தைக் காட்டியதும் இன்று 35 வயதாகும் அவனது உருவத்துடன் ஒத்துப் போவதாக அவர் கூறியதாகவும் எனவே சீலன் தான் இக்கடிதத்தை அனுப்பியதாக முடிவு செய்து, தமிழ்நாடு விடுதலைப் படை, தமிழ் தேசிய மீட்புப் படை ஆகிய தீவிரவாத அமைப்புகளைச் சேர்ந்தோரைக் கைது செய்ய தனிபோலீசுப் படை கட்டியமைக்கப்பட்டு தேடுதல் வேட்டை நடந்து வருவதாகவும் பரபரப்பாக அறிவித்தார். அதைத் தொடர்ந்து அவசரமாகக் கூடிய தமிழக அமைச்சரவை இவ்விரு அமைப்புகளைத் தடை விதிப்பதாக அறிவித்து மத்திய அரசுக்கு பரிந்துரைத்து வலியுறுத்தியுள்ளது. வீரப்பன் நடமாடும் சத்தியமங்கலம் காட்டுப் பகுதியில் இத்தீவிரவாதிகளை மடக்கிப் பிடிக்கவும் போலீசுப் படை முடுக்கி விடப்பட்டுள்ளது.

கொலை செய்யப் போவதாக மிரட்டல் விடுப்பவர்கள் கோர்ட்டிலேயே வைத்து கொலை செய்வோம் என்று குறிப்பிட்டுக் கூறக் காரணம் என்ன? நடிகர் ராஜ்குமார் கடத்திச் செல்லப்பட்டு விடுவிக்கப்பட்ட பிறகு, தமிழினத் தீவிரவாதி மாறன் உட்பட எல்லோரையுமே சிறையிலடைத்து விட்டோம் என்று தமிழக அரசு அறிவித்துள்ள நிலையில் எப்படி இந்த மிரட்டல் வர முடிந்தது? இதுபற்றி தமிழக போலீசு தலைமை இயக்குனர் வாய்திறக்காத நிலையில், கமிஷனர் முத்துகருப்பன் பரப்பரப்பாக செய்தி வெளியிட்டது ஏன்? மாநில அரசின் தலைமைச் செயலாளரும் உள்துறை செயலாளரும் தீவிரவாத அச்சுறுத்தல் பற்றி கருத்து கூறாதது ஏன்? ஈ-மெயில் எங்கிருந்து வந்தது என்பதைக் கண்டறிந்து சொல்லும் தொழில்நுட்ப வாய்ப்பினைப் படைத்துள்ள விதேஷ் சஞ்சார் நிறுவனத்தைப் போலீசார் தொடர்பு கொண்டு விசாரித்தது அறியாமலேயே, பாண்டிச்சேரியிலிருந்து அனுப்பப்பட்டதாக உடனடியாக எப்படி அறிவிக்க முடிந்தது?

இப்படி ஏராளமான சந்தேகங்களும் கேள்விகளும் இது போலீசாரே நடத்திய

www.padippakam.com

மிகப்பெரிய மோசடி என்பதை நிரூபித்துக் காட்டுகின்றன. பாசிச ஜெயா கும்பல் இக்கொலை மிரட்டலைக் காட்டி கோர்டுக்கு வராமல் ஊழல் வழக்கு விசாரணையை நீட்டித்து நீர்த்துப் போகச் செய்யவும், ''ஐயோ! என்னைக் கொல்ல சதி!'' என்று கூப்பாடு போட்டு அனுதாபத்தைத் தேடிக் கொள்ளவும் திட்டமிட்டு செய்யப்பட்ட ஏற்பாடுதான் இது என்று மெய்ப்பித்துக் காட்டுகின்றன.

இருப்பினும், 'தற்காலிக' முதல்வர் பன்னீர்செல்வமும் அமைச்சர் பொன்னையனும் ''ஐயோ! அம்மாவைக் கொல்ல சதி!'' என்ற பெருங்கூச்சல் போட்டனர். போயஸ் தோட்டக் கூட்டணி கொத்தடிமைகளான தி.க.வின் வீரமணி, மூப்பனாரின் வாரிசான ஜி.கே. வாசன், பார்வர்டு பிளாக் ஆண்டித் தேவர் முதலானோர், தீவிரவாதிகளை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க வேண்டுமென்றனர். எடுபிடி வாழப்பாடி, ''இது மாபெரும் சதி; இதில் தி.மு.க.வுக்கும் பங்கு உள்ளது'' என்று கருணாநிதியைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டார். காலை நக்கும் இழிபிறவிகள் கிடக்கட்டும். எதிர்த்தரப்பினராகக் கூறிக் கொள்ளும் காங்கிரசு, பாரதீய ஜனதா கும்பலும் இம்மோசடி நாடகத்தை அம்பலப்படுத்த முன்வராமல் தீவிரவாதத்தை எதிர்ப்பதாக ஒத்தூதின.

எல்லாவற்றுக்கும் மேலாக, தமிழினத் தலைவராக சித்தரிக்கப்படும் கருணாநிதி, போலீசு உளவாளிகளால் நடத்தப்பட்ட இப்பயங்கரவாத சதியைத் திரைகிழிக்க முன்வராமல், ''தீவிரவாதம் இந்த அளவுக்குத் தலையெடுத்து விட்டதே!'' என்று பிறகட்சிகளுடன் சேர்ந்து கொண்டு பீதியூட்டி அங்கலாய்த்தார். தமிழகத்தில் அரசை அச்சுறுத்தும் அளவுக்கு மக்கள் திரள் போராட்டங்களோ, எழுச்சிகளோ நடக்காத போதிலும், இம்மிரட்டல் கடிதத்தால் தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்கு கெட்டு விட்டதாக அச்சுறுத்தி புலம்பினார். தமிழினத் தீவிரவாதிகளைக் கடுமையாக ஒடுக்க வேண்டும் என்றார். தனது ஆட்சிக் காலத்தில் தமிழ் தேசிய மீட்புப் படையைச் சேர்ந்த 25 பேரையும், தமிழ்நாடு விடுதலைப் படையைச் சேர்ந்த 141 பேரையும் கைது செய்து சிறையிலடைத்ததாகவும், இவ்விரு அமைப்புகளைத் தடை செய்யக் கோரி மத்திய அரசுக்கு இருமுறை கடிதம் எழுதியதாகவும் தனது அடக்குமுறைச் சாதனைகளைப் பட்டியல் போட்டார். அதன் மூலம் தன்னை கடைந்தெடுத்த பாசிச அடியாள் என்பதை நிரூபித்துக் கொண்டார்.

இப்படி அனைத்து ஓட்டுக் கட்சிகளும் பத்திரிகைகளும் ஈ-மெயில் கடித விவகாரத்தை யானை மெயிலாக ஊதிப் பெருக்கி பயங்கரவாதப் பீதியூட்டி வந்த வேளையில் பாண்டிச்சேரி போலீசார், ''ஜெயலலிதாவுக்கு அனுப்பப்பட்ட ஈ-மெயிலை தமிழக போலீசிலிருந்து யாரோ சிலர் இங்கு வந்து அனுப்பிவிட்டுச் சென்றுள்ளதாக நாங்கள் சந்தேகப்படுகிறோம்'' என்று தமக்கும் தமிழக போலீசுக்குமிடையிலான அதிகார மோதலில் உண்மையைப் போட்டு உடைத்து விட்டனர். ''தமிழ்நாடு விடுதலைப் படையினர் ஈ-மெயில் அனுப்பி விட்டுத்தான் எந்த நடவடிக்கையையும் செய்வார்களா? கன்னட நடிகர் ராஜ்குமார் கடத்தப்படுவதற்கு முன்பு ஈ-மெயில் அனுப்பினார்களா? கோர்ட்டில் வைத்து கொல்வோம் என்று அத்தனை தெளிவாக அந்தக் கடிதத்தில் உள்ளதிலிருந்தே அதை யார் அனுப்பியிருப்பார்கள் என்று தெரியவில்லையா?'' என்று இம்மோசடி நாடகத்தைத் திரைகிழித்துக் காட்டுகின்றனர். தமிழக கிசுகிசு பத்திரிகைகளிலும் இச்செய்திகள் வெளிவந்து நாறுகிறது.

இருப்பினும், கரூர் அருகே லாலா பேட்டை இரயில் நிலைய அதிகாரிக்கு, ''சிறையிடப்பட்டுள்ள தீவிரவாதி மாறனை விடுதலை செய்யாவிட்டால் லாலா பேட்டை உள்ளிட்டு 10 ரயில் நிலையங்களை 65 நாட்களுக்குள் வெடிகுண்டு வைத்து தகர்ப்போம்'' என்று அரியலூரிலிருந்து தமிழ்நாடு விடுதலைப் படை தீவிரவாதிகளிடமிருந்து நவம்பர் 9-ஆம் தேதியன்று மிரட்டல் கடிதம் வந்துள்ளதாக தமிழக போலீசார் பயங்கரவாதப் பீதியூட்டினர். நாளை இன்னுமொரு பயங்கரவாத மிரட்டல் கடிதம் வந்துள்ளதாக திட்டமிட்டு போலீசார் பீதியூட்டலாம்.




கிரிமினல் போலீசாரின் கொலை மிரட்டல் நாடகம்: கதை - வசனம் எழுதிப் பீதியூட்டும் பார்ப்பன பத்திரிகை.

மொத்தத்தில், பயங்கரவாத - பிரிவினைவாதப் பீதியூட்டி ஏவிவிடப்பட்டுள்ள ''பொடோ'' சட்டமும் போதாது என்று தமது பங்குக்கு தீவிரவாத பீதியூட்டி தமிழினவாத அமைப்புகளை ஒடுக்க சர்வ கட்சி ஆதரவுடன் பார்ப்பன - பாசிச - ஜெயா கும்பல் கிளம்பி விட்டது. நியாயமான தமிழின உரிமைக்கான போராட்டங்களையும் அமைப்புகளையும் தடை செய்யப்பட்ட தீவிரவாத அமைப்புகளுடன் தொடர்புடையதாக முத்திரை குத்தி அடக்குமுறை ஏவுவதும் பழிவாங்குவதுமே அக்கும்பலின் நோக்கமாக உள்ளது.

இந்நிலையில், ஆத்திரமுற்ற சில தனிநபர் சாகசவாத நடவடிக்கைகளால் பாசிச ஜெயா கும்பலுக்குப் பாதிப்பு ஏற்பட்டால்கூட, அதைக் காட்டி அனுதாபம் தேடும் முயற்சியில் இறங்கி பாசிச அடக்குமுறைக்கு நியாயம் கற்பிக்கத் தொடங்கி விடும். எனவே இப்பாசிச பயங்கரவாதக் குற்றவாளிகளை அம்பலப்படுத்தி மக்கள் திரள் எழுச்சியில் பகிரங்கமாகத் தண்டிக்க தமிழக மக்கள் புரட்சிப் பாதையில் அணிதிரள வேண்டும்.

● தமிழ்மணி


படிப்பகம்

www.padippakam.com

# ஆப்கான் போர்

## புதை மணலில் சிக்கியது அமெரிக்க வல்லரசு

"ஆப்கான் போரில் தாலிபான்கள் முறியடிக்கப்பட்டு விட்டார்கள். தலைநகர் காபூல் உட்பட நகரங்கள் அனைத்தையும் வடக்குக் கூட்டணி கைப்பற்றி விட்டது. சுற்றி வளைக்கப்பட்ட தாலிபான்கள் தற்கொலை செய்து கொள்ளுகிறார்கள். பலரும் ஆயுதங்களுடன் சரணடைகிறார்கள். ஒரு சிலரே ஆயுதத் தளவாடங்கள் - வெடிபொருட்களையும் போட்டுவிட்டு ஓடுகிறர்கள். எஞ்சியிருப்பவை குண்டூஸ் மற்றும் கந்தகார் ஆகிய இரு நகரங்கள்தாம். அவற்றிலும் குண்டூஸ் நகரை வடக்குக் கூட்டணி சுற்றி வளைத்துவிட்டது. மூன்று தெற்கு, தென்கிழக்கு மாநிலங்கள் தவிர, ஆப்கான் முழுவதும் தாலிபான்கள் பிடியிலிருந்து மீட்கப்பட்டு விட்டது" - இவ்வாறு நவம்பர் 12-ந் தேதி நள்ளிரவில் உலகின் எல்லா வானொளிகளும் குதூகலத்துடன் அலறின.

"காபூல் நகரில் மக்கள் மகிழ்ச்சியால் களியாட்டம் போடுகிறார்கள். தாலிபான்களின் மதவெறிக் கட்டாயத்தினால் ஆண்டுக்கணக்கில் வளர்த்திருந்த தாடியை மழித்துக் கொள்வதற்கு சலூன்களில் கூட்டம் அலைமோதுகிறது. பெண்கள் பர்தாவைக் களைந்துவிட்டு நவீன - நாகரிக உடையுடன் வீதிகளில் உலவுகின்றனர். தடை செய்யப்பட்டிருந்த ஒப்பனைப் பொருட்கள் முதல் வீடியோ ஒளிப் பெட்டகங்கள் வரை வாங்கிக் குவிக்கின்றனர். திரையரங்குகள் நிரம்பி வழிகின்றன. இந்தி - உருது சினிமா நட்சத்திரங்களின் படங்கள் மின்னுகின்றன. துப்பாக்கிகளை வானை நோக்கிச் சுட்டுக் கொண்டு, பீரங்கி - கவச வண்டிகளில் வடக்குக் கூட்டணிப் படையினர் நகர வீதிகளில் வலம் வருகின்றனர். நகர வீதிகளில் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கும் சிறுவர்கள் பந்தாடி விளையாடுகின்றனர்."


இந்தக் காட்சிகளை வானொளிகள் திரும்பத் திரும்ப ஒளிபரப்புகின்றன. சமீப கால நடப்புப்படி பார்த்தால் வாஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகையில் புஷ்ஷும், பென்டகனில் ராம்ஸ் ஃபெல்டும் இந்த வெற்றிக்குச் சொந்தம் கொண்டாடி, செய்தியாளர்களிடையே பெருமையடித்துக் கொண்டிருக்க வேண்டும். கம்ப்யூட்டர் வீடியோ விளையாட்டுக்களில் ஒசாமா பின்லேடனையும், முல்லா ஒமரையும் சுட்டுத் தள்ளும் அமெரிக்க வெறியர்கள் நியூயார்க் தெருக்களில் போதை பொங்க ஆடிப்பாடி குதூகலித்திருக்க வேண்டும். இலண்டனிலும் இசுலாமாபாத்திலும் உள்ள ஆட்சியாளர்களிடம் கூட இது எதிரொலித்திருக்க வேண்டும்.

இதற்கு மாறாக, புது தில்லியிலும், டெகரானிலும், மாஸ்கோவிலும் இறுகிய முகத்துடன் குறுகிப் போயிருந்த அதிகாரிகளிடையே புன்னகை அரும்பியிருக்கிறது. அமெரிக்கா முதலிய நாடுகள் தாலிபானின் "வீழ்ச்சி"யையும், வடக்குக் கூட்டணியின் வெற்றியையும் கொண்டாடுவதற்கும், இந்தியா முதலிய நாடுகள் மகிழ்ச்சியடைவதற்கும் காரணம் வேறுவேறானது, எதிரெதிரானது; என்றாலும், இது இவர்கள் யாருமே எதிர்பாராத வேகத்தில் நடந்திருக்கிறது.

"அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. உட்பட யாருமே தாலிபானின் வீழ்ச்சியையும், வடக்குக் கூட்டணியின் திடீர் முன்னேற்றத்தையும் வெற்றியையும் எதிர்பார்க்கவில்லை" என்று ஐ.நா. சபையின் அதிகாரிகள் கூறுகின்றனர்.

உண்மையைச் சொல்வதானால், இந்த நிகழ்வை எதிர்பாராதது மட்டுமல்ல; அமெரிக்காவின் புஷ் நிர்வாகம் இதனை முழுமையாக விரும்பவுமில்லை. செப்டம்பர் 11 பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு அந்த நவம்பர் 12-ம் தேதி, அதே நியூயார்க் - மன்ஹாட்டன் தீவின் குடியிருப்புப் பகுதியின் மீது சிவிலியன் விமானம் வீழ்ந்து நொறுங்கியதில் நூற்றுக்கணக்கானவர் மீண்டும் மடிந்துபோனது கூட, அமெரிக்காவுக்கு அப்போது கவலை தருவதாக இல்லை.

அமெரிக்காவால் தூக்கி நிறுத்தப்படும் ஆப்கானின் முன்னாள் மன்னர் ஜாகிர் ஷா.



இரண்டு நாட்களுக்கு முன்புதான், ஐ.நா. சபை வளாகத்தில் அமெரிக்க அதிபர் புஷ் பாகிஸ்தானின் அதிபர் பர்வேஸ் முஷாரப்பை சந்தித்துப் பேசியிருக்கிறார். ஆப்கானின் காபூலை வடக்குக் கூட்டணி உடனடியாகக் கைப்பற்றாமல் பார்த்துக் கொள்வதாக முஷாரப்பிற்கு புஷ் வாக்குறுதி அளித்திருக்கிறார். அதன்படி ஆப்கானில் ஓர் இடைக்கால அரசை நிறுவுவதற்கான முயற்சிகள் முடியும்வரை காபூலுக்குள் நுழையவே வேண்டாம் என்று வடக்குக் கூட்டணியிடம் புஷ் வலியுறுத்தினார்.

"தெற்கை நோக்கிச் செல்லும்படி எங்கள் நண்பர்களை நாங்கள் ஊக்குவிப்போம்... ஆனால், காபூல் நகருக்குள் நுழைந்துவிடக் கூடாது. இந்தப் போர்த் தந்திரத்தின் மூலம் எங்களுடைய இராணுவ நடவடிக்கையின் நோக்கத்தை நாங்கள் சாதிக்க முடியும்" என்று நவம்பர் 10-ந் தேதி ஜார்ஜ் புஷ் செய்தியாளர்கள் கூட்டத்தில் அறிவித்தார். ஆனால், இரண்டாம் நாளே புஷ்ஷின் வார்த்தைகளைத் தட்டிக் கழித்துவிட்டு காபூல் நகருக்குள் வடக்குக் கூட்டணிப் படை நுழைந்துவிட்டது.

இராணுவ ரீதியில் தாலிபானுக்கு பெரும் பின்னடைவாகக் கருதப்படும் இந்த நிகழ்வுகள், உண்மையில் அரசியல் ரீதியில் சாதகமாக அமைந்துவிட்டது. காபூலில் ஒரு மாற்றுக் கைக்கூலி அரசை இடைக்கால ஏற்பாடாக நிறுவுவதற்கு அமெரிக்கா - பிரிட்டனுக்கு மேலும் சிலகாலம் தேவையாக இருந்தது. உண்மையைச் சொல்வதானால், ஆப்கான் மீது விமானத் தாக்குதலைத் தொடங்குவதற்கு முன்பாகவே, போருக்கான தயாரிப்பில் ஈடுபடுவதற்கு முன்பாகவே, ஆப்கானில் ஒரு மாற்றுக் கைக்கூலி அரசை நிறுவுவதற்கான முயற்சிகளில் அமெரிக்கா இறங்கிவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com



கூறு போடப்படும் ஆப்கான்: தலைநகர் காபூல் உள்ளிட்ட சில நகரங்களைக் கட்டுப்படுத்தும் பர்ஹானுதின் ரப்பானி (இடது); மசார்-இ-ஷெரிப் நகரைத் தனது பிடிக்குள் வைத்திருக்கும் அப்துல் ரஷீத் தோஸ்தம் (நடுவில்); நங்கர்ஹர் பகுதியில் ஆதிக்கம் செலுத்தும் அப்துல் காதிர் (வலது).

முதல் வேளையாக, கடந்த செப்டம்பரி லேயே அமெரிக்க அமைச்சர்கள் இத்தாலியின் ரோம் நகரில் தஞ்சமடைந்திருக்கும் ஆப்கானின் முன்னாள் கொடுங்கோல் அரசன் ஜாகீர் ஷாவை சந்தித்துப் பேரங்கள் பேசி முடித்தனர். அப்படியே நேராக பாகிஸ்தானுக்குப் போய் அதிபர் முஷாரப்புடன் உடன்பாடு கண்டனர். அதன்பிறகு அமெரிக்காவின் திட்டத்தைத் தூக்கிக் கொண்டு பிரிட்டனின் பிரதமர் டோனி பிளேயரும், ஜெர்மனியின் அதிபர் ஷ்ரெட்டரும், பிரான்சின் அதிபர் சிராக்கும் உலகம் முழுவதும் சுற்றி ஆதரவு திரட்டினர்.

அமெரிக்கத் திட்டத்தின் அடிப்படை நோக்கத்தை அறிந்து கொண்டால்தான் ஆப்கான் போரின் போக்கையும், பின்னணியையும் முழுமையாக புரிந்து கொள்ள முடியும். முன்னாள் சோவியத் ஒன்றியத்தைச் சேர்ந்த உஸ்பெகிஸ்தான், தாஜிகிஸ்தான், துருக்மேனிஸ்தான் ஆகிய மத்திய ஆசிய நாடுகளில் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள எண்ணெய் வளங்களை ஆப்கான், பாகிஸ்தான் வழியாகக் கொள்ளையிடவேண்டும்; அதற்கு வசதியாக ஆப்கானை மறுகாலனியாக்கி, ஒரு கைக்கூலி அரசை நிறுவவேண்டும் என்பதுதான் அமெரிக்காவின் இறுதி இலட்சியம். இதற்காகத்தான் முன்னர் முஜாகிதீன்களைப் பயன்படுத்தி சோவியத் இராணுவத்தை அமெரிக்கா துரத்தியடித்தது. பிறகு தாலிபான்களை உருவாக்கியது. இப்போது தாலிபான்கள் மீது போர் தொடுத்துள்ளது.

அதேசமயம், வடக்குக் கூட்டணியையும், இந்த நோக்கத்திற்காக முழுமையாக நம்பிப் பயன்படுத்த முடியாது. ஏனென்றால், ஷியா - சன்னி என்று மத ரீதியிலும், பத்தான், தஜிக், உஸ்பெக், ஹசரா என்று இனரீதியிலுமான மக்களைக் கொண்ட ஆப்கானில், 50 சதவீதத்தினர் பத்தான்கள். அதேபோல சன்னி மதப் பிரிவினர்தான் பெரும்பான்மையினர். மீதமுள்ள மூன்று இனத்தினரும், ஷியா மதப் பிரிவினரும் சிறுபான்மையினர்.

பெரும்பான்மையினரான சன்னி மதப் பிரிவு பத்தான்களின் ஆட்சிதான் ஆப்கானில் நீடித்திருக்க முடியும் என்று அமெரிக்கா நம்புகிறது. மத்திய ஆசியாவின் எண்ணெய் வளத்தைக் கொள்ளையடிப்பதற்கு பாகிஸ்தான் தரை வழியாக அமைகிறது. அது மட்டுமல்ல, சன்னி மதப் பிரிவினர்தாம் பாகிஸ்தானிலும் பெரும்பான்மையாக இருப்பதோடு, அந்நாட்டின் பக்தூனிஸ்தான் மாநிலமே பத்தானியர்களைத்தான் பெரும்பான்மையாகக் கொண்டிருக்கிறது. ஆகவே, மத உட்பிரிவு மற்றும் இன அடிப்படையில் ஆப்கானோடு நெருக்கமாக உள்ள பாகிஸ்தானின் ஊழியமும் தனக்குத் தேவையென்று அமெரிக்கா கருதுகிறது.

சோவியத் யூனியனின் படையையும், அதன் கைக்கூலி அரசையும் வீழ்த்திய பிறகு மேற்கண்ட இதே நோக்கத்துக்காகத் தான் பாகிஸ்தானோடு சேர்ந்து தாலிபான் என்ற மதவெறி கும்பலை உருவாக்கியது; அப்போது ஆப்கானில் நடந்த உள்நாட்டுப் போரைப் பயன்படுத்தி, காபூலில் இருந்து விரட்டி அடிக்கப்பட்ட தாஜிக், உஸ்பெக், ஹசரா ஆகிய சிறுபான்மை இனத்தவர்கள், சிறுபான்மை மதப்பிரிவினர், பத்தான்களிலேயே கொடிய யுத்தப் பிரபுக்களின் தலைமையிலான இராணுவக் குழுக்கள் சேர்ந்து அமைக்கப்பட்டதுதான் வடக்குக் கூட்டணி.

இப்போது பல வகையிலும் வரலாறு திரும்பி இருக்கிறது. அப்போது தாலிபான்களை உருவாக்கி வடக்குக் கூட்டணியை விரட்டிய அமெரிக்கா, இப்போது அதே தாலிபான்களை விரட்டுவதற்கு வடக்குக் கூட்டணியுடன் அணி சேர்ந்துள்ளது, உதவுகிறது. அப்போது கொரில்லாப் போர் தொடுப்பதற்காக காபூல் முதலிய நகரங்களை வடக்குக் கூட்டணி காலி செய்து விட்டு ஓடியது; எதிர்ப்பின்றிச் சில நாட்களிலேயே ஆப்கானின் பெரும்பகுதியை தாலிபான்கள் கைப்பற்றினர். இப்போது, தாலிபான்கள் நகரங்களைக் காலி செய்துவிட்டு ஓட, வடக்குக் கூட்டணி எதிர்ப்பின்றிக் கைப்பற்றிக் கொண்டது. இப்போது அமெரிக்கா அணிமாறியிருக்கிறது.

ஆனால், முக்கியமான ஒரு விடயம் என்னவென்றால், முன்பு ஆப்கானின் பெரும்பகுதியில் தாலிபான்களின் ஒரே தலைமையிலான ஆட்சி நிறுவப்பட்டது. இப்போதோ, ஆப்கானின் மீட்புக்கான இசுலாமிய தேசிய ஐக்கிய முன்னணி எனப்படும் வடக்குக் கூட்டணி வெவ்வேறு தேசிய இன, மதப் பிரிவுப் படைகளையும், பத்தான் யுத்த பிரபுக்களையும் கொண்டது. இதன் வெவ்வேறு இராணுவப் படைகள் தாலிபான் கைவிட்டுப் போன வெவ்வேறு பகுதிகளையும் நகரங்களையும் கைப்பற்றித் தத்தமது ஆதிக்கத்தில் கொண்டுவந்துள்ளன. இவர்கள் தங்களுக்குள் ஆதிக்கப் போரில் இறங்குவதற்கான நாள் வெகு தொலைவில் இல்லை.

வடக்குக் கூட்டணி ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தப்படி காபூல் நகருக்குள் தாஜிக் படையின் தளபதியான முகமது பாகிம் கானின் படை மட்டுமே நுழைந்து தனது கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும். ஆனால், ஹசரா - ஷியா பிரிவின் தளபதி சையத் உசைன் அன்வாரி தனது சமூகத்தினரின் பாதுகாப்பிற்கு அவசியமென்று கூறிக் கொண்டு ஆயிரம் ஹசரா படையினரை காபூலுக்கு அனுப்பினார். ஆப்கானைக் கூறு போட்டுக் கொள்வதற்காக வடக்குக் கூட்டணி உறுப்புகளுக்கிடையே மோதல் வெடிப்பதற்கான நாள் நெருங்குகிறது.

வடக்குக் கூட்டணிப் பிரிவுகளுக்குள் உள்ள பொதுநோக்கம் தாலிபான் பத்தானியர்களையும், பாக் - அரபு நாடுகளைச் சேர்ந்த சேவைப் படையினரையும் நரவேட்டையாடுவதும், ஆப்கானின் எதிர்கால அரசில் பத்தானியர்கள் பங்கேற்பதைத் தடுப்பதும்தான். மற்றபடி ஆப்கானை ஒருங்கிணைந்த நாடாக வைத்து ஆள்வதில் ஒற்றுமை கிடையாது.

எப்படியாவது தாலிபான்களை ஒழிக்க வேண்டும் என்கிற நோக்கில் மட்டுமே வடக்குக் கூட்டணிக்கு அமெரிக்கா தற்காலிக ஆதரவளிக்கிறது. மற்றபடி ஈரான், ருசியா, சீனா, இந்தியா ஆகிய நாடுகளின் ஆதரவை வெகுகாலமாகப் பெற்றுவரும் வடக்குக் கூட்டணியை ஆப்கானின் ஆட்சியில் உட்கார வைக்க வேண்டும்



படிப்பகம்

www.padippakam.com



ஆப்கானில் ஒரு கைக்கூலி - பொம்மையாட்சியை நிறுவுவதற்காக ஜெர்மனியில் நடந்த மாநாடு.

என்பது அமெரிக்காவின் நோக்கமல்ல.

அமெரிக்காவின் நோக்கமும், பாகிஸ்தானுக்கு அது கொடுத்துள்ள வாக்குறுதியும் ஆப்கானின் முன்னாள் மன்னர் ஜாகிர் ஷா அல்லது பத்தானிய யுத்தப் பிரபுக்கள் அல்லது கட்சி மாறிச் சரணடையும் தாலிபான் துரோகிகள் என்று யாராவது ஒரு சிலரை பத்தானியப் பிரதிநிதிகளாகக் காட்டி, அவர்களின் தலைமையில் மாற்றுக் கைக்கூலி அரசமைக்க வேண்டும் என்பதுதான். இந்தக் காரணங்களால்தான் வடக்குக் கூட்டணியின் முன்னேற்றத்தை, குறிப்பாக காபூலைக் கைப்பற்றுவதைத் தாமதப்படுத்தும் படி அமெரிக்கா பணித்திருந்தது.

ஆறு வாரங்கள் இரவு பகலாக இடைவிடாது நடத்தப்பட்ட விமான - ஏவுகணை குண்டு வீச்சுக்களால் தாலிபான்களின் நகர்ப்புற இராணுவ நிலைகள் அழிக்கப்பட்டன. வடக்குக் கூட்டணிக்கு எதிரான தாலிபான் இராணுவ அணிவரிசை தகர்க்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட பின்னடைவுகளை விட, அரசியல் தயாரிப்புகள் செய்வதற்காக அமெரிக்காவுக்கு அவகாசம் தரக்கூடாது என்பதற்காக, நகரங்களிலும், தாலிபானுக்கு எதிரான போர்முனைகளிலும் இருந்த இராணுவத் தளங்களைக் காலி செய்து கொண்டு தாலிபான்கள், பத்தானியர்கள் பெரும்பான்மையாக வாழும் மலைகளும் குகைகளும் நிறைந்த மாநிலங்களுக்குப் பின்வாங்கிக் கொண்டனர்.

அமெரிக்க, பாகிஸ்தான் அதிபர்கள் தமது அரசியல் இராணுவத் திட்டங்களை மறு உறுதிசெய்து கொண்டதற்கு மறுநாள் அதாவது நவ.9-இல் ஆப்கானின் வடமேற்கில் உள்ள மசார்-இ-ஷெரீப் நகரைக் கைவிட்டு தாலிபான்கள் பின்வாங்கினர். அன்று இரவே வடக்குக் கூட்டணியின் இஸ்மாயில் கான் தலைமையிலான படை அந்நகரைக் கைப்பற்றியது. சிக்கிய தாலிபான்கள் தற்கொலை செய்துகொள்ள, பாக்-அரபு சேவைப் படையினர் குரூரமான வக்கிரமான முறைகளால் கொல்லப்பட்டனர்.

அடுத்த மூன்று நாட்களில் மேற்கே ஹிராத், வடகிழக்கே தாக்கர், மத்திய ஆப்கானின் பாமியான் என்று அடுத்தடுத்த மாநிலங்களை வடக்குக் கூட்டணி கைப்பற்றியது. அதுவரை 10 சதவீத ஆப்கானை மட்டுமே கட்டுப்படுத்தி வைத்திருந்த வடக்குக் கூட்டணி மூன்றே நாட்களில் 50 சதவீத இடங்களைக் கைப்பற்றியது. அடுத்தடுத்து பல மாநிலங்கள் கைப்பற்றப்படுவதைக் கண்ட அமெரிக்கா - பிரிட்டன், பாகிஸ்தான் ஆகிய தாலிபான் எதிர்ப்பு அணி நாடுகள், முன்னேற வேண்டாம், அவசரப்பட வேண்டாம், காபூலுக்குள் நுழைய வேண்டாம் என்று வடக்குக் கூட்டணிக்குக் கட்டளையிட்டன. ஆனால், நவம்பர் 12-ந் தேதி இரவே தாலிபான்கள் காபூலைக் காலி செய்துவிட்ட செய்தி கேட்ட வடக்குக் கூட்டணிப்படை மறுநாள் காலையே காபூலுக்குள் குவிந்தது.

அப்போது ஐ.நா. சபை வளாகத்தில் மேற்கத்திய நாடுகளின் அதிபர்கள் அனைவரும் குழுமியிருந்தனர். அவர்கள் ஆப்கானில் தமது மாற்றுக் கைக்கூலி அரசமைக்கும் திட்டம் ஆமை வேகத்தில் நகரும் அதேசமயம், ஆப்கானின் பெரும்பகுதியும், நகரங்களும், குறிப்பாகத் தலைநகர் காபூலும் ஏவுகணை வேகத்தில் வடக்குக் கூட்டணியிடம் வீழ்வதைக் கண்டு கலங்கிப் போயிருந்தனர் என்று மேற்கத்திய செய்தியாளர்களே தெரிவிக்கின்றனர்.

கிழக்கே ஜலாலாபாத், தெற்கே குண்டூஸ் மற்றும் காந்தாரம் ஆகிய நகரங்கள் மட்டுமே தாலிபான்கள் வசமிருந்தன. பின்னர் குண்டூஸ் நகரையும் வடக்குக் கூட்டணிப் படை சுற்றி வளைத்துத் தாக்கிக் கைப்பற்றியது. ஹிராத்தைக் கைப்பற்றிய இஸ்மாயில் கானின் படை காந்தாரத்தை நோக்கி விரைந்தது கண்டு அமெரிக்கா மேலும் கவலையடைந்தது என்றுதான் சொல்லவேண்டும்.

ஆப்கான் மீது ஆறு வாரங்கள் குண்டு மாறிப் பொழிந்தும் ஒரு கையகலங்கூட தனது நேரடிக் கட்டுப்பாட்டில் இல்லாவிட்டால் தனது இராணுவ - அரசியல் நோக்கங்களை நிறைவேற்றுவது கடினமாகி விடும் என்று அஞ்சிய அமெரிக்கா அவசர அவசரமாக, பீரங்கி - கவச வண்டி உட்பட கனரக ஆயுதத் தளவாடங்களுடன் 2000-க்கும் மேற்பட்ட கடற்படை அதிரடி இராணுவத்தினரை காந்தாரத்தில் இறக்கி விட்டது. காந்தாரம் மற்றும் ஜலாலாபாத்தில் தனது தரைக் கட்டுப்பாட்டை நிறுவுவதற்கு முன்னோடியாக கம்பளவிரிப்பு குண்டு வீச்சைத் தொடர்ந்து நடத்துகிறது.

தற்போது தாலிபான் படைக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவையும் வடக்குக் கூட்டணிக்குக் கிடைத்துள்ள வெற்றியையும் ஆப்கான் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான தொடக்கம் என்று கூடக் கருத முடியாது; போரின் துவக்கம்தான் என்று மேற்கத்திய போர் வல்லுநர்களே கூறுகின்றனர். காபூல் நகர் வீழ்த்தப்பட்ட மறுநாள் தாலிபான்களின் தலைவர் முல்லா ஓமர் காந்தாரத்திலுள்ள ஷரியத் வானொலியில் உரையாற்றும்போது, ''தீய சக்திகளிடம் இருந்து இனிமேலும் பின்வாங்குதல் கிடையாது. எழுந்து நின்று போரிடுவதற்கான சமயம் வந்துவிட்டது'' என்று முழங்கினார். ''ஆப்கானுக்குள் அமெரிக்கப் படை நுழைந்தவுடனே கொரில்லாப் போர் துவங்கிவிடும்'' என்று தாலிபான் தளபதிகள் கூறுவதாக பாகிஸ்தான் பத்திரிகைகள் எழுதுகின்றன. ''இதை ரசியாவின் செசன்யாவில் நடப்பதைப் போன்ற புனிதப் போராக மாற்றுவோம்'' என்கிறார்கள் அவர்கள். அமெரிக்க அதிபர் புஷ்ஷோ, செசன்யா கொரில்லாப் போரை எப்படி எதிர்கொள்கிறார்கள் என்று ரசிய அதிபர் புடினிடம் ஆலோசனை கலக்கிறார்.

''தாலிபான்களும் அல்கொய்தாக்களும் அழிந்து போய்விடவில்லை. தங்கள் இராணுவ உடுப்புக்களைக் களைந்துவிட்டு ஆப்கானிலும் பாகிஸ்தானிலும் பரவிக் கிடக்கும் பத்தானிய சமூகத்தில் கரைந்து போகிறார்கள். அவர்கள் எப்போது வேண்டுமானாலும் தமது நீண்ட பத்தானிய ஆடைக்குள்ளிருந்து இயந்திரத் துப்பாக்கிகளை உருவிக் கண்ணில் படும் எதிரிகளைச்


படிப்பகம்

www.padippakam.com

சரமாரியாகச் சுட்டுத் தள்ளுவார்கள்'' என்று அமெரிக்கப் போர் வல்லுனர்கள் பதறுகிறார்கள்.

அதைவிட முக்கியமாக, பாகிஸ்தானின் பத்தானிய சமூகத்துக்குள் கரைந்து போகும் தாலிபான்களையும் வளைகுடா நாடுகளின் அராபிய சமூகத்துக்குள் கரைந்து போகும் அல்கொயிதாக்களையும் என்ன செய்ய முடியும்! அவர்கள் மீது அமெரிக்க விமானங்கள் - ஏவுகணைகள் தாக்க முடியுமா? உள்ளூர்ப் படைகளை ஏவிவிட முடியுமா?

அமெரிக்காவின் தேசிய விவகாரங்களுக்கான முன்னாள் ஆலோசகர் மைக் ஒ அன்லான் கூறுகிறார்: ''தாலிபான் அல் கொயிதாவுக்கு எதிரான வெற்றி சமீபத்தில் இல்லை. ஒருவேளை அது வராமற் போகலாம். இதோ வென்று விட்டோம் என்று எப்போதுமே கூறமுடியாமல் போகலாம். அல்கொயிதாவைப் போன்ற அமைப்புகள் தோன்றிக் கொண்டே இருக்கும்.'' அமெரிக்காவை எத்தகைய பீதி பிடித்தாட்டிக் கொண்டிருக்கிறது என்பதற்கு இதுவே சாட்சியம்!

முற்றும்

● ஆர்.கே.

# ‘ஞானப்பாலும்’... ‘‘கம்யூனிசப் பாலும்’’

மூன்று வயதிலேயே கணிப்பொறியை இயக்கும் சிறுவர்கள்; அல்லது மிகச் சிறிய வயதிலேயே தண்ணீரில் மீன் குஞ்சு போல் நீந்தும் சிறுவர்கள்; திருக்குறளைத் தலைகீழாக ஒப்பிக்கும் சிறுவர்கள்... என இப்படி பல 'சாதனை'ச் சிறுவர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இப்படி 'ஞானப் பால்' குடித்த சிறுவர்களைப் போல தங்கள் பிள்ளைகளையும் வளர்க்க நடுத்தர வர்க்கம் படாதபாடு பட்டுக் கொண்டிருக்கிறது. அதேசமயம், 'ஞானப்பால்' குடிக்காத, ஆனால், 'கம்யூனிசப் பால்' குடித்து வளர்ந்த சிறுவர்களைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? அப்படிப்பட்ட ஒரு நூறு சிறுவர்களைப் பார்த்து தஞ்சை நகரமே வியந்து நிற்கிறது.

இந்த வியப்புக்குக் காரணம், தஞ்சையில் இயங்கி வரும் ம.க.இ.க., பு.மா.இ.மு., வி.வி.மு., ஆ.ஒ.பா.ச அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள், ஆதரவாளர்களின் குடும்பத்துச் சிறுவர்கள் கடந்த 24.11.2001 அன்று, ஆப்கான் மீது அமெரிக்கா ஏவிவிட்டுள்ள மேலாதிக்கப் போரை எதிர்த்து நடத்திய ஆர்ப்பாட்ட பேரணிதான்!



பேரணி நடந்த ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் நெடுகிலும் மூன்று வயதான சிறுவர்கள் கூட, ''பாய், பாய், வாஜ்பாய்! அமெரிக்காவிற்கு ஆபீஸ் பாய்! உலக பயங்கரவாதி அமெரிக்காவே ஆப்கானை விட்டு வெளியேறு! குழந்தைகளை கொல்லாதே!'' என உற்சாகத்தோடு முழக்கங்களை எழுப்பி வந்தனர். பேரணியின் முடிவில் சிறுவர்கள் உலக பயங்கரவாதி அமெரிக்காவை அம்பலப்படுத்தி பேசிய பொழுது, ''இரண்டு கட்டிடம் நொறுக்கப்பட்டதற்கும், சில ஆயிரம் பேர் கொல்லப்பட்டதற்கும் ஆப்கானை அழிக்கலாம் என்றால், ஜப்பானில் ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களை அணுகுண்டுகளை வீசி அழித்த, இரண்டு இலட்சம் ஜப்பானிய மக்களைக் கொன்று குவித்த அமெரிக்காவை என்ன செய்வது?'' என இவர்கள் எழுப்பிய கேள்வி, வீதியில் நடந்து சென்ற ஒவ்வொருவரையும் கண்டியிழுத்தது!

''முளைச்சு மூணு இலை கூட விடலை; அதற்குள்ள இப்படி அரசியல் பேசுகிறார்களே!'' என இச்சிறுவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியைப் பார்த்து விக்கித்துப் போனவர்களும் உண்டு; அதற்காகவே முகஞ்சுளித்துக் கொண்டு போனவர்களும் உண்டு.

''முளைச்சு மூணு இலை விடாத'' சிறுவர்கள் கூடத் தொலைக்காட்சியில் வரும் பன்னாட்டு நிறுவனங்களை விளம்பரப் பாடல்களை வார்த்தை பிசகாமல் பாடும் பொழுது, அந்நிறுவனங்களின் ''பிராண்டு''களைப் பெயர் சொல்லிக் கேட்டு அடம் பிடிக்கும் பொழுது, இந்தச் சிறுவர்கள் பன்னாட்டு நிறுவனங்களின் அடியாளான அமெரிக்காவை எதிர்த்துப் போராடுவதில் ''வியப்பதற்கு'' எதுவும் கிடையாது!

மேல்தட்டு - நடுத்தர வர்க்கத்துக்கு குழந்தைகளை, தொலைக்காட்சி விளம்பரங்கள் வளர்க்கின்றன என்றால், இந்தச் சிறுவர்களை நாட்டுப் பற்றும், தொழிலாளி வர்க்கப் பற்றும், கம்யூனிசப் பற்றும் வளர்க்கிறது. ''உம்மாச்சி'' தொடங்கி சாதி, மதம், பாலியல் வக்கிரம் என்ற கண்ட குப்பைகளும், கல்வி மூலம், பெற்றோர்கள் மூலம் தொலைக்காட்சி பெட்டி மூலம், திரைப்படம் மூலம், பத்திரிகைகள் மூலம் அந்தக் குழந்தைகளின் மண்டையினுள் பலாத்காரமாகத் திணிக்கப்படும் பொழுது, அந்தக் குப்பைகளுக்கு எதிராகப் போராட வேண்டும் என இந்தக் குழந்தைகளிடம் அரசியல் போதிப்பதில் தவறொன்றும் கிடையாது! இந்த அரசியலை நீங்கள் முகஞ்சுளித்துப் பார்த்தால், உங்கள் அறிவு நாணயத்தை மட்டுமல்ல, நாட்டுப் பற்றையும் சந்தேகிக்க வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, ''குண்டுகளை வீசிக் குழந்தைகளையும், அப்பாவி மக்களையும் கொல்லாதே!'' என அமெரிக்காவைக் கண்டித்துப் போராடுவதற்கு என்ன பெரிய அரசியல் அறிவு வேண்டிக்கிடக்கிறது? பொது அறிவும், மனிதாபிமானமும் இருந்தாலே போதும். இதற்கு மேலும் யாராவது இச்சிறுவர்கள் நடத்திய பேரணியையும், ஆர்ப்பாட்டத்தையும் பார்த்து முகத்தைச் சுளித்துக் கொண்டால், அவர்களின் நாட்டுப்பற்றை மட்டுமல்ல, அவர்களெல்லாம் மனிதர்கள்தானா என்பதைக் கூட நாம் சந்தேகிக்க வேண்டும்.

''நாட்டின் எதிர்காலம் எப்படியிருக்குமோ?'' என உண்மையான அக்கறையோடு மருகிக் கொண்டிருப்பவர்களே, இந்தச் சிறுவர்களின் போராட்டத்தில் நம்பிக்கையின் ஒளிக்கீற்று தென்படவில்லையா?

தகவல்:
ம.க.இ.க., பு.மா.இ.மு., வி.வி.மு.,
தஞ்சை.


படிப்பகம்

www.padippakam.com



# அமெரிக்க "மான்சாண்டோ"வின் உயிரியல் பயங்கரவாதம்

"கொடுமை கொடுமைன்னு கோயிலுக்குப் போனானாம்; அங்க ஏழு கொடுமை எதிரிலே நின்னுச்சாம்!'' என்று ஒரு பழமொழி உண்டு. அந்தக் கதையாக பார்டுபட்டு பருத்தி விவசாயம் செய்த குஜராத் விவசாயிகள் இன்று இருதலைக் கொள்ளி எறும்பாகத் தத்தளிக்கிறார்கள். நேற்றுவரை பாரம்பரிய விதைகளைப் பயன்படுத்தி பருத்தி விவசாயம் செய்து, பூச்சிகள் - புழுக்களின் தாக்குதலால் பெருத்த நட்டமடைந்து, கடன் சுமையால் தத்தளித்த விவசாயிகள், இந்த பருவத்தில் பூச்சி - புழுக்கள் தாக்காத வீரிய இரக விதை புதிதாக சந்தைக்கு வந்துள்ளதை அறிந்து பெருமளவில் வாங்கிப் பயிரிட்டார்கள். அப்பருத்திப் பயிர் பூ பூத்து, அறுவடைக்குக் காத்திருக்கும் நிலையில், அப்பயிர்கள் அனைத்தும் நச்சுத்தன்மை கொண்டவை; அவற்றை அழிக்க வேண்டும் என்கிறது, மத்திய அரசின் சுற்றுச் சூழல் அமைச்சகத்தின் கீழுள்ள மரபணு மாற்ற தொழில்நுட்ப ஒப்புதல் கமிட்டி. ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் அல்ல; ஏறத்தாழ 11,000 ஹெக்டேர் அளவுக்கு இத்தகைய நச்சு விதைகளைக் கொண்டு விளைந்த பருத்தியால் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் பல கோடிகளுக்கு நட்டமடைந்து என்ன செய்வது என்று புரியாமல் தணலில் விழுந்த புழுவாகத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

குஜராத்தின் வட மாவட்டங்கள், பாரம்பரியமாக பருத்தி விவசாயம் நடக்கும் பிராந்தியமாகும். பயிரைத் தாக்கும் பூச்சிகளும் பூ மலரும் போது தாக்கும் புழுக்களும், பருத்தி விவசாயிகளுக்கும் மிகப் பெரிய தொல்லைகள். எவ்வளவு பூச்சி மருந்து அடித்தாலும் மீண்டும் மீண்டும் தாக்கும் இப்புழு - பூச்சிகளால் விவசாயிகள் பெருத்த நட்டமடைந்தார்கள். குஜராத் மட்டுமின்றி மகாராஷ்டிரா, ஆந்திரா, பஞ்சாப் முதலான மாநிலங்களிலும் புழு-பூச்சிகளின் தாக்குதலால் பெரிதும் நட்டமடைந்து கடன் தொல்லை தாளாமல் பூச்சி மருந்து குடித்து தற்கொலை செய்து கொண்ட விவசாயிகள் ஏராளம்.

இந்நிலையில், உலகின் இரண்டாவது மிகப் பெரிய ஏகபோக விதைக் கம்பெனியான அமெரிக்காவின் மான்சாண்டோ நிறுவனம், புழு தாக்காத வீரிய இரக விதைகளைக் கண்டறிந்துள்ளதாகக் கூறிக் கொண்டு இந்தியாவில் நுழைந்தது. இதன் பி.டி. எனப்படும் மரபணு மாற்றம் செய்யப்பட்ட நுண்ணுயிரியைக் கொண்ட பருத்தி விதைகள், விதை முளைத்த காலத்திலிருந்து பருத்திப் பயிரில் புழு -. பூச்சிகளை அழிக்கும் நஞ்சை தன்னுள்ளேயே உற்பத்தி செய்து கொண்டே இருக்கும். மரபணு மாற்றம் செய்யப்பட்ட இந்த விதைகளால், புழு - பூச்சி தாக்காமல் பருத்தி நல்ல விளைச்சலைக் கொடுக்கும் என்று விளம்பரப்படுத்தப்பட்டது. மகாராஷ்டிரா வீரிய இரக விதைக் கம்பெனியான ''மகிகோ''வின் பங்குகளை அதிக விலைக்கு வாங்கி அதனுடன் கூட்டுச் சேர்ந்த மான்சாண்டோ நிறுவனம், தனது மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளை இந்தியாவில் விற்பனை செய்ய முயன்றது.

ஆனால் மான்சாண்டோவின் மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளால் சுற்றுச் சூழல் பெரிதும் பாதிக்கப்படுவதோடு, மறு முளைப்புத் திறன் அற்ற அதன் விதைகளால் விவசாயமும் விவசாயிகளும் நாசமாக்கப்படுவர் என்று பல்வேறு சுற்றுச்சூழல் அறிவியலாளர்களும் விவசாய அமைப்புகளும் எதிர்ப்பு தெரிவித்துப் போராடின. எனவே, மான்சாண்டோ கூட்டு சேர்ந்துள்ள மகிகோ நிறுவனமும், இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகமும் களப் பரிசோதனைகள் நடத்தி விளைவுகளை ஆராய்ந்த பின்னர், மைய அரசின் மரபணுமாற்ற தொழில்நுட்பக் கமிட்டியிடம் ஒப்புதல் பெற்று அதன் பிறகே இந்த விதைகளை விற்பனை செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில் குஜராத்தைச் சேர்ந்த நவபாரத் எனும் விதைக் கம்பெனி ''நவபாரத்-151'' என்ற வீரிய இரக பருத்தி விதைகளை விற்பனை செய்தது. இந்த விதைகளைப் போட்டால் பூச்சி மருந்து அடிக்கத் தேவையில்லை என்றும் விளம்பரம் செய்தது. 450 கிராம் கொண்ட சாதாரண விதைகள் ரூ. 550 என்றால் நவபாரத் விதைகள் ரூ. 800 முதல் ரூ. 1250 வரை விற்றது. விவசாயிகள் நம்பிக்கையோடு நவபாரத் விதைகளைப் பெருமளவில் வாங்கிப் பயிரிட்டார்கள். இப்போது அறுவடைக்குக் காத்திருக்கும் இப்பயிர்கள் அனைத்தும் மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளிலிருந்து விளைந்த நச்சுப் பருத்தி என்று தெரிய வந்துள்ளது. இவற்றைப் பறிமுதல் செய்து பயிர்களை அழிக்க வேண்டும் என்கிறது மத்திய சுற்றுச்சூழல் துறையின் கீழுள்ள மரபணுமாற்ற தொழில்நுட்ப ஒப்புதல் கமிட்டி. அப்படிச் செய்தால் விவசாயிகளுக்குப் பெருத்த நட்டமாகிவிடும் என்று விவசாயிகளின் நண்பனாகக் காட்டிக் கொள்கிறது குஜராத்தை ஆளும் பா.ஜ.க. அரசு.

இது ஒருபுறமிருக்கட்டும். மரபணு மாற்றம் செய்யப்பட்ட மான்சாண்டோவின் விதைகள் எப்படி நவபாரத் நிறுவனத்


அறுவடைக்குக் காத்திருக்கும் பி.டி. பருத்தி:
அழிக்கச் சொல்கிறது அரசு; வாழ்வைப் பறித்தது மான்சாண்டோ.





படிப்பகம்

www.padippakam.com




## "சிறு விதையைக் கொண்டே அமெரிக்க மான்சாண்டோ நிறுவனம் விவசாயத்தையும் நாட்டையும் அடிமைப்படுத்தி ஆதிக்கம் செய்யக் கிளம்பியுள்ளது."

துக்குக் கிடைத்தது? அனுமதியின்றி எப்படி விற்பனை செய்தது? மாநில அரசு இதை ஏன் ஆரம்பத்திலேயே தடுக்கவில்லை? - இப்படி அடுக்கடுக்கான கேள்விகளை விவசாயிகளும் சுற்றுச்சூழல்வாதிகளும் எழுப்புகிறார்கள். ஏனெனில், மான்சாண்டோவின் விதைகளை மகிகோ நிறுவனம் மட்டுமே பயிரிட அனுமதி பெற்றுள்ளது. அதுவும் களப் பரிசோதனைகள் செய்வதற்குத்தானே தவிர, விவசாயிகளிடம் விற்பனை செய்வதற்காக அல்ல. மகிகோ நிறுவனம் கடந்த மூன்று ஆண்டுகளாக களப் பரிசோதனைகள் நடத்திவரும் அதேசமயம், இன்னும் ஓராண்டுக்குப் பரிசோதனைகள் நடத்திய பிறகே, முடிவுகளை அறிவிக்க இயலும் என்கிறது. இந்நிலையில் மான்சாண்டோவின் மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகள் எப்படி நவபாரத் விதைக் கம்பெனிக்கு கிடைத்தது என்பதுதான் கேள்வி.

முதலாளித்துவம் என்பது மோசடியையும் இலாப வெறியையும் அடிப்படையாகக் கொண்டது என்பது யாவரும் அறிந்த உண்மை. அதிலும் உலகின் ஏகபோக விதைக் கம்பெனியான மான்சாண்டோ, இந்திய சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு தனது விதைகளைக் களப்பரிசோதனை நடத்தி முடிவுகள் வெளிவரும் வரையில் பொறுமையாகக் காத்திருக்குமா? மிக விரைவாகக் கொள்ளையடிக்கவும், இரகசிய சதிகளின் மூலம் தனது விதைகளைப் புழக்கத்திற்குக் கொண்டு வந்து, பிறகு அதிலிருந்து மீளமுடியாத நச்சுச் சூழலில் விவசாயிகளைச் சிக்கவைக்கவும் இந்நச்சு விதைகளை நவபாரத் விதைக் கம்பெனி மூலம் திட்டமிட்டே புழக்கத்திற்கு விட்டுள்ளது. மகிகோ நிறுவனத்தைத் தவிர வேறு எவரும் இவ்விதைகளைப் பயன்படுத்தவோ விற்பனை செய்யவோ அனுமதிப்பதில்லை என்று தானே உருவாக்கிய காப்புரிமைச் சட்டத்தை மீறி, இத்தகைய நயவஞ்சக சதியை மான்சாண்டோ அரங்கேற்றியுள்ளது. களப் பரிசோதனைகளுக்குப் பிறகு மான்சாண்டோ விதைகளை ஏகபோகமாக விற்பனை செய்து ஆதாயமடையத் திட்டமிட்டிருந்த மகிகோ நிறுவனம், முதலுக்கே மோசம் ஏற்பட்டு, இப்போது கள்ளத்தனமாக நவபாரத் நிறுவனம் ஆதாயமடைவதைப் பார்த்து, தொழில் போட்டியால் இம்மோசடியை மெதுவாக அம்பலப்படுத்தி விட்டது. இல்லையேல் இந்தச் சதிகளும் மோசடிகளும் வெளிவராமல் மூடி மறைக்கப்பட்டிருக்கும்.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட, மறுமுளைப்புத் திறனற்ற மலட்டு விதைகள் என்று அறிவிக்காமலேயே இந்த விதைகள் விவசாயிகளிடம் விற்பனை செய்யப்பட்டுள்ளன. முதலாவதாக, இது மிகப் பெரிய கிரிமினல் - மோசடி. இரண்டாவதாக, அரசிடம் ஒப்புதல் பெறாமலேயே களப் பரிசோதனை நடக்கும்போதே இவை சட்டவிரோதமாக விற்பனை செய்யப்பட்டுள்ளன. மூன்றாவதாக, மலட்டு விதைகள் மூலம் இந்திய விவசாயிகள் பாரம்பரியமாக அனுபவித்து வரும் விதை சேகரிப்பு - பராமரிப்பு - மறுவிநியோக உரிமையை இம்மோசடி நிறுவனங்கள் அறிவுசார் சொத்துரிமை எனும் ''காட்'' ஒப்பந்தத்தின்படியான காப்புச் சட்டத்தைக் கொண்டு பறித்து வருகின்றன. இந்திய விவசாயத்தையும் விவசாயிகளையும் நாசமாக்கும் மிகப் பெரிய கிரிமினல் - பயங்கரவாதத்தில் இறங்கியுள்ள அமெரிக்காவின் மான்சாண்டோ நிறுவனம் மற்றும் அதன் கூட்டாளிகளான மகிகோ, நவபாரத் விதைக் கம்பெனிகளையும் தண்டித்து நட்ட ஈடு கோருவதை விடுத்து, அமெரிக்க விசுவாசிகளான ஆளும் பா.ஜ.க. கும்பல் விவசாயிகளை நட்டத்தில் தள்ளி தண்டிக்கிறது.

மான்சாண்டோவின் நச்சு விதைகளால் நிலமும் நீரும் காற்றும் நஞ்சாவது மட்டுமல்ல; அதன் இலைகளைத் தின்னும் கால்நடைகளும் பாதிக்கப்படும். அவற்றிடமிருந்து பெறும் பாலைக் குடிக்கும் மக்களுக்கும் பாரிய விளைவுகள் ஏற்படும். மேலும் மான்சாண்டோவின் விதைகள் மறுமுளைப்புத் திறனற்ற மலட்டு விதைகள் என்பதால், ஒரு பருவத்தில் பருத்தி பயிரிட்டு விதைகளைச் சேகரித்து அதை அடுத்த பருவத்தில் விவசாயிகள் விதைக்கவும் முடியாது. மீண்டும் விதைகளுக்காக மான்சாண்டோவிடமே கையேந்தி நிற்க வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், சிறு விதையைக் கொண்டே அமெரிக்க மான்சாண்டோ நிறுவனம், விவசாயத்தையும் நாட்டையும் அடிமைப்படுத்தி ஆதிக்கம் செய்யக் கிளம்பிவிடும்.

பருத்தி மட்டுமல்ல;, நெல், கரும்பு, கோதுமை என அனைத்து பயிர்களையும் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து, ஏழை நாடுகளை அடிமைப்படுத்த ஏகாதிபத்திய வல்லரசுகள் கிளம்பியுள்ளன. தென்கிழக்காசிய நாடுகளில் ''வைட்டமின்-ஏ'' சத்து சேர்க்கப்பட்ட ''தங்க அரிசி'' எனப்படும் மரபணு மாற்றம் செய்யப்பட்ட நெல் விதைகளைக் கொண்டு ஏகாதிபத்திய விதைக் கம்பெனிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. இந்தியாவில் ''வைட்டமின்-ஏ'' சத்து குறைவினால் பலர் மாலைக்கண் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறி, இந்நிறுவனங்கள் தென்னிந்தியாவைக் குறிவைத்து நெல் விதைகளை விற்க முயற்சித்து வருகின்றன.

இன்று பருத்தி; நாளை நெல் என்று விவசாயத்தையும் விவசாயிகளையும் நாசமாக்கி நாட்டை அடிமைப்படுத்தக் கிளம்பியுள்ள ஏகாதிபத்திய வல்லரசுகளின் மறுகாலனியாதிக்க சதியின் ஓர் அங்கம்தான் இத்தாக்குதல்கள். விவசாயிகளின் வாழ்வைச் சூறையாடும் பேரபாயமாக வளர்ந்துவிட்ட இப்பயங்கரவாதிகளை முறியடிக்க, உழைக்கும் மக்களுடன் இணைந்து விவசாயிகள் மறுகாலனியாதிக்க எதிர்ப்புப் போரில் பெரும்படையாய்த் திரண்டெழ வேண்டும். அதற்கு, பன்னாட்டுக் கம்பெனிகளுக்குப் பாதச் சேவை செய்துவரும் ஆளும் பா.ஜ.க. கும்பலையும் ஓட்டுக் கட்சி துரோகிகளையும் அம்பலப்படுத்தி முறியடிப்பது முதற் தேவையாகும்.

● மனோகரன்



படிப்பகம்

www.padippakam.com



## ஆந்த்ராக்ஸ் கிருமி யுத்தம்: அமெரிக்காவின் பொய்கள் – சதிகள்

பின்லேடன் தலைமையிலான இசுலாமிய பயங்கரவாதிகள் உயிரியல் இரசாயன யுத்தத்தை நடத்தக் கிளம்பி விட்டதாகவும் ஆந்த்ராக்ஸ் கிருமிகளைக் கடிதங்கள் மூலம் அனுப்பி வருவதாகவும் அமெரிக்க ஏகாதிபத்திய பயங்கரவாதிகள் உலகைப் பயபீதியூட்டி வருகின்றனர். இதை ஏகாதிபத்திய செய்தி ஊடகங்கள் ஊதிப் பெருக்கி, ஆப்கான் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்புப் போருக்கு நியாயம் கற்பித்து வருகின்றன. பயங்கரவாதப் பீதியூட்டி உலக மக்களைத் தம் பக்கம் திரட்டிக் கொள்ள கீழ்த்தரமான முயற்சிகளில் இறங்கியுள்ளன.

ஆனால், இசுலாமிய பயங்கரவாதிகள்தான் இத்தகைய கிருமி யுத்தத்தை இரகசியமாக நடத்தியுள்ளார்கள் என்பதற்கு இதுவரை எந்த ஆதாரமும் காட்டப்படவில்லை. அதேசமயம் அமெரிக்காவிலேயே உள்ள பயங்கரவாத கும்பல்கள் இத்தகைய ஆந்த்ராக்ஸ் கிருமி தாக்குதலை நடத்தியுள்ளதற்கு ஏராளமான சம்பவங்கள் ஆதாரமாக உள்ளன. 1995-ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடந்த ஓக்லகோமா குண்டு வெடிப்புக்கு உள்நாட்டுப் பயங்கரவாதக் கும்பல்களே காரணம். இதையொட்டி கைது செய்யப்பட்ட டிமோதி மெக்வெய்ஹ் என்பவன், "தேசிய கூட்டணி" எனும் கிறித்துவ இன வெறி பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்தவன். இருப்பினும், இக்குண்டுவெடிப்புக்கு இசுலாமிய பயங்கரவாதிகளே காரணம் என்று குற்றம் சாட்டிய அமெரிக்கா, சூடான் மற்றும் ஜயர் நாடுகளில் இப்பயங்கரவாதிகள் பதுங்கியுள்ளதாகக் கூறி அந்நாடுகளின் மீது விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தியது.



பீதியில் அலறும் அமெரிக்கா: ஆந்த்ராக்ஸ் கிருமி யுத்தத்தைத் தடுக்க பாதுகாப்பு ஏற்பாடுகள்.

அமெரிக்காவில் கிறித்துவ - வெள்ளை இனவெறி பிடித்த பயங்கரவாத கும்பல்கள் பல்வேறு குழுக்களாக பல பெயர்களில் இயங்கி வருகின்றன. உயிரியல் இரசாயன ஆயுதங்கள், ஆந்த்ராக்ஸ் கிருமி, அதிநவீன ஆயுதங்களைக் கொண்டு இப்பயங்கரவாதக் கும்பல்கள் திடீர் தாக்குதல்களையும் நடத்துகின்றன. கருப்பினத்தவரை "சாக்கடை மக்கள்" என்று குறிப்பிடும் இக்கும்பல்கள், கருப்பின மக்கள் மீதும் குடியிருப்புகள் மீதும் ஏராளமான தாக்குதல்களை நடத்தியுள்ளன. அமெரிக்காவில் வாழும் யூதர்கள் அமெரிக்க அரசைப் பயன்படுத்திக் கொண்டு ஆதிக்கம் செலுத்தி வருவதாகக் குற்றம் சாட்டும் இப்பயங்கரவாதிகள், கிறித்துவ வெள்ளை இன அமெரிக்காவே தமது லட்சியம் என்றும் அறிவித்துள்ளனர். இராணுவச் சீருடையுடன் ஆயுதப் பயிற்சிகளை மேற்கொள்ளும் இப்பயங்கரவாதிகள் டெக்சாஸ், மேற்கு வர்ஜீனியா, மவுண்டானா, இடாஹோ முதலான பிராந்தியங்களில் பலமாக உள்ளனர். அதிநவீன ஆயுதங்களுடன் தகவல் தொடர்பு வலைப் பின்னலையும் கொண்டுள்ள இப்பயங்கரவாதிகள் "சுடுகருவிகளும் சுதந்திரமும்" என்ற பெயரில் அவ்வப்போது செய்திக் கடிதங்களையும் வெளியிடுகின்றனர்.

இவ்வெள்ளையின கிறித்துவ பயங்கரவாதிகள், 1999-ஆம் ஆண்டு ஜனவரியில் கலிபோர்னியா மாநிலத்தில் 30-க்கும் மேற்பட்ட அரசு உயர் அதிகாரிகளுக்கு ஆந்த்ராக்ஸ் கிருமி கடிதங்களை அனுப்பி எச்சரித்துள்ளனர். கடந்த ஆண்டில் நாடெங்கும் இத்தகைய ஆந்த்ராக்ஸ் கிருமி கடித நிகழ்ச்சிகள் ஆயிரத்துக்கும் மேலாக நடந்துள்ளன. இதுதவிர, ஆந்த்ராக்ஸ் கிருமி கொண்ட வெள்ளைப் பொடி கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக பொய்த் தகவல்களைப் பரப்பி பயபீதியூட்டி அச்சுறுத்திய சம்பவங்களும் ஏராளமாக நிகழ்ந்துள்ளன. நாடு முழுவதும் ஏறத்தாழ 40,000 பேருக்கும் மேலாக இத்தகைய பயங்கரவாதிகள் இரகசியமாக இயங்குவதாக அமெரிக்க உளவு நிறுவனமான எஃப்.பி.ஐ. (FBI) ஒப்புக் கொண்டுள்ளது. இத்தகைய கிறித்துவ வெள்ளை இன பயங்கரவாதிகளைப் பற்றிய பல உண்மைகளை "தி ஹெரால்டு" எனும் அமெரிக்க நாளேடு கடந்த அக்டோபரில் வெளியிட்டுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக ஆந்த்ராக்ஸ் கிருமிகளைக் கொண்ட வெள்ளைப் பொடி தயாரிக்கும் இரசாயன ஆலைகள் அமெரிக்காவிலும் ரசியாவிலும் மட்டுமே உள்ளன.

இசுலாமிய பயங்கரவாதிகள் ஆந்த்ராக்ஸ் கிருமி யுத்தத்தை நடத்தவே மாட்டார்கள் என்பதல்ல; ஆனால் அவர்களையே விஞ்சும் வகையில் அமெரிக்காவிலேயே உள்ள இனவெறி பயங்கரவாதிகள் ஏற்கனவே இத்தகைய கிருமி யுத்தத்தை நடத்தியுள்ளார்கள் என்ற உண்மையை மூடி மறைத்துவிட்டு, தனது மேலாதிக்க நோக்கங்களுக்காக இசுலாமிய பயங்கரவாதிகள் மீது பழிபோட்டு அமெரிக்க வல்லரசு கீழ்த்தரமான சதிகளில் இறங்கி பயபீதியூட்டி வருகிறது. முதலாளித்துவ பத்திரிகைகளும் தொலைக்காட்சி நிறுவனங்களும் அமெரிக்க விசுவாசத்தோடு இதை அப்படியே வாந்தியெடுத்து பொய்கள் - வதந்திகளைப் பரப்பும் மிகப்பெரிய மோசடியில் ஈடுபட்டு வருகின்றன.

## உ.வ.க.வின் ஆதிக்கம் பலியாகும் சீனா

போலி கம்யூனிஸ்டுகளால் சோசலிச நாடாகச் சித்தரிக்கப்படும் சீனாவில், இவ்வாண்டின் முதல் ஆறு மாதங்களில் மட்டும் சுரங்கம் மற்றும் ஆலை விபத்துகளில் 47,000 தொழிலாளர்கள் பலியாகியுள்ளனர். குறிப்பாக சுரங்க விபத்துகளில் மட்டும் 3000-க்கும் மேலானோர் கொல்லப்பட்டுள்ளனர். இது தவிர "வியர்வைக் கூடங்கள்" என குறிப்பிடப்படும் செருப்பு மற்றும் ஆயத்த ஆடை தயாரிப்பு தொழிற்கூடங்களில் போதிய காற்றோட்டமில்லாத நச்சுச் சூழல் காரணமாக நோய் தாக்கி பல நூறுபேர் மெள்ள மெள்ள



படிப்பகம்

www.padippakam.com





''தொழிலாளர் நலச் சட்டங்களை மாற்றியமைக்காதே!'' - வெளிநடப்புப் போராட்டத்தில் பெய்ஜிங் நகர எஃகு ஆலைத் தொழிலாளர்கள்.

கொல்லப்பட்டு வருகிறார்கள்.

1995-ஆம் ஆண்டில் சீன அரசு இயற்றிய தொழிலாளர் சட்டப்படி, 8 மணி நேர வேலையும் வாரத்தில் இரு நாட்கள் ஓய்வும், பணியிடங்களில் பாதுகாப்பான வேலை நிலைமையும், மருத்துவ - சுகாதார வசதிகளும் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளன. ஆனால் தனியார் - அந்நியப் பெருமுதலாளித்துவத்துக்கு தாராள அனுமதியும் ஏற்றுமதி அடிப்படையிலான தொழில்களுக்கு தாராள் சலுகையும் அளித்து உலக வர்த்தகக் கழகத்தில் உறுப்பு நாடாக சீனா இணைந்த பிறகு, இச்சட்டங்களும் சலுகைகளும் குப்பைக் கூடையில் வீசியெறியப்பட்டு விட்டன.

இப்போது சீனாவின்தனியார் - அந்நிய முதலாளிகளின் ஆலைகளில் 12 மணிநேரம் தொழிலாளர்கள் வேலை செய்ய வேண்டும். அங்கே கூலியும் குறைவு; பாதுகாப்பு ஏற்பாடுகளும் குறைவு; வாரத்திற்கு ஒருநாள்தான் ஓய்வு. கடுமையான வேலையாலும் முறையான தூக்கமின்மையாலும் அங்கே விபத்துகள் பெருகி வருவதாக மருத்துவர்களே ஒப்புக் கொள்கின்றனர். இதை விட, இத்தகைய தனியார் - அந்நிய பெரு முதலாளித்துவ நிறுவனங்களில் இலக்கை எட்ட விரைவாகவும் கடுமையாகவும் வேலை செய்யாத தொழிலாளர்கள் தண்டிக்கப்படும் கொடுமையும் தொடர்கிறது. பல தொழிலகங்களில் இலக்கை எட்டாத தொழிலாளர்களை வெய்யிலில் நிற்க வைப்பது, ஆலையைச் சுற்றி ஓடிவரச் செய்வது முதலான கொடுமைகள் கேள்வி முறையின்றித் தொடர்கின்றன.

இக்கொடுமைகளை எதிர்த்தும் பாதுகாப்பான வேலை நிலைமைகளுக்காகவும் ''உலக வர்த்தகக் கழகத்தின் கட்டளைக்கேற்ப தொழிலாளர் சட்டங்களைத் திருத்தாதே! உரிமைகளைப் பறிக்காதே! பாதுகாப்பான வேலை நிலைமையை உத்தரவாதப்படுத்து!'' என தொழிலாளர்கள் ஆங்காங்கே போராட்டங்களில் இறங்கி வருகிறார்கள். அண்மையில் தலைநகர் பெய்ஜிங்கிலேயே, ஏற்கனவே உள்ள தொழிலாளர் சட்டங்களை மாற்றியமைக்காமல் செயல்படுத்தக்கோரி போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

ஆமை புகுந்த வீடும் அமீனா புகுந்த வீடும் உருப்படாது என்பது பழமொழி. உலகவர்த்தக கழகத்தில் உறுப்பினராகச் சேரும் நாடும், அன்னிய மூலதன ஆதிக்கத்துக்குட்பட்ட நாடும் உருப்படாது என்பது இன்றைய புதுமொழி. அதற்கு இன்னுமொரு சான்றாக 'சோசலிச' சீனா திகழ்கிறது.

## வங்கத்தில் இருப்பது என்ன வகை ஆட்சி?

மே. வங்கத் தலைநகர் கொல்கத்தாவில் கடந்த நவம்பரில் பல்வேறு நாடுகளது பிரபல இயக்குனர்களின் படங்களைத் திரையிடும் திரைப்படவிழா நடைபெற்றது. இவ்விழாவில் ரசியாவின் பிரபல இயக்குனரான அலெக்சாண்டர் சொகுரோவின் ''டாரஸ்'' எனும் படமும் திரையிடப்பட்டது. இப்படம் பாட்டாளி வர்க்க ஆசானும் மகத்தான சோவியத் சோசலிசப் புரட்சியின் தந்தையுமாகிய தோழர் லெனினை கீழ்த்தரமான முறையில் இழிவுபடுத்தி அவரை இறுகிய மனம் கொண்ட சர்வாதிகாரியாகவும் அடிக்கடி விபச்சாரிகளிடம் செல்லும் காமவெறியனாகவும் சித்திரிக்கிறது. அப்படத்தில் வரும் தோழர் ஸ்டாலின் பாத்திரம் கோமாளி போல இழிவுபடுத்தப்பட்டுள்ளதோடு யூத இன எதிர்ப்பாளராகவும் போர்வெறியும் ஆதிக்க வெறியும் கொண்டவராகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

இப்படத்தைப் பார்த்த பார்வையாளர்கள், இத்தகைய வக்கிரத்தைச் சகிக்க முடியாமல், இப்படத்தைத் திரையிடக் கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனால் பாட்டாளி வர்க்கக் கோட்டையாக போலி கம்யூனிஸ்டுகளால் சித்தரிக்கப்படும் இடது முன்னணி ஆட்சியாளர்கள் இப்படியொரு ஆபாசப் படம் திரையிடப்படுவதைக்கண்டு கொதித்தெழவில்லை. உடனடியாகத் தடைவிதிக்கவும் உத்தரவிடவில்லை. மாறாக, வெறும் பார்வையாளர்களாகக் கைகட்டி நின்றனர். போர்குணமிக்க அமைப்புகளாகச் சித்தரிக்கப்படும் போலி கம்யூனிஸ்டுகளின் தொழிற்சங்கம், மாணவர் - இளைஞர் சங்கங்களும் பூனைகளாகச் சுருண்டு கிடந்தன. பின்னர் 'மார்க்சிஸ்டு' முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யாவைச் சந்தித்து, இப்படம் திரையிடப்படுவதை நிறுத்துமாறு மனு கொடுத்தன. அதன் பின்னரும் போலி கம்யூனிஸ்டு முதல்வர் ''இப்படிப்பட்ட மோசமான படம் எப்படி விழாவுக்கு வந்தது என்று தெரியவில்லை'' எனப் புலம்பினாரே தவிர, எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதைத் தொடர்ந்து வங்கத்துச்சிங்கம் என போலி கம்யூனிஸ்டுகளால் சித்தரிக்கப்படும் முன்னாள் முதல்வர் ஜோதிபாசு, ''எப்படி இம்மாதிரியான படம் தயாரிக்கப்பட்டது? இதை விழாவில் திரையிட எப்படி தேர்ந்தெடுத்தார்கள்?'' என்று அங்கலாய்த்துவிட்டு அடங்கிப் போனார்.

அதேசமயம், இப்படம் திரையிடப்படுவதை எதிர்த்து அறிவாளர்களும், திரைப்பட விமர்சகர்களும் ''சேத்தனா சமிதி'' எனும் திரைப்படக் கலை குழுவினரும் நவம்பர் 12-ந் தேதியன்று திரையரங்கிலேயே ஆர்ப்பாட்டம் செய்தனர். மார்க்சிஸ்டு ஆட்சியாளர்களோ ''படம் எடுப்பது அவர்களது சுதந்திரம்; அதைத் தடை செய்யச் சொல்லி போராடுவது அநாகரீகம்'' என்று ஆர்ப்பாட்டத்தினர் மீது போலீசை ஏவி தடியடி தாக்குதல் நடத்தி பலரது மண்டையை உடைத்துள்ளனர்.

பதவிக்காக ஆளும் வர்க்கக் கொள்கைகளை விசுவாசமாகச் செயல்படுத்தி வருவது போதாதென்று, உலகப் பாட்டாளி வர்க்கத் தலைவர்களை வக்கிரமாக இழிவுபடுத்துவதைக் கூட போலி கம்யூனிசத் துரோகிகள் வெட்கமின்றி அனுமதிக்கிறார்கள் என்றால், மே.வங்கத்தில் இருப்பது என்ன வகையான ஆட்சி என்பதை 'மார்க்சிஸ்ட்' கட்சியின் தன்மானமுள்ள அணிகள்தான் முடிவு செய்ய வேண்டும்.

## மீன்பிடிக்கத் தடை வாழ்விழந்த மீனவர்கள்

கடந்த ஜூலை 11-ஆம் தேதி மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள உத்தரவில் கடல்வாழ்

www.padippakam.com





உள்நாட்டு அகதிகளாய் அவதிப்படும் மீனவத் தாய்மார்கள்.

உயிரினங்கள் உட்பட 53 வகை மீன் இனங்களைப் பிடிக்க மீனவர்களுக்குத் தடை விதித்துள்ளது. தடையை மீறினால் ஏழு ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கப்படுமென அறிவித்துள்ளது. தமிழக, கேரள, ஆந்திர கடற்கரையோரங்களிலுள்ள இலட்சக்கணக்கான மீனவக் குடும்பங்கள் இத்தடை உத்தரவால் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளன.

"கடலில் வலை வீசும்போது இன்னின்ன வகை மீன்கள் மட்டுமே கிடைக்க வேண்டுமென்று கடலுக்கோ, வலைக்கோ தடைபோட முடியாது; சுறா, சங்கு, திருக்கை, கணவாய் உள்ளிட்ட மீன் வகைகளைப் பிடிக்காமல் மீன்பிடி தொழிலே நடத்த முடியாது; ஏற்கனவே வரையறுக்கப்பட்ட கடல் எல்லையைத் தாண்டினால் உயிருக்கு உத்திரவாதமில்லாத சூழ்நிலையில் இது போன்ற தடையுத்தரவுகள் கடலோர பாதுகாப்புப் படையினர் அச்சுறுத்தவும், பணம் பறிக்கவுமே உதவியாக இருக்கும்" என்கின்றனர் மீனவர்கள்.

பாரதீய ஜனதா அரசாங்கமோ அரிய கடல்வாழ் உயிரினங்கள் அழிந்து வருவதைத் தடுக்கவே இச்சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதாக நியாயப்படுத்துகிறது. இன்று நேற்றல்ல, ஆண்டாண்டு காலமாய் மீனவர்கள் இந்த மீன்களைப் பிடித்துதான் வாழ்ந்து வருகின்றனர். அப்போதெல்லாம் அழியாத மீன் வகைகள் இப்போது அழிவதாக கூறுவது அப்பட்டமான மோசடிதான்.

இச்சட்டமும், இதற்கு சொல்லப்படும் காரணங்களும் மீன்பிடி தொழிலையே வாழ்க்கையாக கொண்டுள்ள மீனவர்களையே குறி வைத்து தாக்குகிறது; மாறாக, நமது கடல் வளத்தைக் கொள்ளையிட்டு வரும் அந்நிய பன்னாட்டுக் கம்பெனியிடம் இவை செல்லுபடியாவதில்லை. இக்கம்பெனிகளின் மீன்பிடி கப்பல்கள் பல கிலோ மீட்டர் தூரத்திற்கு இராட்சத வலைவிரித்து கடல் உயிரினங்கள், மீன்கள், தாவரங்களிலிருந்து குஞ்சுகள், முட்டைகள் வரைவாரியெடுக்கின்றன. அதில் தேவையானவற்றை எடுத்துக் கொண்டு தேவையற்ற, இறந்த மீன்களை மீண்டும் கடலிலேயே வீசி விடுகின்றன. இது தவிர பெப்சி நிறுவனம் கடல்பாசியிலிருந்து அகார் அகார் என்னும் உணவுப் பொருளைத் தயாரிக்கும் மிகப் பெரிய தொழிற்சாலையொன்றை தொடங்கப் போவதாகவும் அதற்காக கிழக்குக் கடற்கரைப் பகுதியை குத்தகைக்குப் பெற அரசிடம் முயற்சிகள் செய்து வருவதாகவும் செய்திகள் வருகின்றன.

'சுதேசி' நாடகமாடும் பாரதீய ஜனதா அரசாங்கம் கடல் எல்லைகளை மீறி வளத்தைக் கொள்ளையிடும் பன்னாட்டு கம்பெனிகளைத் தாராளமாக அனுமதித்துக் கொண்டே சொந்த நாட்டு மீனவர்களுக்கு தடைபோடுவது அயோக்கியத்தனம். மீனவர்களின் எதிர்ப்பை அறுவடை செய்து ஓட்டுச்சீட்டாக மாற்றிக் கொள்ள துடிக்கும் வைகோ., ஜெயலலிதா முதலானவர்கள் இத்தடையை நீக்க வேண்டுமென்பதோடு பிரச்சனையை முடித்து விடுகின்றனர்; இது நாட்டை அடகு வைக்கும் திட்டத்தின் ஒரு பகுதியென்பதை மூடி மறைத்து விடுகின்றனர். இந்தத் துரோகிகளை எதிர்த்துப் போராடாமல் மீனவர்கள் தங்கள் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள முடியுமா?

## பற்றியெரியும் மலகான்: மீண்டும் இந்துவெறியாட்டம்

**நா**சிக் மாவட்டத்திலுள்ள மலகான் மகாராஷ்டிராவில் விசைத்தறிக்குப் பெயர் பெற்ற நகரம். எழுபது சதம் முசுலீம்கள் வாழும் இந்நகரம், கடந்த அக்டோபர் மூன்றாவது வாரங்களில் போலீசு - இந்துமதவெறியர்களின் சூறையாடலுக்குப் பிறகு மயானமாகக் காட்சியளிக்கிறது.

ஆப்கான் மீது அமெரிக்கா நடத்தும் போர் தாக்குதலில் அப்பாவி முசுலீம்கள் கொல்லப்படுவதைக் கண்டித்து அக்டோபர் - 19ஆம் தேதி மலகானில் ஜனதா தள முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் சிலர் ஒசாமா பின்லேடனின் உருவம் பதித்து அட்டைகளைப் பிடித்துக் கொண்டு "பின்லேடன் ஜிந்தாபாத்" என்று முழக்கமும் எழுப்பினர். அன்றிலிருந்தே பாதுகாப்பு என்ற பெயரில் போலீசு படைகளைக் குவித்தும், அணிவகுப்பு பேரணி நடத்தியும் அரசு பீதியூட்டி வந்தது.

அக்டோபர்-26-ஆம் தேதி மலகானிலுள்ள ஜும்மா மசூதியில் வெள்ளிக்கிழமை தொழுகை முடிந்து வந்தவர்களிடம் சிலர் அமெரிக்காவின் பொருட்களைப் புறக்கணிக்கும்படி உருதுமொழியில் அச்சடிக்கப்பட்ட துண்டறிக்கைகளை விநியோகித்துள்ளனர். அத்துண்டறிக்கைகளைப் பறிமுதல் செய்து போலீசு விசாரித்துக் கொண்டிருக்கும்போதே உள்ளூர் இந்துமதவெறியர்கள் ஒரு முசுலீம் கடையைத் தீயிட்டு கொளுத்தினர். இதனால் ஏற்பட்ட பரபரப்பைப் பயன்படுத்தி தடியடியிலிருந்து துப்பாக்கிச் சூடுவரை நடத்தி வெறியாட்டம் போட்டது போலீசு. இதில் 14 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அடுத்த சில மணி நேரங்களிலேயே நாசிக் மட்டுமல்லாது தூலியா, ஜல்கான்

மலகான்: உள்ளாட்சித் தேர்தல் வரும் பின்னே; இந்துவெறி கலவரம் நடக்கும் முன்னே.




படிப்பகம்

www.padippakam.com



மாவட்டங்களிலும் முசுலீம் கடைகள் தீயிடப்பட்டன. முசுலீம்கள் அடையாளங்கண்டு தாக்கப்பட்டனர்.

முசுலீம்களை எதிரியாகக் காட்டியே கட்சியை வளர்த்து வரும் சிவசேனா, பா.ஜ.க. இந்துமதவெறியர்களுக்கு செப்டம்பர் 11 அன்று நியூயார்க்கில் உலகவர்த்தக மையம் தாக்கப்பட்ட சம்பவம், முசுலீம்களை ஒடுக்கவும், தேசிய வெறியூட்டி முசுலீம்களைப் பயங்கரவாதிகளாகச் சித்தரிக்கவும் வாய்ப்பாக அமைந்து விட்டது. இந்நிலையில் மகாராஷ்டிராவில் இன்னும் சில மாதங்களில் வரப்போகும் உள்ளாட்சி தேர்தலையொட்டி இந்துக்களின் ஓட்டைக் குறிவைத்து சிவசேனாவும், பா.ஜ.க.வும் நடத்தியுள்ள வெள்ளோட்டம்தான் மலகான் 'கலவரம்'.

செத்துப்போன சமஸ்கிருதத்தைப் போலல்லாது, பாரம்பரிய செழுமையும், இலக்கிய வளமும், பரந்துபட்ட மக்களால் பேசப்பட்டும் வருவதுதான் உருதுமொழி. ஆனால் உருது மொழி என்பதே ஏதோ பயங்கரவாதிகள் ரகசியத்தைப் பரிமாறிக் கொள்ள உருவானதைப் போல் பிரசுரங்களைப் பறிமுதல் செய்துள்ளது போலீசு. இத்தன்னக்கும் அமெரிக்காவின் பொருட்களைப் புறக்கணிக்கும்படி பிரச்சாரம் செய்வதொன்றும் தேசத் துரோகமல்ல. சரியானதுதான் என்பதை நாட்டுப்பற்றுடைய எவரும் ஒப்புக் கொள்வர். இப்பிரச்சாரம் 'இந்து-முசுலீம் கலவரமாக' மாறுவதற்கு எந்த அடிப்படையுமில்லை. ஆனால், மலகானில் முசுலீம்கள் மீது நடந்த தாக்குதல் திட்டமிட்டே நடந்துள்ளதைதான் போலீசின்தாக்குதலும், முசுலீம் கடைகள், உடைமைகள் சூறையாடப்பட்ட விதமும் வெளிப்படுத்துகின்றன. ஆளும் 'மதச்சார்பற்ற' காங்கிரசு கூட்டணி அரசாங்கமோ கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டுள்ளது.

1992-இல் பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது மும்பையில் ஆர்.எஸ்.எஸ். சிவசேனா கும்பல் நடத்திய கோர தாண்டவத்தை விசாரித்து அறிக்கை சமர்பித்த கிருஷ்ணா கமிசன், "போலீசிலேயே ஒருப்குதியினர் இந்து மத அடிப்படைவாதிகளாக செயல்பட்டு முசுலீம்களை வேட்டையாடியுள்ளனர்" என்று கூறுகிறது. மலகான் சம்பவங்களும் இதையே மீண்டும் உறுதிபடுத்தியுள்ளன. அதனால்தான் சிவசேனா, "போலீசு ஹமாரா ஸாத் ஹை!" (போலீசு எங்கள் பக்கம்) என்பதை ஒரு முழக்கமாகவே எழுப்புகின்றன.

ஆனால் பார்ப்பன எதிர்ப்பு, பகுத்தறிவு, சிறுபான்மையினர் நலன் பேசும் கருணாநிதி, வை.கோ., இராமதாசு போன்றவர்கள் பா.ஜ.க. வை ஆதரிப்பதும், புலிகள் ஆதரவு பேசுவதால் சிவசேனாவைச் சில தமிழின அமைப்புகள் ஆதரவு சக்தியாக பார்ப்பதும் கடைந்தெடுத்த அயோக்கியத்தனமன்றி வேறென்ன?

## தமிழகத்துக்கு ஒரு பிரேமானந்தா இராஜஸ்தானுக்கு ஒரு ராம்ஜி மகராஜ்

இராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூருக்கு அருகிலுள்ளது ராம்குன்ச் கிராமம். 73 வயதான ராம்ஜி மகராஜ் என்ற சாமியார் இங்கு ஆசிரமம், அமைத்து பக்தகோடிகளுக்கு 'அருள்' வழங்கி வந்தான்.

ராம்ஜி மகராஜ் ராம்ஸ்னேகி என்ற இந்து மத அமைப்பொன்றின் மாவட்ட தலைவராகவும் இருப்பதால், அவருக்கும், முன்னாள் சிவசேனா மகளிர் அமைப்பின் தலைவரும், ஜெய்ப்பூர் இந்து மகா சபையின் செயலாளருமான சுதா சர்மாவுக்கு தொடர்பு ஏற்படுகிறது. சுதா சர்மா சாமியாரின் வற்புறுத்தலுக்கு இணங்கி ஆசிரமத்தின் 'முதல் தர பக்தையாக' குறுகிய காலத்தில் வளர்ந்து வருகிறார். ஏற்கனவே 17 ஆண்டுகளாக அந்த இடத்திலிருந்த கீதா கந்தேல்வால் இதனால் கோபமுறுகிறார்.

சிறிது காலம் சென்ற பிறகுதான் சுதா சர்மாவுக்கு ஆசிரமத்தின் இரகசியங்கள் தெரிய வருகின்றன. ராம்ஜி மகராஜ் தன்னிடம் மட்டுமின்றி ஆசிரமத்துக்கு வரும் பல பெண்களை நைச்சியமாக பேசியும், மிரட்டியும் தனது இச்சைக்கு பணிய வைப்பதை மறைந்திருந்து வீடியோவில் பதிவு செய்து கொள்கிறார் சுதா. பின்னர் சாமியாரிடமே அதைப் போட்டுக் காட்டி ஆசிரமத்தின் சொத்துக்களைத் தன் பெயருக்கு மாற்றும்படியும், இல்லையெனில் வீடியோ ஆதாரங்களை போலீசிடமும் பத்திரிகைகளிடமும் கொடுத்து விடுவதாக மிரட்டியுள்ளார்.

அரண்டு போன ராம்ஜி மகராஜ், கீதா கந்தேல்வால், கார் ஓட்டுனர் மாங்கே லாலுடன் சேர்ந்து செப்டம்பர் - 4 ஆம் தேதி சுதா சர்மாவைக் கோடாரியால் வெட்டிக் கொலை செய்துள்ளான். பிணத்தை 25 கி.மீ தூரமுள்ள ஒரு கிணற்றுக்குள் வீசிவிட்டு வழக்கம்போல் தனது பக்தர்களக்கு ஆசியும் வழங்கி வந்துள்ளான். சுதா சர்மா காணாமல் போனதைப் பற்றி விசாரிப்பவர்களின் வாயை அடைக்க தனது பக்தர்களிடமே ஒரு லட்சம், ஐம்பதாயிரம் என நிதியும் திரட்டியுள்ளான்.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு சுதா சர்மாவின் பிணம் அடையாளம் காணப்பட்டதும் ராம்ஜி மகராஜ், கீதா கந்தேல் வால், கார் ஓட்டுனர் மாங்கே லால் மூவரையும் போலீசு கைது செய்து சிறையில் அடைத்துள்ளது.

ஆசிரமம் என்ற பெயரில் புதிது புதிதாய் சாமியார்கள் தோன்றி இப்படி கொட்டமடிப்பதும், அங்கு நடக்கும் கொலை, கற்பழிப்புகள் அம்பலமாகி 'சாமியாரின் லீலைகள்' என்று பரபரப்பாய் பத்திரிகைகளில் வெளிவருவதும் இது முதன்முறையல்ல. ஏனெனில் ராம்ஜி மகராஜ், பிரேமானந்தா, சாயிபாபா, சந்திராசாமி போன்ற சாமியார்கள். ஆண்டவனை மட்டுமே நம்பி ஆசிரமம் நடத்துவதில்லை. அனைத்து அரசியல் கட்சிகளின் ஆதரவுடனும், பெரும் பணமுதலைகளின் பினாமியாகவுமே இவர்கள் அவதரிக்கிறார்கள்.

1980-ஆம் ஆண்டு 13 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்த குற்றத்துக்காக ஆறுமாதம் சிறை தண்டனை பெற்றவன்தான் ராம்ஜி மகராஜ். அதனாலென்ன? இந்த ஆண்டு ஆசிரமத்தில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்ட பா.ஜ.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர் கிரிதாரி லாலு போன்ற அரசியல்வாதிகளுக்கு கிரிமினல் கடவுளாக தெரிவதும், இந்துமகா சபை முதலான இந்துமதவெறி அமைப்புகள் மகராஜ் போன்றவர்களை ஊட்டி வளர்ப்பதும் திட்டமிட்ட ரீதியில் தொடரத்தான் செய்கிறது.

புராணக் குப்பைகளை 'வரலாறாகவும்' சோதிடத்தை விஞ்ஞானமாகவும் போதிக்கும் கல்வி திட்டத்தையும், அதை நடைமுறைப் படுத்தும் இந்துமத வெறி ஆட்சியாளர்களையும் வீழ்த்தாமல் சட்டத்தின் மூலம் இவர்களை ஒழிக்கவும் முடியாது.

கிரிமினல் - காமவெறி இந்து சாமியார் ராம்ஜி மகராஜ்; இன்னுமொரு பிரேமானந்தா.



www.padippakam.com

# முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம்.

சீனா முதலிய நாடுகளை இன்னமும் சோசலிச நாடுகள்தாம் என்று சி.பி.(எம்) கட்சி சாதித்து வருகிறது. அதற்குக் காரண மாக அங்கெல்லாம் அரசுக்குச் சொந்தமான பொதுத்துறைத் தொழில்கள்தாம் மிகையாக இருக்கின்றன; அதோடு பாட்டாளி வர்க்க அரசு அதிகாரத்தில் உள்ளது என்று அக்கட்சி கூறுகின்றது. ஆனால், இக்கார ணங்கள் உண்மையானவை அல்ல என்பது அக்கட்சிக்கே தெரியும்.

ஏனென்றால், அந்நாடுகளில் அரசுக்குச் சொந்தமான பொதுத்துறைத் தொழில் களின் பங்கு வெகுவாகக் குறைந்து வருவ தாக சி.பி.(எம்) கட்சியே ஒப்புக் கொண்டி ருப்பதையும், இதற்கு முரணாக பொதுத் துறைத் தொழில்கள்தாம் மிகையாக இருக் கின்றன என்று பித்தலாட்டம் செய்வதையும் கடந்த பகுதியில் பார்த்தோம். அதேபோல அந்நாடுகளில் பாட்டாளி வர்க்கம் அரசு அதிகாரத்தில் உள்ளது என்கிற வாதமும் உண்மை அல்லவென்பதும் அக்கட்சிக்குத் தெரியும். அதனால்தான் அந்நாடுகளில் உள்ள அரசுகள் எப்படி பாட்டாளிவர்க்க அரசுகள் என்பதை சி.பி.(எம்) கட்சி விளக் குவதுமில்லை; விவாதிப்பதுமில்லை. அந்நாடுகளில் *''கம்யூனிஸ்டு கட்சிகள் ஆட்சியில் இருக்கின்றன. ஆகவே, பாட்டாளி வர்க்கம் அரசு அதிகாரத்தில் இருக்கிறது''* என்ற எளிமையான விளக்கம் மட்டுமே தரப்படுகிறது.

சோசலிச அமைப்பில் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம், பாட்டாளி வர்க்க சர்வாதிகா ரத்துக்கும் கம்யூனிச கட்சிக்கும் உள்ள உறவு, சோசலிசசமுதாயத்தில் ஜனநாயகம், மக்களுக்கும் அரசுக்கும் உள்ள உறவு போன்றவை குறித்து கடந்த பத்தாண்டு களில், குறிப்பாக சி.பி.(எம்) கட்சித் திட்டத் திருத்தத்தை ஒட்டி தனது நிலையை அக்கட்சி விளக்கி வந்திருக்கிறது. அக்கட்சி நேர்மையாக இருக்கும் பட்சத்தில் இவை குறித்த தனது நிலைக்குப் பொருத்தமான அரசியல் அமைப்புதான் சீனா முதலிய நாடு களில் இருக்கிறதா என்பதைப் பரிசீலித்துப் பார்க்க வேண்டியது அதன் கடமையாகும்.

ஆனால், சி.பி.(எம்) கட்சி அவ்வாறு செய்யவில்லை. அதற்குப் பதிலாக சீனா முதலிய நாடுகளின் அரசமைப்பு குறித்து எவ்விதக் கருத்தும் கூறாது இருட்டடிப்புச் செய்கிறது. சீனா, வடகொரியா, வியத்நாம் மற்றும் கியூபா ஆகிய நாடுகளில் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு அமைப் புதான் இன்னமும் நீடிப்பதாக அந்நாடுகள் கூறிக் கொள்கின்றன. தற்போதைய நிலை மைகளில் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் அவசியமில்லை என்பதுதான் சி.பி.(எம்) கட்சியின் நிலை.

*''முதலாளித்துவத்தால் சுற்றி வளைக் கப்பட்ட நிலையில் அல்லது உள்நாட்டு யுத்த காலங்களில் இந்த வடிவமுறை (பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்) என்பது அவசியமானது. அதே சமயத்தில் வேறு தருணங்களில், குறிப்பாக இரண்டாவது உலக யுத்தத்திற்கு பின், சோவியத் யூனி யனில் சோசலிச நிர்மாணத்தை நிலைப் படுத்தும் காலத்தில் இதற்கு அவசிய மில்லை.''* (ஆதாரம்: மார்க்சிஸ்ட், ஜூலை 2000, பக்.24)

இப்படிச் சொல்லும் சி.பி.(எம்) கட்சி என்ன செய்ய வேண்டும்? ஒன்று, சீனா முத லிய நாடுகள் முதலாளித்துவத்தால் சுற்றி வளைக்கப்பட்ட நிலையில் அல்லது உள்நாட்டு யுத்தகாலத்தில் இருப்பதாகக் கூறி அங்கு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நீடித்திருப்பதை நியாயப்படுத்த வேண்டும்; அல்லது தற்போதைய தருணத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் அவசிய மில்லை என்று கூறி விமர்சிக்க வேண்டும். இவை எதையும் செய்யாது மௌனம் சாதித்து மோசடி செய்கிறது.

மேலும், சோவியத் ஒன்றியம் மற்றும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சோசலி சத்தின் வீழ்ச்சியிலிருந்து பல பாடங்களைப் போதிப்பதைப் போல வியாக்கியானங் களை சி.பி.(எம்) கட்சி அடுக்குகிறது.

*''மக்களுக்கு உரிமைகளை வழங்குவ தோடு நின்றுவிடாமல் அதைப் பயன்ப டுத்துவதற்கான திறனையும் சோசலிசம் கட்டாயம் அளித்தாக வேண்டும். ஆயினும் பல்வேறு நாடுகளில் சோசலிச நிர்மாண முறைகளில் இரண்டு வித தவ றுகள் நிகழ்ந்தன. ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் வர்க்கத்தின் சர்வாதி காரம் என்பதற்குப் பதிலாக வர்க்கத்தின் முன்னணிப் படையின் அதாவது கட்சியின் சர்வாதிகாரம் உருவாகியது. சிறிது காலத்திற்குப் பின் இது கட்சித் தலைமையின் சர்வாதிகாரமாக மாறியது. ஒட்டு மொத்த வர்க்கத்தையும் உழைப் பாளி மக்களையும் பிரதிநிதித்துவப் படுத்தக் கூடிய சோஷியலிஸ்ட் அரசு என்பதற்கு மாற்றாக, கட்சிக்குள் இருக்கக் கூடிய ஒரு சிறிய பிரிவினரை பிரதிநிதித் துவப்படுத்தக்கூடியதாக மாற்றம் கண்டது. இது வித்தியாசமான நிலைக்கு அடிகோலியது. அதாவது கட்சியின் உயர் நிலைக் குழுவின் முடிவுகள் அனைத்து மக்கள் மீதும் திணிக்கப்பட்டது''* (ஆதாரம்: மார்க்சிஸ்ட், ஜூலை 2000, பக்: 25-26)

இது, கம்யூனிச எதிரிகள் பல பத்தாண் டுகளாக கூறிவரும் அவதூறைச் சாரமாகக் கொண்டது. ''கம்யூனிச நாடுகளில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற பெயரில், கட்சி சர்வாதிகாரமும், கட்சியி டத்தில் மத்தியக் குழு சர்வாதிகாரமும், மத்தியக் குழுவினிடத்தில் செயற்குழு

பொங்கி வழியும் பெப்சி: இது அமெரிக்காவின் நியூயார்க் நகரமல்ல; 'சோசலிச' சீனாவின் ஷாங்காய் நகரம்.





படிப்பகம்

www.padippakam.com

சர்வாதிகாரமும், செயற்குழுவினிடத்தில் பொதுச் செயலாளரின் சர்வாதிகாரமும் நடக்கின்றன'' என்று பழிதூற்றப்பட்டது. இதை ஏகாதிபத்திய அவதூறு என்று இவ்வளவு காலமும் மறுத்து வந்த சி.பி.(எம்) கட்சியின் புதிய சித்தாந்தக் குரு சீத்தாராம யெச்சூரிதான் இப்படி வேறு வார்த்தைகளில் கூறுகிறார்.

முன்னாள் சோசலிச நாடுகளைப் பற்றி இவ்வாறு கூறும் சீத்தாராம யெச்சூரி இன்னாள் சோசலிச நாடுகள் என்று கூறப்படுபனவற்றில் எத்தகைய நிலைமை இருக்கிறது என்று கூறவேண்டாமா? மேலும் அவர், ***''இந்த வர்க்கத்தின் அதிகார முறைகள் என்பது சோசலிசம் பல்வேறு கட்டங்களில் முன்னேறிச் செல்வதற்கேற்ப வளர்ச்சி அடைவதாக இருக்க வேண்டும்.'' ''இத்தகைய வடிவங்கள் மாறுதலுக்குள்ளாவது என்பது மக்கள் பெருமளவில் உயர்நிலையில் அரசின் செயல்பாடுகளில் பொருத்தமான கட்டத்தில் பங்கேற்காத நிலையில் நடைபெறுகிறது. மேலும் சோசலிச அமைப்பின் கீழ் உள்ள மக்களின் அபிலாஷைகள் வளர்ச்சியடைகையில் அவை ஒடுக்கப்படுவது, அந்நியமாதலுக்கும் அமைதியின்மைக்கும் வகை செய்கிறது''.*** (மேற்படி நூல் பக்: 24-25)

இவ்வாறான உபதேசங்கள் செய்யும் சி.பி.(எம்) கட்சி, சீனா முதலிய நாடுகளில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் தொடர்வதாகக் கூறப்படுவதை எதிர்க்காததோடு சீனத்தின் தியன் ஆன்மென் சதுக்கத்தில் நடந்த மாணவர் கலகத்தை ஏகாதிபத்திய - முதலாளித்துவ சதி என்று கூறுகிறது. சி.பி.(எம்) கட்சியின் மேற்கண்ட வியாக்கியானத்தின்படி தியன் ஆன்மென் சம்பவங்கள் நடப்பதற்குக் காரணம் மக்களின் அபிலாஷைகள் வளர்ச்சியடைவதும், அவை ஒடுக்கப்படுவதும் அதன் விளைவாக அந்நியமாதலும் அமைதியின்மையும் ஏற்படுவதாகக் காணவேண்டும். அதற்கு மாறாக சீன அரசின் நிலையைத்தான் சி.பி.(எம்) ஆதரிக்கிறது.

அதேசமயம், ***''சோசலிசத்தின் கீழான ஜனநாயகம் என்பது முதலாளித்துவத்தின் கீழிருப்பதைக் காட்டிலும் ஆழமானதாக மேம்பட்டதாக இருக்க வேண்டும்''*** என்றும் சி.பி.(எம்) கட்சி உபதேசிக்கிறது. இதை சீனா முதலிய நாடுகளுக்கு பொருத்திப் பார்க்க மறுக்கிறது. இதற்குக் காரணம் சோசலிசம் வீழ்ச்சியடைந்த நாடுகளின் படிப்பனை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், அதில் கம்யூனிஸ்டுக் கட்சியின் பாத்திரம் ஆகியவற்றில் சி.பி.(எம்) கட்சியின் நிலை - சீனா முதலிய நாடுகளில் காணப்படும் நிலைக்கு மாறானதாகவும் முரண்பாடாக உள்ளது. ஆனால், உலகமயம் - தனியார்மயம் - தாராளமயம் என்கிற பொருளாதார சீர்திருத்தம் குறித்த சி.பி.(எம்) கட்சியின் நிலை சீனா முதலிய நாடுகளின் நிலைக்கு உடன்பாடானதாக இருக்கிறது.

**சி.பி.(எம்) கட்சியின் மேம்படுத்தப்பட்ட திட்டத்திலே புரட்சி, மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் போன்றவை இடம் பெறவில்லை. அதாவது ''புரட்சி'' போய்விட்டது ''மாற்றி வைப்பது''தான் உள்ளது; மக்கள் ஜனநாயக சர்வாதிகார அரசு என்பதற்கு பதிலாக மக்கள் ஜனநாயக அரசு என்றுதான் உள்ளது.**

சி.பி.(எம்) கட்சியின் மேம்படுத்தப்பட்ட திட்டத்திலேயே புரட்சி, மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் போன்றவை இடம் பெறவில்லை. இவற்றுக்கு மாறாக, ''பெருமுதலாளிகளின் தலைமையிலான தற்போதைய அரசு மற்றும் அரசாங்கத்தினிடத்தில் மக்கள் ஜனநாயக அரசை **மாற்றிவைப்பது**'' என்றுதான் உள்ளது. அதாவது **''புரட்சி''** போய்விட்டது **''மாற்றி வைப்பது''**தான் உள்ளது; மக்கள் ஜனநாயக சர்வாதிகார அரசு என்பதற்கு பதிலாக மக்கள் ஜனநாயக அரசுதான் உள்ளது. ''ஒரு உண்மையான சோசலிச சமுதாயத்தை நிறுவது என்பது பாட்டாளி வர்க்க அரசு முறையின் கீழ்தான் சாத்தியம்'' என்று சி.பி.(எம்) கட்சித் திட்டம் கூறுகிறது. அதாவது **''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்''** என்பதற்குப் பதில் **''பாட்டாளி வர்க்க அரசு முறை''** என்று திருத்தப்பட்டுள்ளது. (ஆதாரம்: சி.பி.எம். கட்சித் திட்டம்; பாரா 6,2)

அதுமட்டுமல்ல, மக்கள் ஜனநாயக சர்வாதிகார அரசுக்குப் பதிலாக, ''மக்கள் ஜனநாயகத்தில் பலகட்சி அமைப்புமுறை என்கிற ஒரு புதிய கருத்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது'' என்கிறார், சி.பி.(எம்) கட்சியின் பொதுச் செயலாளர் சுர்ஜித் சிங். அதாவது தற்போதைய நாடாளுமன்ற ஜனநாயகம் நீடிக்கும்; மாநில சுயாட்சி உட்பட சில சீர்திருத்தங்கள் மட்டும் செய்யப்படும் என்று கட்சித் திட்டம் காட்டுகிறது.

மக்கள் ஜனநாயகத்தின் கீழ் பல்வேறு உடைமை முறைகளைக் கொண்ட பொருளாதாரம் பல்முனை கட்டுமானங்களைக் கொண்டிருக்கும்; அதாவது அந்நிய - உள்நாட்டுத் தனியார் மூலதனம், அரசுத் துறை - கூட்டுத்துறை மூலதனம் ஆகியவற்றைக் கொண்ட பலமுனை தொழில்கள் அனுமதிக்கப்படும் என்று சி.பி.(எம்) கட்சித் திட்டம் கூறுகிறது. முன்னேறிய தொழில்நுட்பம் - உற்பத்தித் திறன் அதிகரிப்புக்காக சில தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில் அந்நிய நேரடி முதலீடு அனுமதிக்கப்படும்; ஆனால் அந்நிய மூலதன வரத்து நெறிப்படுத்தப்படும். தொழில், நிதி, வர்த்தகம் மற்றும் சேவைத்துறைகளில் இந்திய, அந்நிய ஏகபோகங்களைத் தகர்க்கும் வகையில் அவற்றின் சொத்துக்களை அரசே கையகப்படுத்தும். பொருளாதாரம் பலமுனை மூலதனக் கட்டுமானங்களைக் கொண்டிருந்தாலும் பொதுத் துறையே மேலாண்மை வகிக்கும் என்று அக்கட்சித் திட்டம் கூறுகிறது. மக்கள் ஜனநாயகத்தில் மட்டுமல்ல; சோசலிசத்திலும் இப்படித்தான் இருக்கும் என்று அக்கட்சியின் 14-வது மாநாடு முடிவு செய்துள்ளது. சோசலிச நாடுகள் எனக் கூறப்படும் சீனா, வியத்நாம் முதலியவைகளும் இந்தப் பொருளாதாரக் கொள்கைகளையே கடைபிடிப்பதாக சி.பி.(எம்) கட்சி கூறுகிறது.

சி.பி.(எம்) கட்சியின் அதிகாரபூர்வ பொருளாதாரக் கொள்கை - திட்டத்தோடு ஒத்துப்போவதால் சீனா முதலிய நாடுகளின் பொருளாதாரக் கொள்கை - திட்டங்களை சோசலிசத் தன்மை உடையன என்று வரவேற்பதை - நியாயப்படுத்துவதை புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் சி.பி.(எம்) கட்சியின் அதிகாரபூர்வ அரசியல் கொள்கை - திட்டத்துக்கு முரணான - எதிரான ''அரசியல் அமைப்பைக் கொண்டிருந்தபோதும்'' சோவியத் ஒன்றியம் மற்றும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சோசலிசத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்த அரசியல் வழிமுறைகளை தொடர்ந்து கடைப்பிடிக்கும்போதும் சீனா முதலிய நாடுகள் சோசலிசப் பாதையில் நீடிப்பதாக சி.பி.(எம்) கட்சி இன்னமும் சாதிப்பது ஏன்?

இந்தியாவில் நேரு - இந்திரா காலத்தில் ஜனநாயக சோசலிசம் என்கிற பெயரில் பின்பற்றிய கலப்புப் பொருளாதாரக் கொள்கை - திட்டத்தையே மக்கள் ஜனநாயகம் மற்றும் சோசலிசப் பொருளாதாரம் என்று சி.பி.(எம்) கட்சி திருத்திக் கொண்டுவிட்டது. முதலாளித்துவ மீட்புக்குப் பிறகு சீனா முதலிய நாடுகளும் அதே கலப்புப் பொருளாதாரத்துக்கு மாறிவிட்டன. இந்தியாவில் தற்போது நிலவிவரும் பலகட்சி நாடாளுமன்ற சட்டமுறை ஜனநாயகத்தையும் மாநில சுயாட்சி சீர்திருத்தங்களோடு மக்கள் ஜனநாயகம் மற்றும் சோசலிச அரசியல் கொள்கை திட்டம் என்று சி.பி.(எம்) கட்சி திருத்திக் கொண்டுவிட்டது. மொத்தத்தில், போலி கம்யூனிஸ்டு கட்சியாகிவிட்டது என்பது அணிகளுக்குப் புரிந்து விடக்கூடாது; அதற்காக ஒரு கம்யூனிச - சோசலிசலேபிள் - முத்திரை தேவை. சீனா முதலிய நாடுகளை சோசலிச நாடுகள் எனக் கூறிக் கொள்வதன்மூலம் அந்தத் தேவையை நிறைவு செய்து கொள்ள முடியும் என்று அக்கட்சி நம்புகிறது.

— தொடரும்

www.padippakam.com

# மதச்சார்பற்ற கூட்டணி

## தோற்றம் : சட்டமன்றத் தேர்தல்–2001
## மறைவு : உள்ளாட்சித் தேர்தல்–2001

**வா**னமேறி வைகுந்தம் போவேன் என்று ஆரவாரம் செய்தவன் பிறகு, கூரை ஏறி கோழி பிடிக்கக்கூடத் திராணியற்றவன் என்று நிருபணமானதைப் போல இடது, வலது போலி கம்யூனிஸ்டுகள் அம்பலப் பட்டு நிற்கிறார்கள். கடந்த சட்டமன்றத் தேர்தலின் போது பாசிச ஜெயா கும்பலுடன் சோனியா காங்கிரசு, மூப்பனார் காங்கிரசு, இராமதாசின் பா.ம.க. மற்றும் பிற உதிரிக் கட்சிகளுடன் தேர்தல் கூட்டணி கட்டி, ''இதோ பாருங்கள், மதச்சார்பற்ற ஜனநாயகக் கூட்டணி'' என்று ஆரவாரம் செய்து போலி கம்யூனிஸ்டுகள் ஓட்டுப் பொறுக்கினார்கள். ஆனால், அந்தக் கூட்டணி ஐந்து மாதங்கள் கூட நீடிக்காமல், உள்ளாட்சித் தேர்தலின்போது உடைந்து, நெல்லிக்காய் மூட்டையை அவிழ்த்துக் கொட்டியது போலாகிவிட்டது. ஆரவாரமாக அறிவித்த மதச்சார்பற்ற கூட்டணி எங்கே என்று கேட்டால், ''அது கல்லறையில் ஓய்வெடுக்கிறது; அதை உயிர்ப்பிக்க ஆவியெழுப்புகிறோம்'' என்கிறார்கள் இப்போலி கம்யூனிஸ்டுகள்.

கடந்த சட்டமன்றத் தேர்தலின் போது பாசிச ஜெயாவிடம் ஓட்டுக்கும் ''சீட்''டுக்கும் பிச்சை கேட்டு போலி கம்யூனிஸ்டுகள் கூட்டணி அமைக்க நாயாய் அலைந்தார்கள். போயஸ் தோட்டத்து ''ராஜ குரு''வாகிய தி.க. வீரமணி இதற்காக தரகு வேலை செய்தார். பின்னர் சோனியா காங்கிரசு, மூப்பனார் காங்கிரசு, பா.ம.க. கட்சிகளுடன் போலி கம்யூனிஸ்டுகளும் கொண்ட அ.தி.மு.க். தலைமையிலான தேர்தல் கூட்டணி உருவாகியது. அதற்கு ''மதச்சார்பற்ற ஜனநாயகக் கூட்டணி'' என்று போலி கம்யூனிஸ்டுகள் ஆரவாரமாகப் பெயர் சூட்டினார்கள். மதவாத சக்திகளை வீழ்த்துவதற்கான தமது கடுமையான முயற்சிகளுக்கு செயல் வடிவும் கிடைத்து விட்டதாக ஆரவாரம் செய்தார்கள். இடது கம்யூனிஸ்ட் கட்சியின் சுர்ஜித்தும், வலது கம்யூனிஸ்ட் கட்சியின் பரதனும் மூப்பனாரும் இராமதாசும் வீரமணியும் ஜெயலலிதாவுடன் கை கோர்த்துக் கொண்டு, ''மதவாத பா.ஜ.க. கூட்டணியை முறியடிப்போம்!'' என்று முழங்கியதைப் பார்த்து மெய் சிலிர்த்துப் போனார்கள். தமிழக சட்டமன்றத் தேர்தலில் ஓட்டுப் பொறுக்கத்தான் இந்தக் கூட்டணி என்றாலும், ''மதவாத பயங்கரத்துக்கு முடிவு கட்டவே இந்த மதச்சார்பற்ற கூட்டணி'' என்று மாய்மாலம் செய்தார்கள்.

ஆனால் இந்தக் கூட்டணி, அரசியல் சந்தர்ப்பவாதிகளின் - பிழைப்புவாதிகளின் கூட்டணிதான் என்று அது உருவான போதே அம்பலமாகிவிட்டது. ஏனெனில் இந்தக் கூட்டணியிலிருந்த கட்சிகளுக்கு ஒத்த கருத்தோ ஒன்றிணைந்த செயல்பாடோ கிடையாது. கொள்கைப்பூர்வ கட்சிகளாகக் கூறிக் கொள்ளும் இடது, வலதுகளே ஒருங்கிணைந்த கொள்கையோடு மதவாத எதிர்ப்புக் கூட்டணியில் செயல்பட்டதும் கிடையாது.

மதவாத பயங்கரம் என்றால், அது நாட்டைச் சூழ்ந்துள்ள — இந்தியா முழுமைக்குமான பேரபாயமாகும். தமிழகத்திலும் புதுவையிலும் மதவாதத்தை எதிர்க்க காங்கிரசோடு கூட்டுச் சேர்ந்த போலி கம்யூனிஸ்டுகள், மேற்கு வங்கத்திலும் கேரளாவிலும் காங்கிரசுக்கு எதிராகக் கச்சை கட்டிக் கொண்டு சட்டமன்றத் தேர்தலில் மோதினார்கள்.

தமிழகத்தில் மதவாத சக்திகளை எதிர்ப்பதாகக் கூறிக் கொண்டு காங்கிரசு அ.தி.மு.க., பா.ம.க.வுடன் கூட்டணி கட்டிய இப்போலிகள், புதுவையில் அதே மதவாத எதிர்ப்பு கூட்டணி கட்சிகளான அ.தி.மு.க.வையும் பா.ம.க.வையும் எதிர்த்து காங்கிரசுடன் கூட்டணி கட்டிக் கொண்டார்கள்.

தமிழகத்தில் மதச் சார்பற்ற கூட்டணியில் போலி கம்யூனிஸ்டுகளோடு முசுலீம் லீக் கட்சிகளும் அங்கம் வகித்தன. அதேநேரத்தில் கேரளாவில் முசுலீம் லீகை வகுப்புவாதக் கட்சி என்று அதற்கு எதிராக போலிகள் கூட்டணிக் கட்டிக் கொண்டனர். இப்படி மாநிலத்துக்கு ஒரு கூட்டணியாக மதச்சார்பற்ற கூட்டணி சந்தர்ப்பவாதத்தில் சந்தி சிரித்தது.

கேரள சட்டமன்றத் தேர்தலில் போலி கம்யூனிஸ்டுகளின் 'இடதுசாரி' ஜனநாயக முன்னணி படுதோல்வியடைந்து காங்கிரசு ஆட்சிக்கு வந்தது. மே. வங்கத்தில் போலிகள் மிகவும் சிரமப்பட்டு மீண்டும் ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டனர். தமிழகத்தில் அ.தி.மு.க. கூட்டணி அறுதிப் பெரும்பான்மை பெற்று ஆட்சியைப் பிடித்தது. இச்சந்தர்ப்பவாதக் கூட்டணியின் வெற்றியை மதவாத சக்திகளை வீழ்த்திய மாபெரும் வெற்றியாக போலிகள் தம்பட்டம் அடித்தனர். தமிழக மக்கள் மதவாத பா.ஜ.க. - தி.மு.க. கூட்டணிக்குப் பாடம் புகட்டிவிட்டதாகப் பெருமையடித்துக்

தேர்தலுக்கு முன்: கைகோர்த்துக் கொண்டு முழங்கும் மதச்சார்பற்ற கூட்டணி தலைவர்கள்.
தேர்தலுக்குப் பின்: அவிழ்த்துக் கொட்டிய நெல்லிக்காய் மூட்டை.





படிப்பகம்

www.padippakam.com

கொண்டனர். இந்து மதவாத பா.ஜ.க.வுக்கு தி.மு.க. கூட்டணியில் 21 தொகுதிகள் ஒதுக்கப்பட்டதில், அது 4 தொகுதிகளில்தான் வெற்றிபெற முடிந்தது என்றும் திருச்சி நாடாளுமன்ற இடைத்தேர்தலில் பா.ஜ.க. தோல்வி அடைந்ததையும் மதவாத எதிர்ப்பு சக்திகளுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகச் சித்தரித்தனர்.

உண்மையில் தி.மு.க.வின் ஐந்தாண்டு கால ஆட்சியின் மீதான அதிருப்தி - வெறுப்பின் காரணமாகவே, மாற்று அரசியல் சக்திகள் அரங்கில் இல்லாத நிலையில், கழிசடை அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றுள்ளதே தவிர, அக்கூட்டணி மதவாத சக்திகளுக்கு எதிராகப் 'போராடி'யதைப் பார்த்து, அதன்மீது நம்பிக்கை வைத்து மக்கள் வாக்களிக்கவில்லை. இதை சாதாரண முட்டாள்கூட நன்கறிவான். ஆனால் போலி கம்யூனிஸ்டுகளோ தேர்தல் வெற்றியையே மதச் சார்பின்மைக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாக ஊதிப் பெருக்கினார்கள். ஆனால், சட்டமன்றத் தேர்தலின்போது தோன்றிய மதச்சார்பற்றக் கூட்டணி உள்ளாட்சித் தேர்தலின்போது சுடுகாட்டுக்கு வந்துவிட்டது.

சட்டமன்றத் தேர்தலின்போது இடது, வலதுகளுக்குத் தலா 5 தொகுதிதான் தரமுடியும் என்று எகத்தாளமாக பாசிச ஜெயா எலும்புகளை வீச, விரக்தியடைந்த இரு கட்சிகளும் சேர்ந்து ஆலோசனை நடத்திக் கொண்டிருக்கும்போதே, சி.பி.எம் தனியாகச் சென்று ஜெயாவிடம் கொடுப்பதை வாங்கிக் கொள்வதாக ஒப்பந்தம் போட்டது. பின்னர் வேறு வழியின்றி வலதுகளும் அதை ஏற்றுக் கொண்டனர். உள்ளாட்சித் தேர்தலின்போது இடதுகளை முந்திக் கொண்டு வலதுகள் போயஸ் தோட்டத்துக்குப் பாய்ந்தோடிச் சென்று 5% இடப்பங்கீடு என்று ஜெயா அறிவித்ததை ஒப்புக் கொண்டு வந்தனர். பின்னர் ஜெயாவிடம் ஓடிய சி.பி.எம், ஒட்டு மொத்தமாக 5% என்றில்லாமல் ஒவ்வொரு மாவட்டத்தில் 5% இடப்பங்கீடு வேண்டும் என்றும் மதுரை மேயர் பதவியை தமது கட்சிக்கு ஒதுக்க வேண்டும் என்றும் பேரம் பேசி முரண்டு பிடித்தது. ஆத்திரமடைந்த ஜெயா, இரு போலி கம்யூனிஸ்டு கட்சிகளுக்கும் ஒதுக்கிய 5 சதவீதத்தை 4 சதவீதமாக குறைத்து அலட்சியப்படுத்தினார். அதையும் வெட்கமின்றி வலதுகள் ஒப்புக் கொண்டனர். அதிர்ச்சியடைந்த இடதுகள் வேறுவழியின்றி தனித்துப் போட்டியிடுவதாக அறிவித்தனர். போலி கம்யூனிஸ்டுகள் உருவாக்கிய மதச்சார்பற்ற கூட்டணியை அவர்களே உடைத்தனர்.

இந்தக் கூத்துகளுக்கு முன்னதாகவே, அரசியல் விபச்சாரியான இராமதாசின் பா.ம.க. மதச்சார்பற்ற கூட்டணியிலிருந்து வெளியேறி, மீண்டும் இந்துவெறி பா.ஜ.க.வுடன் சங்கமமாகி விட்டது. உள்ளாட்சித் தேர்தலில் உரிய அளவு இடப்பங்கீடு கிடைக்கவில்லை என்று மதச்சார்பற்ற கூட்டணியிலிருந்த சோனியா காங்கிரசு தனியாகப் பிரிந்து சென்றது. அதனுடன் ப.சிதம்பரத்தின் காங்கிரசு ஜனநாயகப் பேரவை கூட்டுச் சேர்ந்து, மூன்றாவது அணி அமைத்தது. அந்த அணியுடன் புதிய தமிழகம், புதிய நீதிக் கட்சி, மக்கள் தமிழ் தேசம் ஆகிய் கட்சிகள் வட்டார அளவில் கூட்டணி கட்டிக் கொண்டன.

**ஆரவாரமாக அறிவித்த மதச்சார்பற்ற கூட்டணி எங்கே என்று கேட்டால், "அது கல்லறையில் ஓய்வெடுக்கிறது; அதை உயிர்ப்பிக்க ஆவியெழுப்புகிறோம்" என்கிறார்கள் போலி கம்யூனிஸ்டுகள்**

இப்படி மதச்சார்பற்ற கூட்டணி கலைந்து கந்தலாகி விட்டது போதாதென்று, சி.பி.எம். கட்சி தனித்துப் போட்டியிடுவதாக கூறிக் கொண்டு அதை முற்றாகக் கிழித்தெறிந்தது. தனித்து நின்றாலும் மதச்சார்பற்ற கட்சிகளுக்கே வலுவூட்டுவோம்; நாங்கள் போட்டியிடாத இடங்களில் மதச்சார்பற்ற கட்சிகளுக்கே வாக்களிப்போம். கூட்டணி பிளவுபட்டாலும் அனைவரும் மதவாத பா.ஜ.க. கூட்டணியை வீழ்த்துவதில் ஒன்றுபட்டு நிற்கிறோம் என்று சி.பி.எம். கட்சி தனது சந்தர்ப்பவாத பித்தலாட்டத்துக்கு நியாயம் கற்பித்தது. அதற்காக ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒவ்வொரு வகையான கூட்டணி கட்டியது. கடைந்தெடுத்த சாதிவெறிக் கட்சிகளான மக்கள் தமிழ் தேசம், புதிய நீதிக் கட்சி ஆகியவற்றுடன் வட்டார அளவில் வெட்கமின்றிக் கூட்டணி கட்டிக் கொண்டு ஓட்டுப் பொறுக்கியது.

கோவையில் அ.தி.மு.க.வுக்கு ஆதரவு, மதுரையில் எதிர்ப்பு; சென்னையில் ஆதரவு, நெல்லையில் எதிர்ப்பு என்று அதன் சந்தர்ப்பவாதம் கடைகோடிக்குச் சென்றது. மதச்சார்பற்ற கூட்டணி இருக்கட்டும். குறைந்தபட்சம் இடது - வலது போலி கம்யூனிஸ்டுகளிடையே கூட ஓட்டுப் பொறுக்குவதில் ஒத்த கருத்தோ, ஒற்றுமையோ, கூட்டணியோ இல்லை. அதன் உச்சகட்டமாக, திருப்பூர் நகராட்சியில் இடதுகளும், வலதுகளும் தனித்தனியே வேட்பாளரை நிறுத்தி, பதவிக்காக நாய்ச் சண்டையில் இறங்கியதைக் கண்டு நாடே கை கொட்டிச் சிரித்தது. உள்ளாட்சித் தேர்தலோடு மதச்சார்பற்ற கூட்டணி புதைகுழியில் தள்ளிப் புதைக்கப்பட்டது.

"அ.தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற கூட்டணி" என்று போலிகள் நாமகரணம் சூட்டினாலும், இந்துவெறி பாசிச குண்டர்களின் அண்மைக்கால அட்டூழியங்களை எதிர்த்து இந்தக் கூட்டணி எந்தவொரு போராட்டத்தையும் நடத்தியதில்லை. அதிலும் கூட்டணியின் தலைமைச் சக்தியான அ.தி.மு.க. வாயே திறக்கவில்லை. இடது - வலது போலி கம்யூனிஸ்டுகளும் தி.க. வீரமணியும் மட்டுமே தாஜ் மஹாலில் பா.ஜ.க. இளைஞரணியின் அட்டூழியம், அயோத்தி 'திடீர்' ராமன் கோயிலில் தடையை மீறி இந்து வெறியர்கள் வழிபாடு நடத்திய விவகாரம், இந்துமயமாக்கப்படும் கல்வி முறை முதலானவற்றைக் கண்டித்து அறிக்கை வெளியிடுகின்றனர். பயங்கரவாத "பொடோ" சட்டத்தை எதிர்க்கின்றனர். ஆனால், அ.தி.மு.க.வோ இந்துவெறி இராம. கோபாலனோடு கைகோர்த்துக் கொண்டுள்ளதோடு, வெளிப்படையாகவே பயங்கரவாத "பொடோ" சட்டத்தை ஆதரித்து இந்து வெறியர்களின் பாசிச அடக்குமுறைக்குப் பக்கபலமாக நிற்கிறது. கருச்சிதைவு அடைந்த மதச்சார்பற்ற கூட்டணியின் இலட்சணம் இவ்வளவுதான்.

"என்ன செய்வது தோழரே! இவையெல்லாம் முதலாளித்துவ கட்சிகள்தான். இவற்றிலே முற்போக்கு சக்திகளை ஆதரித்துப் பிற்போக்கு சக்திகளை வீழ்த்த வேண்டாமா?" என்று சித்தாந்த விளக்கமளித்து கழுதை விட்டையில் முன் விட்டை எது, பின்விட்டை எது என்று இப்போலிகள் தேடச் சொல்கிறார்கள்.

பா.ஜ.க.வை வீழ்த்த போலி கம்யூனிஸ்டுகள் உருவாக்கிய மதச்சார்பற்ற கூட்டணியிலிருந்த பல வண்ண காங்கிரசுக் கட்சிகளும் அ.தி.மு.க.வும் தனியார்மய - தாராளமயத்தை ஆதரித்து நிற்கின்றன. எனவே தனியார்மய - தாராளமயத்தை எதிர்க்க இப்போலிகள் தனியாக இன்னுமொரு கூட்டணி கட்டியுள்ளனர். அதுதான் காங்கிரசு - பா.ஜ.க.வுக்கு தேசிய மாற்றாகச் சித்தரிக்கப்படும் "மக்கள் முன்னணி!" முன்னாள் பிரதமர்களான வி.பி.சிங், சந்திரசேகர், தேவகௌடா ஆகியோரையும் உ.பி.யின் சமாஜ்வாதி கட்சித் தலைவர் முலயம்சிங் யாதவையும் தலைவர்களாகக் கொண்ட போலி கம்யூனிஸ்டுகளின் இந்தக் கூட்டணி, அவ்வப்போது அடையாளப் பேரணிகளை நடத்தியதற்கு மேல் அடியெடுத்து வைக்கவில்லை. தனியார்மய - தாராளமயத் தாக்குதலால் வாழ்விழந்து நிற்கும் மக்களின் அதிருப்தியை அறுவடை செய்து மீண்டும் ஆட்சியைப் பிடிக்க முயற்சிக்கும் "மக்கள் முன்னணி" தலைவர்கள் ஏற்கனவே இதே தனியார்மய - தாராளமயக் கொள்கைகளை தங்களது ஆட்சிக் காலத்தில் செயல்படுத்தியவர்கள்தான்!

ஒருபுறம் மதச்சார்பற்ற கூட்டணி

என்றும்; பா.ஜ.க.வை வீழ்த்துவோம் என்றும் வீரவசனம் பேசும் போலி கம்யூனிஸ்டுகள் தனியார்மயம் - தாராளமயத்துக்கு எதிராக மும்பையில் பா.ஜ.க. - சிவசேனா ஆகிய இந்துவெறி கட்சிகளுடன் தொழிற்சங்க அளவில் கூட்டணி கட்டிக் கொண்டு போராட்டத்தை நடத்தியுள்ளனர். மதவெறி பயங்கரவாதத்தை எதிர்க்கும் போலி கம்யூனிஸ்டுகளின் யோக்கியதை இதுதான்!

இவையனைத்தும் காட்டுவதென்ன? போலி கம்யூனிஸ்டுகள் ஓட்டுப் பொறுக்குவதற்காகவே பலதரப்பட்ட சந்தர்ப்பவாதக் கூட்டணிகளைக் கட்டுகிறார்கள். முற்போக்கு முலாம் பூசப்பட்ட இந்தக் கூட்டணிகள் அடுத்த தேர்தலுக்குள்ளாகவே கலைந்து காணாமல் போய் விடுகின்றன. இத்தகைய ஓட்டுச் சீட்டு அரசியல் மூலம் இந்துமதவெறி பாசிச அபாயத்தை ஒருக்காலும் தகர்த்தெறிய முடியாது. அதிகார வர்க்கம் - போலீசு - நீதித்துறை அடங்கிய அரசு எந்திரமே இந்துவெறி போதையில் ஆட்டம் போடும்போது, இந்துவெறி பாசிச சக்திகளைத் தேர்தல் வெற்றியின் மூலமோ, சட்டத்தின் மூலமோ வீழ்த்திடவும் முடியாது.

**பா.ஜ.க.வை வீழ்த்துவோம் என்றும் வீரவசனம் பேசும் போலி கம்யூனிஸ்டுகள் தனியார்மயம் - தாராளமயத்துக்கு எதிராக மும்பையில் பா.ஜ.க. - சிவசேனா ஆகிய இந்துவெறி கட்சிகளுடன் தொழிற்சங்க அளவில் கூட்டணி கட்டிக் கொண்டு போராட்டத்தை நடத்தியுள்ளனர்.**

மதச்சார்பற்ற புரட்சிகர - ஜனநாயக சக்திகள் இந்துவெறி பாசிஸ்டுகளை எதிர்த்து தேர்தல் அரசியலுக்கு வெளியே வீதிகளில் திரண்டெழுந்து போராடுவதன் மூலம் மட்டுமே உண்மையான மதச்சார்பற்ற போராட்டக் கூட்டணி உருவாக முடியும்; அது ஒன்றுதான் இந்துவெறி பாசிச சக்திகளை வேரடி மண்ணோடு வீழ்த்தும். இந்த உண்மைகளை மீண்டுமொருமுறை உணர்த்திவிட்டு, போலி கம்யூனிஸ்டுகள் உருவாக்கிய மதச்சார்பற்ற கூட்டணி கல்லறையின் கீழே ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறது.

● ஆசாத்

## 17-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் பு.ஜ.விற்கு புரட்சிகர வாழ்த்துக்கள்!

*வாரா வாரம் வாரக் குப்பை*
*மாதா மாதம் மாதக்குப்பை - என*
*முதலாளித்துவத்தின் பத்திரிகைக் கழிவுகளால்*
*சமூகமே நாறிக் கொண்டிருக்கையில்*
*சமூகத்தை சுத்தப்படுத்த*
*மார்க்சிய - லெனினிய ஆயுதமேந்தி*
*சமரசமின்றி போராடி வரும்*
*பு.ஜ. விற்கு புரட்சிகர வாழ்த்துக்கள்!*

*தன் குழந்தைக்கு தாய் ஊட்டும்*
*தாய்ப் பாலுக்கும்*
*சமூக வளர்ச்சிக்கான உனது*
*கட்டுரைகளுக்கும் எந்த வேறுபாட்டையும்*
*காணவில்லை நாங்கள்!*
*ஆளும் வர்க்க பிரச்சார இருளைக் கிழித்து*
*பொருள்முதல்வாத விளக்கேற்றி*
*வழிகாட்டும் பு.ஜ.வே*
*தொடரட்டும் உன் புரட்சிப் பணி!*

*பாதைகள் நீளமென்று*
*எங்கள் பார்வையைத் தூரமாக்கி*
*பகலவனாய்க் காட்சி தரும்*
*பு.ஜ.வே வாழ்க உன் புரட்சிப் பணி!*

*உனது உறுதிகுலையா கம்பீரத்திற்கும்*
*சமரசமில்லா போராட்டத்திற்கும்*
*ஈடு இணை ஏதுமில்லை!*

*உனது வழியில் அயராது உழைக்க*
*உன் பிறந்தநாளில் உறுதி ஏற்கிறோம்!*

தோழமையுடன்
புதிய ஜனநாயகம் வாசகர்கள்
திருச்சி.

## கருத்துரிமையின் மீது தாக்குதல் வி.வி.மு. தோழர் கைது

ஆப்கன் மீதான அமெரிக்காவின் போரைக் கண்டித்து வேதாரண்யம் வட்டம் ஆய்க்காரன்புலம் கிராமத்தில் விவசாயிகள் விடுதலை முன்னணி பிரச்சாரம் செய்து வருகிறது. பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக அமெரிக்காவின் பயங்கரவாதத்தை அம்பலப்படுத்தும் விளம்பரத் தட்டியை வி.வி.மு.வினர் கட்டியிருந்தனர். அமெரிக்காவின் அடாவடித்தனத்தைக் கண்டித்ததை, ஏதோ தங்களைக் கண்டித்ததைப் போல ஆத்திரமுற்ற வாய்மேடு போலீசு, தட்டிகளைக் கைப்பற்றியதோடு, கடந்த 10.10.2001 அன்று இரவு மூன்று மணிக்கு வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த தோழர். கிருஷ்ணமூர்த்தியை விசாரணை என்ற பெயரில் கைது செய்தது.

அதோடு, உண்மைக்குப் புறம்பாக ஆயக்காரன்புலம் கடைத்தெருவில் கலவரத்தைத் தூண்டும் விதமாக தோழர் பிரச்சாரம் செய்து கொண்டிருந்ததாகவும், அதனால் அங்கேயே கைது செய்ததாகவும் சம்பவத்தைத் திரித்து பொய் குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளது போலீசு. இதன்படி இந்திய அரசியல் சட்டப் பிரிவு 153 ஏ/1-ன் கீழ் பிணையில் வரமுடியாத வழக்கையும் பதிவு செய்து தோழரைச் சிறையில் அடைத்துள்ளது.

போலீசின் இந்த அராஜகத்தைக் கண்டித்து உடனடியாக இப்பகுதிகளில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. திருச்சி சிறையிலிருந்த தோழர் கிருஷ்ணமூர்த்தியை வெளியில் கொண்டுவர உடனடியாக முயற்சி எடுக்கப்பட்ட போதும், திருத்துறைபூண்டி நீதிமன்றம் வேண்டுமென்றே இழுத்தடித்து எட்டு நாட்களுக்குப் பின்னரே நிபந்தனையுடன் கூடிய பிணை வழங்கியுள்ளது.

பேச்சுரிமை, கருத்துச் சொல்லும் உரிமை போன்ற அடிப்படை உரிமைகளைக் கூட இரும்புக்கரம் கொண்டு அடக்கி வரும் போலீசுக்கு, 'பொடோ' போன்ற பயங்கர கருப்புச் சட்டங்களின் மூலம் கட்டற்ற அதிகாரத்தை வழங்கினால் என்ன நடக்குமென்பதை சொல்லவும் வேண்டுமா?

— வி.வி.மு. வேதாரண்யம்.

## வாங்கி விட்டீர்களா?

"எது பயங்கரவாதம்?" என்பதை வரையறுக்க முடியாமல் ஐ.நா. சபை தடுமாறுகிறதாம். அந்தத் தடுமாற்றம் நமக்குத் தேவையில்லை. "பயங்கரவாதம் என்றால் அமெரிக்கா, அமெரிக்கா என்றால் பயங்கரவாதம்" என்பதை வரலாற்று ஆதாரங்களுடன் அம்பலப்படுத்துகிறது, புதிய கலாச்சாரத்தின் சிறப்பிதழ் "அமெரிக்காவின் பயங்கரவாதம்."

**விலை ரூ. 10.00**

*கிடைக்குமிடம்:*
இரா. சீனிவாசன், 18, முல்லைநகர் வணிக வளாகம், 2-வது நிழற்சாலை,
அசோக்நகர், சென்னை - 600 083.

*இதழ் வேண்டுவோர் அஞ்சல் கட்டணம் ரூ. 2/- சேர்த்து அனுப்ப வேண்டுகிறோம்.*

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## குண்டுகளை விட, பூங்கொத்து பயங்கரமானதாம்!

பிரிட்டிஷ் இளவரசர் சார்லஸ் சமீபத்தில் லாட்வியா நாட்டில் சுற்றுப்பயணம் செய்தபொழுது, அலினா லெபட்யெவா என்ற சிறுமி ஒரு சிவப்பு பூங்கொத்தைக் கொண்டு, சார்லஸின் இடது கன்னத்தில் மூன்று முறை அறைந்தார். "தேசிய போல்ஷ்விக் இயக்கம்" என்ற அமைப்பைச் சேர்ந்த அலினா, "சார்லஸின் மீது எனக்குத் தனிப்பட்ட வெறுப்பு கிடையாது; ஆப்கான் மீது ஏவிவிடப்பட்டுள்ள போரையும், லாட்வியா "நேடோ" கூட்டணியில் சேர முயலுவதையும் எதிர்த்துதான் சார்லஸைத் தாக்கியதாக"க் கைது செய்யப்பட்டபொழுது தெரிவித்தார். தற்சமயம் அலினா நிபந்தனை பிணையில் வெளியே வந்துவிட்டாலும், வழக்கை நடத்தி அலினாவிற்கு இருபது ஆண்டுகால சிறைத் தண்டனை விதிக்கப் போவதாக இச்சிறுமியை மிரட்டி வருகிறது லாட்வியா அரசு. பூங்கொத்தால் அறைந்ததற்கே இருபது ஆண்டு சிறை தண்டனை விதிக்கலாம் என்றால் குண்டுகளை வீசி ஆப்கானை மயானமாக்கி வரும் ஏகாதிபத்தியவாதிகளுக்கு மரண தண்டனையல்லவா கொடுக்க வேண்டும்!

## தீண்டாமையின் கோரத் தாண்டவம்

கடந்த ஒரு ஆண்டில் மட்டும் நாடெங்கிலும் தாழ்த்தப்பட்டோர் மீது 23,742 வன்முறை தாக்குதல்களும், பழங்குடியின மக்களின் மீது 3,958 வன்முறை தாக்குதல்களும் நடந்திருப்பதாக தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைவாழ் மக்களுக்கான தேசிய கமிசன் கூறியிருக்கிறது. தாழ்த்தப்பட்டோர் மீது ஏவிவிடப்பட்ட தாக்குதல்களில், 1,034 வழக்குகள் வன்புணர்ச்சிக் குற்றங்கள் தொடர்பானவை; தாழ்த்தப்பட்டோர் படுகொலை செய்யப்பட்ட வழக்குகள் 486; தாழ்த்தப்பட்டோரின் வீடுகளும், உடைமைகளும் தீ வைத்துக் கொளுத்தப்பட்ட வழக்குகள் 260; மலைவாழ் மக்களின் மீது ஏவிவிடப்பட்ட தாக்குதல்களில், 391 வழக்குகள் வன்புணர்ச்சி குற்றத்திற்காகவும், 53 வழக்குகள் படுகொலைக்காகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன. பதிவானவழக்குகளின் எண்ணிக்கையே தீண்டாமைக் கொடுமை கேள்வி கேட்பாரின்றித் தாண்டவமாடுவதை அம்பலப்படுத்தும் பொழுது, இந்துமதவெறி அரசோ, "தீண்டாமையா, அப்படியெல்லாம் எங்கள் நாட்டில் கிடையாது" என உலக அரங்கில் பசப்பிக் கொண்டு திரிகிறது.

## கலகம் பிறந்தால்தான் நியாயம் கிடைக்கும்

ஆந்திர மாநிலத்தின் வாராங்கல், கரீம் நகர் மாவட்டங்களைச் சேர்ந்த பருத்தி விவசாயிகள், அரசு கொடுத்த வாக்குறுதியை நம்பி, 15,000 குவிண்டால் பருத்தியை விற்பதற்காக ஜிம்மி குண்டா ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு வந்தனர். ஆனால், அதிகார வர்க்கமோ ஏற்கனவே அறிவித்தபடி நாணயமாக நடந்து கொள்ளாமல், ஒரு குவிண்டால் பருத்தியை ரூ. 1841/-க்குப் பதிலாக ரூ. 1826-க்கு தான் வாங்க முடியும் என்றும், 2000 குவிண்டாலுக்குப் பதிலாக 750 குவிண்டால்தான் கொள்முதல் செய்ய முடியும் என்றும் திடீரென அறிவித்தது. இதன் மூலம் மண்டி வியாபாரிகள் விவசாயிகளிடமிருந்த பருத்தியை அடிமாட்டு விலைக்குக் கொள்முதல் செய்து கொள்ள அரசு சதித்தனமாக உதவ முயன்றது. இதனால் ஆத்திரமடைந்த பருத்தி விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் கதவைப் பூட்டி விட்டு கலகத்தில் இறங்கினர். அதிகார வர்க்கத்தோடு விவசாயிகள் நடத்திய மோதலில் மூன்று இலட்சம் ரூபாய் மதிப்புள்ள அரசு சொத்துக்கள் நாசமாயின. இதன்பின், விவசாயிகளிடம் சமரசம் பேசிய அதிகார வர்க்கம் ஒரு குவிண்டால் பருத்தியை ரூ.1850/-க்கு அரசும், தனியார் முதலாளிகளும் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்தது.


## முட்டைக்கு முடி சிரைக்கும் அதிரடிப் படை

வீரப்பனைத் தேடோதேடென்று தேடிக் கொண்டிருக்கும் சிறப்பு அதிரடிப்படை நவம்பர் மாதத் துவக்கத்தில் சின்னதம்பி, கீழாத்தி என்ற இரு பழங்குடியினரைக் கைது செய்தது. "இவர்கள் இருவரும் தேடப்படும் குற்றவாளிகள்; தலைமறைவாக இருந்த இவர்களை இப்பொழுது கைது செய்து விட்டதாக" சிறப்பு அதிரடிப்படை மார்தட்டி வருகிறது. உண்மையில் இவர்கள் இருவரும் வீரப்பனின் கூட்டாளிகள் என்ற பொய்யான குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு, கடந்த எட்டு ஆண்டுகளாக மைசூர் சிறையில் தடா கைதிகளாகச்சிறை வைக்கப்பட்டிருந்தனர். இரண்டு மாதங்களுக்கு முன்புதான், நிரபராதிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். வீரப்பனைப் பிடிக்க முடியாத தனது கையாலாகாத்தனத்தை மூடி மறைப்பதற்காகவே, சிறப்பு அதிரடிப்படை இந்த அப்பாவிகளை மீண்டும் கைது செய்து, தனது சூரத்தனத்தைக் காட்டிக் கொண்டுள்ளது.

## இராம ராஜ்ஜியத்தின் இலட்சணம்

1995-ஆம் ஆண்டு எட்டு கோடியாக இருந்த மும்பய் மாநகராட்சியின் பற்றாக்குறை 2000-ஆம் ஆண்டில் 645 கோடி ரூபாயாக உயர்ந்து விட்டது. ஐந்தே ஆண்டுகளுக்குள் பற்றாக்குறை என்பது மடங்கு வீங்கிப் போனதற்குக் காரணம் கேட்டால், "ஊழியர்களின் சம்பளம், மானியம்" எனப் புலம்புவதும், புளுகுவதும்தான் அரசின் வாடிக்கையாக இருந்தது. ஆனால், இந்தப் பற்றாக்குறை அதிகரிப்பு பற்றி விசாரணை நடத்திய எஸ்.எஸ். தினாய்கர் கமிட்டி, மும்பய் மாநகராட்சி உறுப்பினர்கள் - அதிகாரிகள் - காண்டிராக்டர்களின் கூட்டணி அடித்த கொள்ளையும், ஊழலும்தான்காரணம் என உண்மையைப் புட்டு வைத்துள்ளது. மாநகராட்சியின் பொது நலத் திட்டச் செலவுகளை ஒன்றுக்கு நூறாக ஊதிப் பெருக்கியே, இந்தக் கூட்டணி கொள்ளையடித்திருக்கிறது. இந்தக் கொள்ளை நடந்த ஐந்தாண்டுகளும் மகாராஷ்டிரா மாநிலத்தையும், மும்பய் மாநகராட்சியையும் ஆட்சி செய்தவர்கள் இராமரின் வாரிசுகளான இந்துமதவெறியர்கள் தான்!

ஆப்கான் மீதான போரைக் கண்டித்து பிரிட்டிஷ் இளவரசர் சார்லஸைப் பூங்கொத்தால் அறைகிறார் லாட்வியா நாட்டுச் சிறுமி அலினா.



Published and Owned by R. SHANMUGA RAJ, 25, Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, IInd Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM
(TAMIL FORTNIGHTLY)

REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS
FOR INDIA UNDER NO. 42648/85

Regd. No. TN/Chief.PMG-544/2001



# இதுதான் இன்றைய இந்தியா

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவும், அம்மாநில ஆளுநர் அரங்கராசனும் "இ-சேவா" என்ற திட்டத்தை ஹைதராபாத் நகரில் தொடங்கி வைப்பதுதான் இந்தப் படம். அது என்ன, இ-சேவா? உங்களுக்கு அரசுப் பேருந்தில் முன் பதிவு செய்ய வேண்டுமா? அதற்காக, நீங்கள் பேருந்து நிலையத்துக்குப் போய் வரிசையில் கால் கடுக்க நின்று கொண்டிருக்கத் தேவையில்லை. உங்கள் வீட்டில் கணிப் பொறியும், இணையத் தள இணைப்பும் இருந்தால் வீட்டில் இருந்தபடியே முன் பதிவை முடித்து விடலாம். சொந்தமாகக் கணிப்பொறி இல்லாதவர்கள் ஆந்திர அரசு ஹைதராபாத் நகரில் "எஸ்.டி.டி. பூத்"களைப் போலத் திறந்து நடத்தி வரும் இ-சேவா மையங்களுக்குச் சென்று முன்பதிவை பெறலாம்.

தொலைபேசி, மின்சாரம், குடிநீருக்குக் கட்டணம் செலுத்துதல்; சொத்துவரி கட்டுதல்; பிறப்பு - இறப்பு சான்றிதழ் பெறுதல்... இப்படி பல விசயங்களை, அரசாங்க அலுவலகங்களுக்குச் செல்லாமலேயே முடிப்பதுதான் இ-சேவா.

"அரசு அலுவலகங்களுக்குப் போய் அதிகாரிகளைத் தொங்கிக் கொண்டிருக்கத் தேவையில்லை; இலஞ்சம் கொடுக்க வேண்டிய அவசியமே இல்லை; நேரம் மிச்சம்" என சந்திரபாபு இ-சேவையின் பெருமைகளைப் பட்டு வைக்கிறார். பத்திரிகைகள், அரசாங்கத்தின் மக்கள் சேவையில் ஒரு மைல்கல் என இதைப் புகழ்கின்றன. மாநில ஆளுநர், "சந்தைப் பொருளாதாரத்தில் அரசாங்கம் மக்கள் சேவையைக் கை கழுவி விடும் என பயமுறுத்துகிறார்கள்.



இதோ, அது வேறொரு வடிவத்தில் தொடருகிறது" எனத் தாராளமயத்தை எதிர்ப்பவர்களை நெத்தியடியாக அடிக்கிறார். இதைப் பார்க்கும், கேட்கும் தமிழக மக்கள், நமது அண்டை மாநிலம் ஆந்திராவா இல்லை அமெரிக்காவா என்று கூட வியப்படையலாம்!

இந்தப் படத்தில் இருக்கும் அனுமந்தப்பா, ஆந்திராவின் அனந்தபூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி, கைதேர்ந்த நாட்டு மருத்துவர். சந்திரபாபு கொண்டு வந்த சீர்திருத்தத்தால் விவசாயிகள் பாம்பு கடிக்கு ஆளாகி, தினமும் மரணத்தோடு போராட வேண்டியதாகி விட்டது என்கிறார் இவர். பொருளாதார சீர்திருத்தத்துக்கும் பாம்பு கடிக்கும் எப்படி சம்பந்தம் இருக்க முடியும்? நாட்டுப்புறத்தான், ஏதோ உளறுகிறான் என்று கூட நீங்கள் நினைக்கலாம்.

அனந்தப்பூர் நகரைச் சேர்ந்த புகழ் பெற்ற ஆங்கில மருத்துவர் ஜெயானந்தும் இதைத்தான் கூறுகிறார். "விவசாயிகளைப் பாம்பு தீண்டுவது புதியதல்ல என்றாலும், கடந்த 15 மாதங்களில் இது அளவுக்கு அதிகமாகி விட்டது" என்கிறார் ஜெயானந்த். விவசாயிகளின் உயிருக்கே உலை வைக்கும் அளவிற்கு ஆந்திராவில் அப்படி என்ன மாற்றம் நடந்து விட்டது?

கடந்த பதினைந்து மாதங்களுக்கு முன்பாக சந்திரபாபு ஆந்திராவின் மின் வாரியத்தைச் சீரமைத்து, இனி விவசாயிகளுக்கு அதிகாலை மூன்று மணிக்குதான் மின்சாரம் வழங்கப்படும் என உத்தரவிட்டார். அந்தப் பின்னிரவு நேரத்தில், கும்மிருட்டில் எழுந்து தண்ணீர் பாய்ச்சுவதற்காக வயலுக்குச் செல்லும் விவசாயிகள்தான் பாம்பு கடிக்கு இரையாகிறார்கள்.

பாம்பு கடித்து உயிருக்குப் போராடும் விவசாயிகளை அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றால், "மருந்தில்லை" எனக் கையை விரிக்கிறார்கள். தனியார் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றால், "நாற்பதாயிரம் ரூபாயை எடுத்து வை" எனப் பேரம் நடத்துகிறார்கள். இப்படியாக, மின்சாரம், சுகாதாரத் துறைகளில் சந்திரபாபு கொண்டு வந்த சீர்திருத்தங்கள், விவசாயிகளின் தலையில் எமனாக விடிந்து விட்டது.

அதனால்தான், "கிராமம், விவசாயம் - இது பற்றியெல்லாம் அறிவே இல்லாமல் திட்டம் போடுகிறார்கள்" என விவசாயிகள் குமுறுகிறார்கள். அதிகாரத்தில் இருக்கும் மெத்த படித்த மேதாவிகளுக்கே விவசாயிகளைப் பற்றிய அறிவு இல்லாதபொழுது, பின்னிரவு நேரத்தில், தனது இரையைத் தேடி அலையும் ஐந்தறிவு பாம்பிற்கா விவசாயிகளின் அவலம் தெரிந்திருக்கும்?

உயிருக்கு உலை வைக்கும் சீர்திருத்தத்தை, மேனாமினுக்கி சேவைகளால் மூடி மறைத்துவிட முயலுகிறது, ஆளும் கும்பல். இந்த மோசடியை இன்னும் எத்தனை நாள் நாம் பொறுத்துக் கொள்வது?

படிப்பகம்